
# சைவ நெறி

# ௭



கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# சைவ நெறி

## 9 ஆம் ஆண்டு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

| | |
|---|---|
| முதலாம் பதிப்பு | 1978 |
| இரண்டாம் பதிப்பு (திருத்தியது) | 1981 |
| மூன்றாம் பதிப்பு (திருத்தியது) | 1985 |
| நான்காம் பதிப்பு | 1986 |
| ஐந்தாம் பதிப்பு | 1987 |
| ஆறாம் பதிப்பு | 1988 |
| ஏழாம் பதிப்பு | 1989 |
| எட்டாம் பதிப்பு | 1990 |
| ஒன்பதாம் பதிப்பு | 1991 |
| பத்தாம் பதிப்பு | 1993 |
| பதினொராம் பதிப்பு | 1994 |
| பன்னிரண்டாம் பதிப்பு | 1995 |

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே

இந்நூல் கொழும்பு—14, 213, கிராண்ட்பாஸ் வீதியிலுள்ள ஸ்ரார் லைன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

95/ஒд/104 (40,000)

நல்லறம் அறிவான்ற தலைமுறை
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம்!

உங்கள் பின்வரும்
உடன்பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப்பேணல்
உங்கள் கடனெனக் கொள்வீர்!

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றுடுவீர்!

றிச்சட் பதிறண
கல்வி, உயர்கல்வி அமைச்சர்.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதோர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ நமோ தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

## நூன்முகம்

ஒன்பதாம் ஆண்டுக்கென இந்நூல் மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனை மறுபதிப்புச் செய்வதற்குப் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைத்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

எம். கே. ஜே. ஏ. அல்விஸ்
கல்வி வெளியீட்டு ஆணையாளரும் பிரதிக்
கல்விப் பணிப்பாளர் நாயகமும்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுறுபாய, பத்தரமுல்லை.

## முன்னுரை

மாணவர் உள்ளங்களிலே தெய்வ நம்பிக்கை, உயர்ந்த இலட்சியங்கள், பாரம்பரியத்திற் பற்று ஆகியவற்றை வளர்த்தல், நீதியும் நேர்மையும் நிறைந்ததொரு சமுதாயத்தை உருவாக்கல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, சமய பாடத்தை மேலும் அர்த்தமுள்ளதாகவும், வாழ்க்கையோடு இணைந்ததாகவும் அதே சமயம் மாணவர் உளங்கொளத்தக்கதாகவும் அமையும்படி செய்வதற்கான ஒழுங்குகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இந்த நோக்கங்களுக்கியைய, திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப, பாலர் வகுப்பு முதல் 'சைவ நெறி' பாட நூல்கள் எழுதப்பட்டுள்ளன. இப்பாட நூல்களுள் இது ஒன்பதாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு உரியது.

சைவ சமய ஈடுபாடு, சமய ஞானம், ஆசிரிய அனுபவம் ஆகியன கைவரப்பெற்ற எழுத்தாளர்களால், கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைச் சபையின் நெறிப்படுத்தலுக்கு இசைய, இப்பாட நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைச் சபைக்கும், இந்த நூல்களை உருவாக்க உதவிய எழுத்தாளர்களுக்கும் ஓவியர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

எச். ஆர். சந்திரசேகர,
ஆணையாளர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
புதிய செயலகம்,
கொழும்பு 10,
1985.05.31.

# கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைக் குழு
## 1978 — 1991

1. இளைப்பாறிய நீதியரசர்,
   திரு. வீ. சிவசுப்பிரமணியம் (தலைவர்)
2. சுவாமி பிரேமாத்மானந்தஜீ
3. கேணல் இரா. சபாநாயகம்
4. பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்
5. திரு. கி. லக்ஷ்மண ஐயர்
6. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
7. திரு. ப. சந்திரசேகரம்
8. கலாநிதி வெ. இராமகிருஷ்ணன்
9. திரு. ந. சண்முகரத்தினம்
10. திரு. கு. பாலசிங்கம்
11. திரு. வே. முருகேசு
12. திரு. டி. எம். சுவாமிநாதன்
13. பேராசிரியர் த. நடராசா
14. பேராசிரியர் ஆ. சதாசிவம்
15. திரு. சி. சிற்றம்பலம்
16. திரு. சி. உ. சோமசேகரம்
17. திருமதி பராசக்தி சுந்தரலிங்கம்
18. திரு. செ. வேலாயுதபிள்ளை
19. திருமதி பாலம் லக்ஷ்மணன்
20. திரு. பெ. கணநாதபிள்ளை (இணைப்புச் செயலாளர்).

நூல் வெளியீட்டு உப குழு :

திரு. ந. சண்முகரத்தினம்
திரு. செ. வேலாயுதபிள்ளை
திருமதி பாலம் லக்ஷ்மணன்
திரு. பெ. கணநாதபிள்ளை (இணைப்புச் செயலாளர்)

எழுத்தாளர் குழு :

திரு. ந. சண்முகரத்தினம்
திருமதி. பாலம் லக்ஷ்மணன்
திரு. வை. கா. சிவப்பிரகாசம்
திருமதி இராஜேஸ்வரி பரமேஸ்வரன்

ஓவியர் குழு :

திரு. ஜனார்த்தனன் இரத்தினசபாபதி
திரு. மா. செல்வகுருநாதன்
திரு. எட்கா பெரேரா

பிரதம பதிப்பாசிரியர் :

திரு. ஐ. தம்பிமுத்து (இ. க. நி. சே. தரம் I)

## 1985 ஆம் ஆண்டுத் திருத்தப் பதிப்புக்கான ஆலோசனைக் குழு

1. பேராசிரியர் ஆ. சதாசிவம்
2. கலாநிதி ஆ. கந்தையா
3. திரு. செ. வேலாயுதபிள்ளை
4. திரு. பெ. கணநாதபிள்ளை
5. திருமதி ச. இலிங்கம்
6. திருமதி ப. சோமகாந்தன்
7. திருமதி சொர்ணவதி மாசிலாமணி (செயலாளர்)
8. திரு. வே. வல்லிபுரம் (தலைவர்)

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | எமது சமயம் | 1 |
| 2. | தோத்திரங்கள் | 7 |
| 3. | சாத்திரங்கள் | 13 |
| 4. | சமய தத்துவங்கள் | 17 |
| 5. | பதி | 20 |
| 6. | பசு | 23 |
| 7. | பாசம் | 26 |
| 8. | நடராசரும் தட்சிணாமூர்த்தியும் | 31 |
| 9. | இந்து இல்லம் | 36 |
| 10. | சைவ நாற்பாதங்கள் | 41 |
| 11. | சத்தி வழிபாடு | 46 |
| 12. | நந்தியை விலகச் செய்த நந்தனார் | 53 |
| 13. | நட்டமாடும் நம்பனுக்கொரு மீன் | 59 |
| 14. | அப்பாலும் அடிச்சார்ந்தார் | 63 |
| 15. | சம்பந்தர் தேவராம் | 72 |
| 16. | அப்பர் தேவாரம் | 75 |
| 17. | சுந்தரர் தேவராம் | 79 |
| 18. | திருவாசகம் | 82 |
| 19. | திருவிசைப்பா | 86 |
| 20. | திருப்பல்லாண்டு | 88 |
| 21. | திருமந்திரம் | 90 |
| 22. | அற்புதத் திருவந்தாதி | 94 |
| 23. | மெய்யடியார்களின் மாண்பு | 97 |
| 24. | உபநிடதச் சிந்தனை | 99 |
| 25. | சத்தியமே வெல்லும் | 105 |
| 26. | திருக்குறள் | 110 |
| 27. | நாவலர் வளர்த்த நன்னெறி | 116 |
| 28. | இறைபணி நிற்றல் | 122 |
| 29. | சக்தி வழிபாட்டுப் பாடல்கள் | 128 |


## அனுபந்தம்


(அ) இந்து சமயப் பழக்க வழக்கங்கள்

(ஆ) பௌத்த சமயப் பழக்க வழக்கங்கள்

(இ) இஸ்லாம் சமயப் பழக்க வழக்கங்கள்

(ஈ) கிறிஸ்தவ சமயப் பழக்க வழக்கங்கள்.

உ

சிவமயம்

## கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

## குறிக்கோள்கள்

1. அன்றாட வாழ்க்கையில் மாணவர் கடைப்பிடிக்க வேண்டிய சமயாசாரங்களையும் சமயப் பழக்க வழக்கங்களையும் உணர்த்துதல்.

2. சமய அடிப்படைத் தத்துவங்களைப் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் போதித்தல்.

3. அனுபூதிமான்களின் தோத்திரப் பாடல்களைப் பண்ணோடு பயிற்றுவதன் மூலம் சமயப் பற்றையும் பத்தியையும் மாணவர் மனத்திற் பதித்தல்.

4. தமது சமய பாரம்பரியச் சிறப்பை மாணவர் உணரச் செய்தல்.

5. கடமையுணர்ச்சி, நேர்மை, தியாகம், பரோபகாரம் ஆகியன போன்ற நற்குணங்களும் நல்லொழுக்கமும் உடைய நன்மக்களை உருவாக்குதல்.

Nanthini
Uvackaranthurajah

# 1. எமது சமயம்

## (அ) சிந்துவெளி நாகரிகம்

சைவ சமயிகளாகிய நாம் எல்லாம் வல்ல பரம்பொருளைச் சிவன் என்று வழிபடுகிறோம். அப்பரம்பொருளின் அளவிறந்த ஆற்றலைச் சக்தி, உமை என்று போற்றுகிறோம். சிவனையும் சக்தியையும் அப்பனாகவும் அம்மையாகவும் வழிபட்டு வருகிறோம். 'தெய்வம் ஒன்றே' என்கிறது எமது சமயம். ஆனால், அடியார்கள் அத்தெய்வத்திற்குத் தரும் நாமங்களும் வடிவங்களும் பல. சிவனைக் குறிக்கப் பசுபதி, உருத்திரன், நடராசன் எனப் பல பெயர்கள் வழங்குகின்றன. அவ்வாறே சக்தியை அம்பிகை, துர்க்கை, காளி எனப் பலவாறு அழைக்கிறோம். இன்னும் இறைவனை உருவமற்ற ஞானப் பிழம்பாய், சிவமாய்ச் சிந்தையில் இருத்துவதும் அருவுருவமாம் சிவலிங்க வடிவத்தில் வழிபடுவதும் எமது சமய மரபு.

இவ்வாறு சைவ மக்கள் தத்தம் பக்குவ நிலைக்கு ஏற்றவாறு இறைவனைத் தமது மனக் கண்ணிற் கண்டு வழிபடுகின்றனர். அவர்களது இந்த வழிபாட்டை ஏற்று அருள்புரிகிறான் இறைவன். இந்த வழிபாட்டு முறைகள் இந்து சமயத்தில் எவ்வாறு ஆரம்பமாயின என்பதையும் எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்பதையும் இப்பாடத்திற் காண்போம்.

சைவ சமயம் இந்து மதத்தின் ஒரு பிரிவு. 'இந்து' என்ற சொல் எவ்வாறு உருவாகியது? இந்தியாவின் வடமேற்கிலே 'சிந்து' எனும் நதியுளது. பாரசீகர் மொழிமுதற் சகரத்தை ஒலிக்க இடர்ப்பட்டமையால் 'சிந்து' என்ற சொல்லை 'ஹிந்து' என்று உச்சரித்தனர். பாரசீகத்திலிருந்து இச்சொல் கிரேக்க தேசத்துக்குப் போக அங்கே சிந்து நதிக்கு அப்பாலுள்ள நாடு முழுவதையும் அந்த நதியின் பெயராலே வழங்கினர். 'இந்து' என்ற சொல் இவ்வாறு சமய அடிப்படையிலன்றி இடத்தைக் குறிப்பதாகவே முதலில் வழங்கியது. பின்னர் அச்சொல் அவ்விடத்தில் வாழ்ந்த மக்களையும் அவர்களுடைய மதத்தையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

வரலாற்று அடிப்படையில் நோக்கின் இந்து சமயம் மிகவும் பழமை வாய்ந்தது; பரந்த நோக்குடையது; சனாதன தர்மம் என்று வழங்கப்படுவது. அது காலப்போக்கிற் பல்வேறு கருத்துக்

களையும் கோட்பாடுகளையும் தனதாக்கி ஏற்று, இன்றைய இந்து மதமாக வளர்ச்சியடைந்திருக்கிறது.

ஆராய்ச்சியாளர்கள் இந்து மதத்தின் தோற்றத்தினைக் கிறிஸ்துவுக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் இட்டுச் செல்லு கின்றனர். ஏறத்தாழ ஐம்பது வருடங்களுக்கு முன் சிந்து வெளி யில் சேர் ஜோன் மார்ஷல், சேர் அலெக்சாந்தர் கன்னிங்காம், சேர் வில்லியம் ஜோன்ஸ் ஆகியோர் தொல்பொருளாராய்ச்சி நடத்தினர். சிந்து வெளியில் மொஹெஞ்சோதாரோ, ஹரப்பா எனும் புதைந்த நகரங்களிலே பெறப்பட்ட சான்றுகளைக் கொண்டு மெசப்பத்தேமிய, சுமேரிய நாகரிகங்களுக்கு இணை யான ஒரு சிறந்த நாகரிகம் சிந்து நதிக்கரையிலே திகழ்ந்தது என அறிகின்றோம். இன்றைய இந்து மதத்தின் கருவினை அன்றைய சிந்து வெளி நாகரிகத்திற் காணலாம். அங்குக் கிடைத்த இலச்சினைகள், உருவச் சிலைகள் முதலியவற்றை நோக்கும்போது சிந்து வெளி மக்கள் சிவனும் சத்தியும் என்று நாம் கொள்ளத்தக்க தெய்வங்களை வழிபட்டு வந்தனர் என்று நம்ப இடமுண்டு.

சிவனுக்குப் 'பசுபதி' என்ற ஒரு பெயரும் உண்டு என்பதை நாம் அறிவோமல்லவா? பசுபதி என்ற சொல்லின் பொருள் யாது? 'பசு' என்பது ஆன்மாக்களை, அதாவது உயிர்களைக் குறிக்கும். 'பதி' என்பது அவ்வுயிர்களுக்கெல்லாம் தலைவனான இறைவனைக் குறிக்கும். சிந்து வெளியிற் பெறப்பட்ட முத்திரை ஒன்றிலே திரிசூலம் போலும் கொம்புள்ள ஒரு யோகியின் உரு வம் காணப்படுகின்றது. அவ்வுருவத்தைச் சூழ்ந்து எருமை, புலி, மான் ஆதியாம் விலங்குகள் காட்சி தருகின்றன. முத்திரையிற் பொறிக்கப்பட்டுள்ள யோகியின் வடிவம் உயிர்களுக்கெல்லாம் தலைவனான சிவனை, பசுபதியைச் சுட்டுவதாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

பண் : கொல்லி

குனித்த புருவமுங் கொவ்வைச்
  செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
  மேனியிற் பால்வெண்ணீறும்.
இனித்த முடைய வெடுத்தபொற்
  பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
  தேயிந்த மாநிலத்தே.

என்று அப்பர் பாடினார். காலைத் தூக்கி ஆடும் இந்நடரா சப் பெருமானைச் சிதம்பரத்திலும் சிவன் கோவில்களிலும் காண்

கிறோம். இறைவனது ஐந்தொழில்களையும் குறிப்பது இவ் வடிவம். இநது சமயம் போற்றும் ஒரு சிறந்த கலை வடிவமாகவும் இது கொள்ளப்படுகிறது. ஹரப்பாவிற் பெறப்பட்ட இலச்சினை ஒன்றில் இடம்பெறும் ஆடும் உருவம் நடராசப் பெருமானின் பண்டைய உருவமாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இவை தவிர, சிவத்தின் அருவுருவ வடிவமாகிய சிவலிங்கம் எனத்தக்க வடிவங்களும் சிவபிரானது வாகனமாகிய நந்தியினை நினைவூட்டுகின்ற திமில்பருத்த எருதின் வடிவங்கள் பலவும் இன்னும் பெண் தெய்வங்கள் என நாம் கருதத்தக்க உருவங்களும் சிந்து வெளியின் தொல்பொருள்களுட் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டே சிந்து வெளி ஆராய்ச்சியாளர் சிவ சக்தி வழிபாடு, நந்தி வழிபாடு என்பன சிந்து வெளி நாகரிகத்தில் இருந்தனவெனக் கருதுகின்றனர்.

''சிந்து வெளியிற் கிடைத்த புதுமைகளுள் முதலிடம் பெறத்தக்கது சைவத்தின் பழமையேயாகும். அது வெண்கல யுகத்துக்கோ, அதனிலும் முற்பட்ட காலத்திற்கோ நம்மை இட்டுச் செல்கிறது. இன்றளவும் வழக்கத்திலுள்ள மிகப் பழைய சமயமாக இது விளங்குகிறது'' என்று ஆராய்ச்சியாளர் சேர் ஜோன் மார்ஷல் கூறுகிறார்.

ஆனால், சிந்து வெளி முத்திரைகளிலும் பிற சின்னங்களிலும் இடம்பெறும் சித்திர வரிவடிவ எழுத்துக்களை ஆராய்ச்சியாளர் இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. அவற்றை முழுமையாகப் புரிந்து கொள்ளும்பொழுதே சிந்து வெளி மக்களது சமயம் பற்றி நாம் எதையும் திட்டவட்டமாகக் கூறமுடியும். எனினும், இது ஆரியரின் காலத்துக்கு முற்பட்ட சமயம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

### (ஆ) வேத காலம்

இந்து மதத்தைப் பற்றி எமக்குத் தெளிவாக அறியத் தருவன வடமொழியிலமைந்த 'வேதங்கள்' எனப்படும் நூல்கள். அவை இந்து மதத்தின் பிரமாண நூல்களாகும். வடமொழியிற் பெறப்படும் இந்து மதநூல்களுள் காலத்தால் பழமை வாய்ந்தவையென அவை போற்றப்படுகின்றன. வேதங்கள் மனிதரால் ஆக்கப்பட்டவை அல்ல; இறைவனால் அனுபூதிமான்களாகிய இருடிகளுக்கு அருளப்பட்டவை என்பது இந்துக்களின் நம்பிக்கை. அதனால் அவை புனிதமான நூல்களாகப் போற்றப்படுகின்றன. மேலும், எழுதப்படாது செவி வழியாற் பேணப்பட்டு வந்தமையின் 'எழுதா மறை' எனவும் 'சுருதி' எனவும் மனிதர்களால்

ஆக்கப்படாதவை எனும் கருத்தால் 'அபௌருஷேய நூல்கள்' எனவும் வழங்குகின்றன.

இயற்கையில் இறைவனைக் கண்டவர்கள் எமது சமயப் பெரியார்கள். இவ்வியற்கை வழிபாடு வேத காலத்தில் இருந்தது. வேதகால மக்கள் இடி, மழை, காற்று, நீர் ஆகிய யாவற்றிலும் ஒரு சக்தியைக் கண்டார்கள். இச்சக்தியை இறைவனாகப் போற்றினார்கள். இயற்கைத் தெய்வங்களாக அவர்கள் போற்றிய அக்கினி, இந்திரன், வருணன், வாயு முதலியவற்றின் மீது தோத்திரப் பாடல்கள் பாடினார்கள். இப்பாடல்களே இருக்கு, யசுர், சாமம், அதர்வம் எனும் நான்கு சங்கிதைகளாக (சம்ஹதை—சங்கிதை—தொகுப்பு) வகுக்கப்பட்டுடுள்ளன.

வேதகால மக்கள் நாம் போற்றிய தெய்வங்களுக்குத் தானியம், பால், சோமசரம் முதலிய நைவேத்தியங்களைப் படைத்தார்கள். ''போரில் வெற்றி, நீண்ட ஆயுள், மக்கட் செல்வம் ஆகியனவற்றை நீ எனக்குத் தா'' என்று வேண்டினார்கள். யாகங்கள், கிரியைகள் இவ்வாறு வளர்ச்சியடைந்தன. 'பிராமணங்கள்' எனப்படும் வேதநூற் பகுதிகள் இதற்குச் சான்றுபகர்கின்றன. இங்ஙனம் உருவாகிய கிரியைகள் இன்றும் இந்து மதத்திலே தனியிடம் வகிக்கின்றன.

வேதகால ஆரியர் பல தெய்வங்களைப் போற்றி வந்தனரேனும் 'தெய்வம் ஒன்றே' எனும் கருத்து அவர்களது மனத்தின் அடித்தளத்தில் இருந்திருக்க வேண்டும். பல தெய்வங்களுக்குள்ளும் குறித்த ஒரு பொழுதிற் குறித்த ஒரு தெய்வத்தையே மனத்திற் பதித்து, அத்தெய்வத்தையே தாம் போற்றும் தலைமைத் தெய்வமாக வழிபட்டு வந்தனர். மேலும், 'மெய்ப்பொருள் ஒன்றே; அதனையே அறிஞர்கள் அக்கினி என்றும் வருணன் என்றும் வெவ்வேறு பெயர்களாற் குறிக்கின்றனர்' என்று கூறுகிறது ஒரு வேத சுலோகம். பரம்பொருள் ஒன்றே எனும் கருத்து உபநிடதங்களில் மேலும் வலுப்பெற்றுள்ளது.

சைவர்கள், சாக்தர்கள், வைணவர்கள் ஆகிய இந்து மதத்தின் மூன்று பிரிவினருக்கும் வேதங்கள் பொதுவான மூல நூல்களாகும். இன்றும் இந்துமதச் சடங்குகள், கிரியைகள் ஆகியவற்றில் வேத மந்திரங்கள் தனி இடம் பெறுகின்றன.

சைவ சமயத்தின் சிறப்பு நூல்களாகக் கொள்ளப்படுபவை சிவாகமங்கள். அவை சிவபிரானால் அனுபூதிமான்களுக்கு அரு

ளிச் செய்யப்பட்டவை என்று கருதப்படுகின்றன. ஆகமங்கள் இருபத்தெட்டினுள்ளும் முதற் பத்தும் சிவாகமங்கள் எனவும், ஏனையவை உருத்திராகமங்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாகமங்கள் கடவுள், உயிர், உலகு ஆகிய முப்பொருள்களின் இயல்பினை விளக்குவன; இறைவனை உணர்வதற்கு உதவும் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களைப் பற்றியும் கூறுவன. கோயிலமைப்பு முறை, கோயிற் கிரியைகள் முதலியன பற்றி எடுத்துரைப்பன. இவ்வாறாகச் சைவ சமய வழிபாட்டினை அறிவதற்கு உதவும் நூல்கள் சிவாகமங்கள்.

### (இ) சங்க காலமும் பிற்காலமும்

பண்டைத் தமிழ் நூல்களிலிருந்தும் நாம் சைவ சமயத்தின் வளர்ச்சியை அறியக்கூடியதாக இருக்கின்றது. நில அமைப்புக்கு ஏற்றவாறு பண்டைத் தமிழ் மக்களது ஒழுக்கங்களும் வழிபாட்டு முறைகளும் அமைந்தன. சங்க கால மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களுக்கு உரிய தெய்வங்களாக முறையே முருகன், திருமால், இந்திரன், வருணன், கொற்றவை ஆகிய தெய்வங்களைப் போற்றி வாழ்ந்தனரேனும் இத் தெய்வங்களுக்கெல்லாம் மேலாக ஒரு பரம்பொருள் உளது என நம்பினார்கள்.

சங்க கால இலக்கியங்களிலே பிறவா யாக்கைப் பெரியோன், கொன்றை அலங்கல் அம் தெரியலான், நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன், கறை மிடற்று அண்ணல், நுதல் விழி நாட்டத்து இறையோன், சூலம் பிடித்த சுடர்ப்படைக் காலக் கடவுள், பிறங்கு நீர் சடைக்கரந்தான், ஏற்று ஊர்தியான் என வரும் தொடர்கள் அவர்கள் கருதிய அப்பரம்பொருளையே சுட்டுகின்றன. சைவர்கள் போற்றும் சிவனை அத்தொடர்கள் குறிக்கின்றன என்பது புலப்படும்.

சிவம் எனும் சொல் செம்மை அளிப்பது, மங்களத்தை அளிப்பது எனப் பொருள்படும். அது செம்மை, சிவப்பு எனும் அடியாகப் பிறந்தது. செம்மேனியனான சிவன் 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' என உமையம்மையோடு இணைத்துப் பேசப்படுவதைப் பார்க்கும்பொழுது சிவமும் சக்தியும் ஒன்றிணைந்தவை என்ற கருத்தும் சைவ சமயத்தின் ஆரம்ப காலத்திலேயே தோன்றிவிட்டது எனக் கொள்ளலாம்.

சங்கத் தமிழ் இலக்கியங்களிலே கொற்றவை பாலைநிலத் தெய்வமாகக் கொள்ளப்பட்டு, அப்பகுதி மக்களாலே துதிக்கப்

பட்டவள். சிலப்பதிகாரத்திலும் கொற்றவை போற்றப்படுகிறாள். இக்கொற்றவை அல்லது துர்க்கை வழிபாடே பின் சக்தி வழிபாடாயிற்று எனலாம்.

எனினும், சிவ வழிபாடே பண்டைக் காலந்தொட்டு தென்னிந்தியாவிற் சிறப்பிடம் பெற்றிருந்தது. சங்க கால நூல்களிலே சிவனைப் பற்றிய குறிப்புக்கள் இருப்பதைக் கண்டோம். சமய குரவர் நால்வருக்கும் காலத்தால் முற்பட்டவராகிய காரைக்காலம்மையாரும் சிவபத்தியிலேயே சிறந்து நின்றவர். சிவபெருமானை முன்னிலைப்படுத்தித் தோத்திரப் பாடல்கள் பாடும் வழக்கம் காரைக்காலம்மையார் காலம் தொடக்கம் பெருவழக்கெய்தியது.

சிவபிரானுக்கு ஆரம்பத்தில் மண்ணாலும் மரத்தாலும் செங்கற்களாலும் அமைக்கப்பட்ட கோவில்களும், பின்னர் பல்லவப் பேரரசர் காலத்திற் கற்களால் அமைக்கப்பட்ட கோவில்களும் எழுந்தன. அக்கோவில்களுக்குத் தல யாத்திரை செய்து அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் தோத்திரப் பாடல்கள் பாடினார்கள். சைவ சித்தாந்தக் கொள்கைகளின் வளர்ச்சிக்கும் இத்தோத்திரப் பாடல்களே வித்தாக அமைந்தன.

சைவ சான்றோர்கள் யாவரது பாடல்களிலும் தெய்வம் ஒன்றே என்னுங் கருத்துச் செறிந்திருக்கிறது.

''ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ''

என்று மணிவாசகர் திருவாசகத்திற் பாடுகிறார். வேத உபநிடதக் கருத்துக்களும் தேவார திருவாசகங்களிலே இடம்பெறுகின்றன. எனவே, திருமுறைகளைத் 'தமிழ் வேதம்' என்று கூறுவர்.

இறைவனை ஒருவர் எந்த நாம வடிவங்களிலும் வழிபடலாம். இந்துக்கள் தாம் போற்றிய பரம்பொருளைச் சிவனாகவும், சக்தியாகவும், சிவலிங்கமாகவும், எங்கும் நிறைந்த பரம்பொருளாகவும் வழிபட்டு வந்தமை இந்து மதத்திற் பழமை வாய்ந்த ஒரு மரபு என்பதற்குத் தொல்பொருளாராய்ச்சியும் சமய இலக்கியங்களும் பிற இலக்கியங்களும் சான்றுபகர்கின்றன.

## 2. தோத்திரங்கள்

### (அ) திருமுறை கண்ட வரலாறு

சோழவளநாட்டை இராஜராஜசோழன் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்து வந்தான். அவன் அபயகுலசேகரன் என்றும் அழைக்கப்பட்டான். தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டுவித்த பெருமையும், பொலனறுவையிற் சிவனுக்குக் கோயில் எடுத்த சிறப்பும் அவனுக்குண்டு.

ஒருபொழுது இராஜராஜன் தேவாரப் பதிகங்கள் சிலவற்றிற்கு அன்பர்கள் உரைவிரிக்கக் கேட்டு மகிழ்ந்தான். ஏனைய தேவாரத் திருப்பதிகங்களையும் சேகரிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டான்; அவற்றைத் தேடும் முயற்சியில் இறங்கினான். ஆனால் முயற்சி பயனளிக்கவில்லை.

இப்படியிருக்கும் நாளிலே திருநாரையூரிலே ஆதிசைவப் பிராமண குலத்திலே சைவத்தை வாழ வைப்பதற்கென ஒரு சிறுவன் தோன்றினான். அவனது பெயர் நம்பியாண்டார் நம்பி. உரிய காலத்தில் அவன் உபநயனம் பெற்று, வேண்டிய கலைகளைக் கற்கலானான்.

ஒருபொழுது நம்பியின் தந்தையார் வேற்றூர் சென்றார். அதனால் தந்தையார் பூசை செய்துவந்த பொல்லாப் பிள்ளையாருக்கு மைந்தனே பூசை புரிய நேர்ந்தது. பிள்ளையாருக்குத் திருமஞ்சனமாட்டி, நிவேதனம் படைத்து, அதனை உண்டருள வேண்டும் என்று சிறுவன் இறைஞ்சி நின்றான். பிள்ளையார் உண்பதாகக் காணவில்லை. உளம் வெதும்பிய சிறுவன், தனது தலையைக் கல்லிலே மோதப் போனான். அப்பொழுது பிள்ளையார் ''நம்பி பொறு'' என்று தடுத்து, படைத்த அமுதம் முழுவதையும் உண்டருளினார்.

தந்தையார் திரும்பும் வரை பூசனை புரிவதிலேயே நாள்களை நம்பி கழித்தான். அதனாற் பாடங்கள் தவறியமைக்கு ஆசிரியர் தண்டிப்பார் என அஞ்சினான். ''பிள்ளையாரே நீரே, இனிக் கலைகள் யாவற்றையும் எனக்கு உணர்த்த வேண்டும்'' என்று பொல்லாப் பிள்ளையாரை இறைஞ்சினான். பெருமானும் நம்பிக்கு வேண்டிய அறிவை உணர்த்தியருளினார்.

நம்பி படைத்த அமுதம் யாவற்றையும் பிள்ளையார் உண்டருளிய செய்தி சோழமன்னன் காதிற்கு எட்டிற்று. மன்னன் நம்பியிடஞ் சென்று, ''மூவர் தேவாரங்கள் எங்குந் தேடியுங் கிடைத்தில; அவை இருக்கும் இடத்தையு மூவர் செய்தியையும் பொல்லாப் பிள்ளையாரிடம் அறிந்து சொல்ல வேண்டும்'' என்று வேண்டினான்.

நம்பி அரசனின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பிள்ளையாரைப் பிரார்த்தித்தார். பெருமானும் மூவர் தமிழ் தில்லையிற் சிற்றம்பலத்துக்கு மேற்கே ஓர் அறையினுள் இருக்கிறதென்று கூறி, அவர்கள் செய்தி அத்தனையையும் நம்பியின் மனத்திற் பதிய வைத்தார். இவற்றை நம்பி மன்னனுக்கு உரைத்தார்.

அவற்றைக் கேட்டு மகிழ்ந்த மன்னன் நம்பியையும் அழைத்துக் கொண்டு சென்று தில்லையை அடைந்தான். அங்கே விநாயகப் பெருமான் அருளிய செய்தியைத் தில்லைவாழ் அந்தணர்களுக்கு எடுத்துக் கூறினான். அந்தணரோ ''மூவரும் வந்தால் மட்டுமே தேவார ஏடுகள் இருக்கும் அறையின் கதவு திறக்கும்'' என்றனர்.

மன்னன் இராஜராஜன் உள்ளந் தேறினான். மூவரின் சிலைகளைக் கோயிலை வலம்வர வைத்துத் திருப்பாடல்கள் இருக்கும் அறையை அடைந்ததும், ''மூவரும் வந்தனர்; இனிக் கதவு திறக்கலாமே'' என்றான். அந்தணர்கள் அரசனின் மதிநுட்பத்தை வியந்து கதவைத் திறந்தனர். அந்தோ! ஏடுகள் கறையானால் மூடப்பட்டுக் கிடந்தன. கறையானை அகற்றிப் பார்த்த பொழுது ஏடுகள் பல அரிப்புண்டு கிடந்தன. சலிப்புற்ற மன்னனுக்கு, ''வேந்தா! இக்காலத்திற்கு வேண்டுவனவற்றை அழியாது வைத்தோம்'' என்று ஓர் ஒலி கேட்டது.

மனமகிழ்ந்த வேந்தன் மூவர் தேவாரங்களையுந் திருமுறைகளாக வகுத்துத் தரும்படி நம்பியை வேண்டினான். நம்பியும் அவற்றை ஏழு திருமுறைகளாக வகுத்தார்; இவ்வாறு வகுத்த பின்னர் அப்பொழுது இருந்த ஏனைய அருட்பாடல்களையுஞ் சேர்த்துத் திருமுறைகளைப் பதினொன்றாக்கினார். நம்பி இயற்றிய நூல்களும், மன்னனின் வேண்டுகோளின்படி, பதினோராந் திருமுறையிற் சேர்க்கப்பட்டன.

அரசனும் நம்பியும் தேவாரங்கட்கு இசை வகுக்க விரும்பினர். திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த பெண்ணொருத்தியைக் கொண்டு பதிகங்கட்குப் பண் வகுப்பித்தனர்.

சேக்கிழார் சுவாமிகள் இயற்றிய பெரிய புராணம் பன்னிரண்டாவது திருமுறையாகப் பிற்காலத்தவராற் சேர்க்கப்பட்டது. திருமுறைகள் வகுக்கப்பட்ட வரலாற்றை அறிய உதவும் நூல் உமாபதி சிவாசாரியாரது 'திருமுறை கண்ட புராணம்' என்பதாகும்.

## (ஆ) பன்னிரு திருமுறைகள்

சிவனடி மறவாச் சிந்தையரான மெய்யடியார்கள் பலர் காலத்துக்குக் காலம் இறைவன்மீது அருட் பாசுரங்கள் பலவற்றைப் பாடியிருக்கின்றனர். இவற்றுள் சம்பந்தரின் தேவாரப்பதிகங்கள் தொடக்கம் சேக்கிழார் பெருமானது பெரிய புராணம் வரை பாடப்பட்ட பாசுரங்கள் பலவற்றின் தொகுப்பே பன்னிரு திருமுறைகளாகும்.

பன்னிரு திருமுறைகள் சைவத் தமிழ் மக்களாற் பெரிதும் போற்றப்பட்டு வருகின்றன. இவை ஆலயங்களிலும் இல்லங்களிலுந் தினமும் ஓதப்படுபவை; உள்ளத்தைத் தூய்மை செய்யுந் தகைமை வாய்ந்தவை. திருமுறைகள் பன்னிரண்டாகத் தொகுக்கப்பட்ட வரலாற்றை ஏலவே கண்டோம்! இனி, அவற்றின் வகுப்பு முறையையும் அவற்றைப் பற்றிய சில விபரங்களையுங் காண்போம்.

## (1) முதல் ஏழு திருமுறைகள்

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் பாடிய பாடல்கள் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. சம்பந்ருடைய பாசுரங்கள் முதன் மூன்று திருமுறைகளாகும். அப்பருடைய பாசுரங்கள் அடுத்த மூன்று திருமுறைகளாகும். சுந்தரர் பாடிய பாடல்கள் ஏழாந் திருமுறையாகும்.

இம்மூவரும் பாடிய பாடல்கள் தேவாரம் எனப்படும். 'தமிழ் வேதம்' என்றும் இவை குறிப்பிடப்படுகின்றன. தேவாரம் என்ற சொல்லிற்குத் (தேவ-ஆரம்) தெய்வத்திற்குச் சூட்டப்படும் பாமாலை என்றும் (தே-வாரம்) தெய்வத்தின் மீது அன்புடன் பாடப்படும் இன்னிசைப் பாடல் என்றும் பொருள் கூறுவர்.

தேவாரம் பாடிய மூவருந் தமிழகத்தில் பத்திப் பிரவாகம் பெருக்கெடுத்தோடிய பல்லவப் பேரரசர் காலத்தில் வாழ்ந்தவர்கள். (அப்பருஞ் சம்பந்தரும் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள்; சுந்தரர் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.)

ஞானசம்பந்தர் இயற்கையிலே இறைவனைக் கண்டு மகிழ்ந்தவர். துன்பமறியாத குழந்தையுள்ளத்தை அவருடைய பாடல்களிற் பரக்கக் காணலாம்.

உலக அனுபவத்தால் எழுந்த ஆழ்ந்த கருத்துக்கள் அப்பரது தேவாரங்களிலே தெளியக் கிடைக்கின்றன. ஆறாந் திருமுறையில் அடங்கிய அப்பர் திருத்தாண்டகங்கள் மனத்தை உருக்கும் பெற்றி வாய்ந்தவை. திருத்தாண்டகங்களின் சிறப்பு நோக்கிய சைவச்சான்றோர் அப்பரைத் 'தாண்டக வேந்தர்' என்றும் அழைக்கலாயினர்.

மூவருள்ளும் உலக வாழ்வோடு ஒட்டி வாழ்ந்தவர் சுந்தரர். அவர் இறைவனது தோழமை பெற்று உரிமை பாராட்டியமையை அவர் பாசுரங்கள் பலவற்றிற் காணலாம்.

(2) எட்டாந் திருமுறை

எட்டாந் திருமுறையில் அடங்குபவை மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும் திருக்கோவையாரும் ஆகும். மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல அழகிய பொன்னம்பலவனே திருவாசகப் பாடல்களைப் பிரதி செய்தான் என்று கூறுவர்.

'பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக' என்று இறைவன் வேண்ட, மணிவாசகர் திருக்கோவையாரை பாடினார் என்பர். இறைவன் திருவாசகத்தைப் பிரதி செய்தமைக்குக் காரணங்காணுமுகமாக ஓர் இனிமையான கற்பனைக் கதையைச் சித்திரித்திருக்கிறார் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

'கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள்
உடையார்உன் வாசகத்தின் ஒரு பிரதி கருதினதே'

ஊழிக் காலத்திலே தனித்திருக்கும்பொழுது உனது திருவாசகத்தை ஓதி (அதன் ஓசை நயத்தையும், பொருள் ஆழத்தையும், பத்திச் சுவையையும்) அனுபவித்துக் காலங் கழித்தற் பொருட்டன்றோ இறைவன் அதைப் பிரதி செய்து கொண்டார் என்பது அப்பாட்டின் பொருளாகும்.

திருக்கோவையார் என்பது தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகிய கோவைப் பிரபந்தங்களுட் பழமையுஞ் திருச்சிற்றம்பலவனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டமையால் இதைத் திருச்சிற்றம்பலக் கோவையார் என்றும் வழங்குவர்.

(3) ஒன்பதாந் திருமுறை

ஒன்பதாந் திருமுறையில் அடங்கியவை திருவிசைப்பாத் திருப்பதிகங்களும் சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டுமாம். திருவிசைப்பாத் திருப்பதிகங்கள் சேந்தனார், திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மராற் பாடப்பட்டவை.

இறைவனைப் ''பல்லாண்டு வாழ்க'' என வாழ்த்திப் பாடும் பாட்டுத் திருப்பல்லாண்டாகும். ஒருபொழுது தில்லை நடராசப் பெருமானின் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவிலே தேர்ச் சில்லுகள் சேற்றில் அழுந்தியமையாலே தேர் ஓடாது தடைப் பட்டிருந்தது. அப்பொழுது ''மன்னுகதில்லை வளர்க நம்பக்தர் கள்'' என்று தொடங்கிப் பதின்மூன்று பாசுரங்களைக் கொண்ட பதிகத்தைச் சேந்தனார் பாடியதுந் தேர் அசைந்து ஓடி இருப் பைச் சேர்ந்ததென்பது வரலாறு.

(4) பத்தாந் திருமுறை

திருமூலரது திருமந்திரமே பத்தாந் திருமுறையாகும். இது 3000 பாக்களைக் கொண்டது. எங்களுடைய சமய தத்துவங் களைக் குறிப்பிடும் மிகப் பழைய தமிழ் நூல் இதுவேயாகும்.

இந்நூலிற் செல்வம், கல்வி, மன ஒருமை, ஒழுக்கம் முத லிய நல்வாழ்வுக்கான சாதனங்கள் நுட்பதிட்பமாக விளக்கப் பட்டிருக்கின்றன. முப்பொருள், மூவகை உயிர்கள், மும்மலம், நால்வகை நெறிகள், திருநீறு, திருவைந்தெழுத்து, திருக்கூத்து ஆதியாம் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நூல் முழுவதும் விர விக் கிடக்கின்றன. 'அன்பே சிவம்' என்பதே திருமந்திரத்தின் சாரம்.

(5) பதினோராந் திருமுறை

நாற்பது தோத்திர நூல்களின் தொகுதியே பதினோராந் திருமுறையாகும். இதில் முதலாவதாக விளங்குவது திருவால வாய் இறைவனால் அருளிச்செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும், திருமுகப் பாசுரம். இப்பாசுரம் பாணபத்திரனுக்குப் பொருள் உதவும்படி சிவபெருமானாற் சேரமான் பெருமாள் நாயனாருக்கு அனுப்பப்பட்ட திருமுகம் என்பர்.

இது தவிரப் பட்டினத்தடிகள், காரைக்காலம்மையார், நக்கீரர், நம்பியாண்டார் நம்பி என்போர் உட்படப் பதினொரு வர் பாடிய நூல்கள் இத்திருமுறையில் இடம்பெறுகின்றன.

### (6) பன்னிரண்டாந் திருமுறை

நம்பியாண்டார் நம்பி பதினொரு திருமுறைகளையும் வகுந்தார் என நாம் முன்பு படித்தறிந்தோம். பின்பு சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்த பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்க்கப்பட்டது.

இறைவழிபாட்டின் போதும், சைவ சமய நிகழ்ச்சிகளின் போதும் திருமுறை ஓதுவது சைவமரபு. இச்சந்தர்ப்பங்களிற் பஞ்சதோத்திரமே ஓதுவார்கள். பஞ்ச தோத்திரங்களை அவை ஓதப்படும் வரிசைக் கிரமத்திற் கீழே தருகிறோம் :—

1. தேவாரம்
2. திருவாசகம்
3. திருவிசைப்பா
4. திருப்பல்லாண்டு
5. திருத்தொண்டர் புராணம்

பஞ்ச தோத்திரம் ஓதினாற் பன்னிரு திருமுறைகளை ஓதிய பயன் கிடைக்கும்.

Nanthini
Uivekcmanthirajah

Srisbundurajah Arivalagi

Mini computer
Mirco computer cp
soft computer central
Processing
sy unit
system

## 3. சாத்திரங்கள்

### (அ) சாத்திர நூல்களின் வைப்பு முறை

இதுவரை எமது சமய அடியார்களைப் பற்றியும் அவர்களிற் சிலர் எங்களுக்கு விட்டுச்சென்ற அருட்பாடல்களைப் பற்றியும் சிறிது அறிந்து கொண்டோம். அடியார்கள் அன்பும், தியாகமும், அருளும் நிறைந்தவர்கள்; சிவமணங் கமழுந் தவ வாழ்வு வாழ்ந்தவர்கள்.

இந்த அடியார் வாழ்ந்த நெறி பற்றிய நூல்களே சைவசித்தாந்த சாத்திர நூல்கள் எனப்படுவன. இவை சமய வாழ்வுக்கு இலக்கணமாக— சைவ சமயத்தின் சித்தாந்தமாக—அமைந்தவை. இவற்றை மெய்கண்ட சாத்திரங்கள் என்றும் குறிப்பிடுவர்.

சாத்திர நூல்களின் நடுநாயகமாக விளங்குவது சிவஞானபோதம் என்ற நூல். இதனை அருளிச் செய்தவர் மெய்கண்டதேவர் என்ற அருளாளர். சைவ சமுதாயத்தில் இவரை முதல்வராகக் கொண்டு ஒரு குருசீட பரம்பரை தோன்றி வளர்ந்து வருகிறது. இதனை மெய்கண்டார் சீட பரம்பரை என்றும், மெய்கண்ட சந்தானம் என்றும் வழங்குவர். மெய்கண்ட சந்தானம் பற்றிய விரிவான வரலாற்றைப் பத்தாம் வகுப்பிற் கற்பீர்கள்.

'சித்தாந்தம்' என்றால் முடிந்த முடிபெனப் பொருள்படும். சைவ சித்தாந்தம் கூறும் உண்மைப் பொருள்கள் மூன்று. அவை இறைவன், ஆன்மா, மலம் என்பவை. அவற்றைப் பதி, பசு, பாசம் என்றுங் கூறுவர். ஆன்மா தெய்வத் தன்மை உடையது. ஆயினும், அது இயல்பாகவே ஆவண மலத்தினாற் பிணிப்புற்றுள்ளது. அதனால் அது தனது தெய்வத் தன்மையை உணர்வதில்லை; அறியாமை நிறைந்து துன்பத்திற்குள்ளாகிறது. இந்த அறியாமை நீங்கி, ஆன்மா இறைவனை அடைந்து, நித்தியமான பேரின்பப் பெருவாழ்வு எய்துதலையே முத்தி என்போம்.

அறியாமைத் தளையிலிருந்து விடுபடுவதும், இறைவனை அடைவதுஞ் சுலபமான செயல்களல்ல. அவற்றிற்கு வழிகள் உண்டு; சாதனைகள் உண்டு; ஒழுங்குகள் உண்டு. விதித்த வழிகளைக் கடைப்பிடித்து, குறிப்பிட்ட சாதனைகளைச் சாதித்து, வகுக்கப்பட்ட ஒழுங்குகளின்படி ஒழுகினால் இறைவன் திரு

வருள் கிடைக்கும். இவற்றை நமது மெய்கண்ட சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன.

மெய்கண்ட சாத்திர நூல்களின் எண்ணிக்கை பதினான்காகும். அவற்றைப் பற்றிய விபரங்கள் அடங்கிய அட்டவணை ஒன்றைக் கீழே தருகிறோம்.

| | பெயர் | | ஆசிரியர் | வாழ்ந்த நூற்றாண்டு |
|---|---|---|---|---|
| 1. | திருவுந்தியார் | — | திருவியலூர் உய்யவந்த தேவர் | 12 |
| 2. | திருக்களிற்றுப்படியார் | — | திருக்கடவூர் உய்யவந்த தேவர் | 12 |
| 3. | சிவஞானபோதம் | — | மெய்கண்ட தேவர் | 13 |
| 4. | சிவஞானசித்தியார் | } | அருணந்தி சிவாசாரியார் | 13 |
| 5. | இருபா இருபஃது | } | அருணந்தி சிவாசாரியார் | 13 |
| 6. | உண்மை விளக்கம் | — | திருவதிகை மனவாசகம் கடந்தார் | 13 |
| 7. | சிவப்பிரகாசம் | } | உமாபதி சிவாசாரியார் | 14 |
| 8. | திருவருட்பயன் | } | உமாபதி சிவாசாரியார் | 14 |
| 9. | வினாவெண்பா | } | உமாபதி சிவாசாரியார் | 14 |
| 10. | போற்றிப்பஃறொடை | } | உமாபதி சிவாசாரியார் | 14 |
| 11. | கொடிக்கவி | } | உமாபதி சிவாசாரியார் | 14 |
| 12. | நெஞ்சுவிடு தூது | } | உமாபதி சிவாசாரியார் | 14 |
| 13. | உண்மை நெறி விளக்கம் | } | உமாபதி சிவாசாரியார் | 14 |
| 14. | சங்கற்ப நிராகரணம் | } | உமாபதி சிவாசாரியார் | 14 |

இந்தப் பதினான்கு சாத்திரங்களின் பெயர்கள் வரும் பாடல் ஒன்றுண்டு. அது கீழே தரப்பட்டுள்ளது.

உத்திகளிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று.

**சாத்திர நூல்கள் பற்றிய விளக்கம்**

இனிச் சாத்திர நூல்களைப் பற்றிய சில சுவையான செய்திகளைப் பார்ப்போம். பதினான்கு சாத்திரப் பட்டியலிற் சிவஞான

போதத்திற்கு முன்பு வேறு இரு நூல்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்ற நூல்களாகும். காலத்தால் முந்தியவை எனும் காரணம் பற்றியே இவை சாத்திர நூல் வரிசையில் முதலிடம் பெற்றுள்ளன. இவை இரண்டினுள்ளுந் திருவுந்தியாரே முந்தியது.

இந்த இரு நூல்களுக்கும் 'திரு' என்ற முன்னடைமொழியும் 'ஆர்' என்ற விகுதியும் கொடுத்திருப்பது இவற்றிற்கு ஒரு தனிச் சிறப்பு. கேட்போரால் விரும்பப்படுந் தன்மை நோக்கித் 'திரு' என்ற அடைமொழியும், உயர்வு நோக்கி 'ஆர்' என்ற விகுதியும் சான்றோர் கொடுத்தார் போலும்.

திருவுந்தியார்ப் பாடல்கள் ஒவ்வொன்றும் 'உந்தீபற' என்ற சொற்றொடர் கொண்டு முடிகின்றன. உந்திபறத்தல் என்பது சிறுமியர் விளையாட்டுக்களில் ஒன்று. பறவைகள் பறக்கும்போது கால்களை ஒன்று சேர வைத்துச் சிறகுகளை அடித்துப் பறக்கும். சிறுமியரும் இவ்வண்ணம் கால்களை ஒன்று சேர வைத்துச் சிறகுகளை அடிக்கும் பாவனையிற் கைகளை ஆட்டியசைத்து ஆடும் விளையாட்டே உந்தி பறத்தலாம். 'உந்தீபற' என்பதை உம்-தீ-பற என்று பிரித்து (இப்பாடலைப் பாடிப்பரனைப் பரவினால்) உமது தீமையெல்லாம் பறந்துவிடும் என்று அதற்குப் பொருள் சொல்வர்.

திருக்களிற்றுப்படியார் அப்பெயர் பெற்றதற்கும் ஒரு வரலாறு உண்டு. சிதம்பரத்திலே கனகசபையின் திருப்படிகளை இருபுறத்துங் களிற்றின் தலைகள் அணிசெய்கின்றன. அதனால் அவற்றைத் திருக்களிற்றுப்படி என்பர். ஒருபொழுது திருக்கடவூர் உய்யவந்த தேவனார் நூறு பாடல்களை இயற்றி அத்திருப்படிகளில் வைத்தார். கல்யானை துதிக்கையை நீட்டி நூலை எடுத்து இறைவன் திருமுன் வைத்தது. அதனால் அந் நூலிற்குத் திருக்களிற்றுப்படியார் என்னும் பெயர் வழங்கலாயிற்று.

சிவஞானபோதம் என்ற நூலே சைவசித்தாந்தத்தின் முதனூல் என்று முன்னர் பார்த்தோம். சிவஞானபோதம் (சிவஞானம் போதம்) என்ற சொற்றொடர் சிவனின் திருவருளால் வருகின்ற மெய்யறிவைத் தரும் நூல் என்று பொருள்படும்.

சிவஞானபோதத்திற்கு வழிநூலாக அமைந்தது சிவஞானசித்தியார். இதையும் இன்னுமொரு நூலாகிய இருபா இருபஃதையும் இயற்றியவர் அருணந்தி சிவாசாரியார். இவர் மெய்கண்டாரது சீடரானமை பற்றிய சுவையான கதையையும்,

இவர் சித்தியார் இயற்றிய வரலாற்றையும் பத்தாம் வகுப்பிற் படிப்பீர்கள்.

மெய்கண்டாரது இன்னொரு மாணவரான மனவாசகங் கடந்தார் 'உண்மை விளக்கம்' என்ற சாத்திரத்தின் ஆசிரியர் ஆவார். எஞ்சிய எட்டு நூல்களும் அருணந்தி சிவாசாரியாரின் மாணாக்கராகிய மறைஞானசம்பந்தருடைய சீடராகிய உமாபதி சிவத்தால் ஆக்கப்பட்டவை. இந்த எட்டு நூல்களின் தொகுதியைச் சித்தாந்த 'அட்டகம்' என்று குறிப்பிடுவர். சாத்திர நூல்களாகிய பதினான்கும் தோத்திர நூற்றொகுதியான பன்னிரண்டு திருமுறைகளுஞ் சைவ மக்களாகிய எமது பெருநிதியங்களாகும்.

[illegible]
[illegible]
[illegible]
Jaffna,

Melbourne Rest
[illegible]
[illegible]

To
Sivaswamy
[illegible]
[illegible]
[illegible]

From
[illegible]
St Mary Road
[illegible]
London
[illegible]

# 4. சமய தத்துவங்கள்

நாம் நமது கண்முன்னே இந்த உலகத்தைக் காண்கின்றோம். உலகத்திலே பல்வேறு உயிர்கள் உடம்போடு கூடித் தொழிற்படுவதையும் காண்கின்றோம். ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய உடம்பிலிருந்து உயிர் பிரிந்துவிட்டது என்றும் சொல்கிறோம். ஆகவே, உடம்பு வேறு உயிர் வேறு என்பதை ஒப்புக் கொள்கிறோம். உயிர் பிரிந்த உடம்பு, மண்ணையும் கல்லையும் போல உணர்வில்லாத சடப் பொருளாகிவிடுகின்றது. இவற்றுள்ளே உடம்பானது கட்புலனாகும் பருப்பொருள். அதாவது, காட்சிப் பொருள். உயிரோ கட்புலனாகாத நுண்பொருள். அதாவது, கருத்துப் பொருள். உடம்போடு கூடிய வழியே உயிரின் உண்மையை உணர்கின்றோம்.

நாம் காணும் உலகிலே ஒருபால் மண், கல் முதலான சடப் பொருள்களும், மறுபால் மரம், விலங்கு முதலான உயிர்ப் பொருள்களும் உள்ளன. இந்த உயிர்ப்பொருள்கள் முறையே மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் ஐம்பொறிகளாலும் அறியும் அறிவைப் பொறுத்து, ஓரறிவுயிர்கள் முதல் ஐயறிவுயிர்கள் ஈறாக, வளர்ச்சிப் படிவரிசையிலே ஒன்றினொன்று உயர்ந்து செல்லும் போக்கில் அமைந்துள்ளன. இவ்வளர்ச்சி வரிசையில் உச்ச நிலையை அடைந்துள்ள மக்களாகிய நாம், முற்சொன்ன ஐயறிவோடு மனத்தால் அறியும் பகுத்தறிவும் பெற்றுள்ளோம். ஆயினும், நமது அறிவு சிற்றறிவே; முற்றறிவு அன்று.

நாம் எவ்வாறு இந்த உலகத்தில் பிறவி எடுக்கின்றோம்? தெரியாது. நாம் விரும்பித் தெரிந்து கொண்டதா இப்பிறவி? இல்லை. உயிர்கள் தம் விருப்பத்துக்கு உடம்பைத் தெரிவு செய்ய முடியுமானால், எல்லா உயிர்களும் இன்பமாக வாழ்வதற்கு ஏற்ற நல்ல உடம்புகளையன்றோ எடுத்திருக்கும்? எத்தனையோ உயிர்கள் கொடிய நோயுள்ள உடம்பை எடுத்திருக்கின்றனவே. ஆகவே, பிறவி எடுப்பதில் எம்செயல் ஒன்றுமே இல்லை. இனி எம் தாய் தந்தையர் யார் என்பதையும் ஏனையோர் கூறவே அறிகின்றோம். இயல்பாக அறியும் அறிவு நமக்கு இல்லை. ஆகவே நாம் அறிவிக்க அறியும் இயல்புடையோம். ஆதலால், அறிவிக்க அறியும் நம் அறிவு முற்றறிவாகாது; அது சிற்றறி

வேயாம். அவ்வாறாயினும் நமக்குக் கிடைத்துள்ள பகுத்தறிவைக் கொண்டு நாம் அறிவாராய்ச்சி செய்யலாம்.

இந்த உலகம் எவ்வாறு தோன்றியது? ஏன் தோன்றியது? இதனைத் தோற்றுவித்தவர் யார்? இதில் வாழும் உயிர்கள் எங்கேயிருந்து வந்தன? உயிர்களை உடம்போடு சேர்த்து வைத்தவர் யார்? ஏன் அவ்வாறு சேர்த்து வைத்தார்? இவ்வாறெல்லாம் தருக்க முறையிலே வினாக்களை வினவி, இவற்றுக்கெல்லாம் பகுத்தறிவுக்கு ஒத்த முறையிலே விடை காண முயன்றுள்ளனர் நம்முன்னோர். இந்த முயற்சியின் பயனாக உருவாகியதே நமது சமயக் கோட்பாடான சைவ சித்தாந்தம். சித்தாந்தம் என்பதற்கு 'முடிந்த முடிவு' என்பது பொருள். அறிவித்தாலும் அறிய மாட்டாத சடப்பொருளாகிய உலகத்துக்கும், அறிவித்தால் அறிய வல்ல உயிர்களுக்கும் தலைவராகப் பிறர் அறிவிக்க வேண்டாது தாமே இயல்பாக அறியுங் கடவுள் ஒருவர் உண்டு என்பதைச் சைவசித்தாந்தம் அறுதியிட்டுக் கூறுகின்றது.

சைவசித்தாந்தம் முப்பொருள் உண்மை பற்றிப் பேசுகின்றது. நாம் மேலே கண்டவாறு, பொருளியல்பைக் கொண்டு பார்க்கும் போது ஒரு கோடியிலே அறியும் இயல்பில்லாத சடப் பொருள் உண்டு; மறுகோடியிலே தானே இயல்பாக அறியும் கடவுள் உண்டு. இந்த இரண்டு எல்லைகளுக்கும் இடையிலே ஓரறிவுயிர்களான மரம், செடி, கொடிகள் முதல் ஆறறிவுயிர்களான மக்கள் ஈறாக எண்ணிறந்த உயிர்கள் உள்ளன. இந்த மூவகைப் பொருள்களும் முறையே பாசம், பசு, பதி எனச் சித்தாந்த நூல்களிலே பேசப்படும். இவற்றுள் பாசம் என்பதற்குத் 'தளை', 'கட்டு', 'மலம்' முதலான பிற பெயர்களும் வழங்கும். பசு என்பதற்கு 'உயிர்', 'ஆன்மா', 'சீவன்', 'சீவான்மா' முதலான வேறு பெயர்களும் வழங்கும். பதி என்பதற்கு 'இறை' 'கடவுள்', 'சிவம்', 'முதல்வன்', 'பரமசிவன்' முதலான பல பெயர்கள் உண்டு.

இம்முப்பொருள்களும் என்றும் உள்ளவை; ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றியது அன்று. ஆதலால் இவை அநாதியானவை என்று சொல்லப்படும். அவ்வாறு கொள்ளாது, பதி ஒன்றே உள்பொருள் என்றும், ஏனை இரண்டும் அப்பதியாற் படைக்கப்பட்டவை என்றும் கொள்ளின், தருக்க முறையான விளக்கம் கூறப்பட முடியாத பல சிக்கல்கள் எழும். உதாரணமாக அத்தகைய ஒரு சிக்கலைப் பார்ப்போம். பதியின் வேறாக வேறு ஒன்றும் இல்லாதவிடத்து, அப்பதி பசுக்களையும் பாசத்தையும் எதனிலிருந்து படைத்தார் என்பது வினா. இல்லதிலிருந்து

உள்ளது தோன்றாது என்பதால், பதி தம்மிடமிருந்தே அவற்றைப் படைத்தார் எனல் வேண்டும். எனவே, பசுக்களுக்கும் பாசத்துக்கும் இயல்பாய் உள்ள குறைபாடுகள் பதிக்கும் உள்ளன என்றாகிவிடும். அவ்வாறாயின், அது பதியின் இலக்கணத்தோடுமுரண்படும். இதுபோலவே 'ஏன் படைத்தார்?' என்னும் வினாவுக்கும் பகுத்தறிவுக்கு ஒத்த விளக்கம் கூற முடியாது இடர்ப்பட வேண்டும். இவ்வாறெல்லாம் வினாக்களை எழுப்பிச் சிந்தித்துத் தெளிந்த பின்பே மெய்கண்டார் போன்ற பெரியோர் சைவசித்தாந்தக் கோட்பாட்டைப் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் அடிப்படையிலே கட்டியெழுப்பினர். சைவசித்தாந்தம் இம்முப்பொருள்களையும் அவற்றிடையே உள்ள தொடர்பினையும் தருக்க முறையிலே மிக விரிவாக ஆராய்ந்து, முழுமையான கோட்பாடாகத் தருகின்றது. இங்கே ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

# 5. பதி

பசுக்களுக்கும் பாசங்களுக்கும் தலைமை பூண்டிருக்கும் தன்மையை இப் பெயர் உணர்த்தி நிற்கின்றது. சித்தாந்த நூல்கள் பதியை இரண்டு நிலைகளில் வைத்துப் பேசுகின்றன. அவற்றுள் ஒன்று உலகுயிர்களின் சார்பில் வைத்து நோக்காது, தானேயாய்த் தனித்து நிற்கும் நிலையில் வைத்து நோக்குவது. இது பதியின் சொரூப இலக்கணம் எனப்படும். மற்றது உலகுயிர்களின் சார்பில் வைத்து நோக்குவது. இது பதியின் தடத்த இலக்கணம் எனப்படும். பதியின் சொரூப இலக்கணம் வாக்குக்கு எட்டாதது; இதனைச் 'சொல்லிறந்து நின்ற தொன்மை' என்று மாணிக்கவாசகர் கூறுவர். மாணிக்கவாசகர் போன்ற சிவன்முத்தர் தம் உள்ளத்திலே பதியோடு ஒன்றி நின்று காணுவது இது. 'ஒன்றாய், பரிபூரணமாய், அறிவுக்கறிவாய், நின்மலமாய், உயிருக்குயிராய், குறியும் குணமும் இல்லாததாய், அருவும் உருவும் அருவுருவுமாய், இவை அல்லாததுமாய், அண்டிதமாய், ஆனந்தமாய் விளங்குவது' என்று உமாபதி சிவாசாரியார் இவ்விலக்கணத்தைக் கூறுவர்.

இனி, உயிர்களுக்கு அருள்செய்யும் வகையில், பதியின் தடத்த இலக்கணமே எம்மனோருக்கு முக்கியமானது. உயிர்களுக்கு அருள்செய்தற் பொருட்டுப் பதி தனது சிறப்பியல்பான சொரூப நிலையிலிருந்து படியிறங்கி உலகுயிர்களோடு தொடர்பு கொண்டிருக்கும் நிலையே தடத்த நிலை எனப்படுவது. இந்நிலையிலே பதிக்குக் குணங்குறிகள் பேசப்படும்; சிவன், முதல்வன், இறைவன் முதலான ஆண்பாற் பெயர்களும் கொடுக்கப்படும். சிவன் தன்னோடு வேறறக் கலந்து நிற்கும் சத்தியோடு சேர்ந்து படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் செய்வன். உயிர்களுக்குத் தனு (உடம்பு), கரணம் (மனம் முதலிய கருவி) புவனம் (உடம்புக்கு ஆதாரமாகிய உலகம்), போகம் (அநுபவிக்கப்படும் பொருள்) ஆகியவற்றை முதற் காரணமாகிய மாயையிலிருந்து தோற்றுவித்தலே படைத்தலாகும். அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட தனு, கரண, புவன போகங்களை நிலைநிறுத்துதல் காத்தலாகும். உயிர்களை இருவினைப் பயன்களாகிய இன்பத் துன்பங்களில் அமிழ்த்துதல் மறைத்தல் எனப்படும். உயிர்களுக்குப் பாசத்தை நீக்கிச்

சிவத்துவத்தை விளக்குதல் அருளல் எனப்படும். தனு, கரண, புவன போகங்களை முதற் காரணத்திலே ஒடுக்குதல் அழித்தலாகும்.

தமது உடலிலே உயிர் கலந்திருப்பது போலச் சிவன் உயிர்களில் கலந்து அவையேயாகி நிற்பன். கண்ணும் உயிரின் அறிவும் ஒரு பொருளை ஒருங்கு காணுதல் போல, அவன் உயிருக்கு உயிராய் உடன் நின்று அறிவன்; பொருட்டன்மையால் உயிர்களின் வேறாகியும் நிற்பன். இறைவன் உலகுயிர்களின் வேறாயும், அவற்றோடு ஒன்றாயும், உடனாயும், நிற்கும் நிலையைத் திருஞானசம்பந்தர்:

''ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண் குணமூன் றாய்
மாறா மறை நான்காய் வருபூதம் அவை ஐந்தாய்
ஆறார் சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான் இடம் வீழிம்மிழி லையே''

என்ற பாடலில் அருமையாக விளக்கியுள்ளார். இக்கொள்கையே சைவத்தின் உயிர்நாடி. சைவசித்தாந்தம் கூறும் அத்துவித விளக்கத்துக்குத் திறவுகோலாய் உள்ளதும் இதுவே.

இத்தடத்த நிலையிலே முதல்வன் அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று வடிவங்களைக் கொள்வான். அருவத் திருமேனியுடையபோது சிவன் எனவும், அருவுருவத் திருமேனியுடையபோது சதாசிவன் எனவும், உருவத் திருமேனியுடையபோது மகேசுரன் எனவும் பெயர் பெறுவன். இறைவன் எத்திறம் நிற்கின்றோனா அத்திறம் சத்தியும் நின்று வேறுவேறு பெயர் கொள்வாள். உதாரணமாகப் பரமசிவனுடைய சத்திக்குப் பராசத்தி என்றும், சதாசிவனுடைய சத்திக்கு மனோன்மணி என்றும், மகேசுரனுடைய சத்திக்கு மகேசுவரி என்றும், உருத்திரனுடைய சத்திக்கு உமை என்றும், விட்டுணுவினுடைய சத்திக்கு இலக்குமி என்றும், பிரமாவினுடைய சத்திக்குச் சரசுவதி என்றும் பெயர்கள் வழங்கும். இறைவன் இயற்றும் ஐந்தொழில்களுக்கும் சத்தி துணையாக நிற்பாள். சக்தி என்பது தீயிலே சூடுபோலச் சிவத்தோடு பிரிவின்றி உளதாகிய வல்லமையாம். தீயின் சூடானது தொழில் வேறுபாட்டால் வறுத்தல், எரித்தல், அவித்தல், பொரித்தல் என்று பலவகைப்பட்டாலும், தீயின் குணமாகிய சூடு ஒன்றே. அது போலச் சிவசத்தியானது தொழில் வேறுபாட்டல் பராசத்தி, மனோன்மணி முதலாகப் பலவகைப் பெயர் பெற்றாலும் அச்சத்தி ஒன்றுதான்.

தடத்த நிலையிலே இறைவனுக்குக் குணங்களும் கூறப்படும். இறைவன் உயிர்களுக்கு அருள்செய்யும் திறங்களை உட்கொண்டு

மெய்யன்பர் அவனுக்குப் பலப்பல குணங்களையும் அக்குணங்கள் உடைமையைக் குறிக்கும் பலப்பல பெயர்களையும் கூறுவர். இக் குணங்களுள் எட்டுக் குணங்கள் சிறப்பானவை. இறைவன் எல்லா உயிர்களுக்கும் உயிராய் நின்று அறிதலால் எல்லாமறி பவன். இக்குணம் முற்று முணர்தல் எனப்படும். அவன் இயல் பாகவே பாசங்களின்றும் நீங்கினவனாய் இருத்தலால் என்றும் அறிபவன். என்றுமறிதல் அநாதி போதம் எனப்படும். இறை வன் எதையும் விசாரித்து அறியாமல் இயல்பாகவே அறிபவனா தலால், இயற்கையுணர்வினன் ஆவன். இயற்கையுணர்வு நிராமயான்மா எனப்படும். இறைவன் எல்லா நிறைவும் உடைய பரிபூரணனாததால் வரம்பில் இன்பமுடையவன். வரம்பிலின்ப முடைமை திருப்தி எனப்படும். அவன் மற்றொருவரின் ஏவ லுக்கு அமைய வேண்டாத தன்வய முடையவன். தன்வயத்தனா தல் சுவதந்திரத்துவம் எனப்படும். இன்னும், இறைவன் எல்லா வல்லமையும் (அதாவது முடிவிலாற்றல்) உடையவன் . முடிவி லாற்றலுடைமை அநந்த சத்தி எனப்படும். அவன் உயிர்கள் மேல் அளவில்லாத அருளுடையவன். பேரருளுடைமை என்னும் இக்குணம் அலுப்த சத்தி எனப்படும். இனி, அன்பர்கள் தன்னை நோக்கிச் செய்யும் தியானம், பூசை முதலியவற்றின் பொருட்டு இறைவன் கொள்ளும் உருவம் மாயையினால் ஆக்கப்படாதது. அது சிவசத்தியாகிய திருவருட் குணங்களுள் இன்னது இன்னது இன்ன இன்ன அவயவம் என்று பாவிக்கப்படும் தூய உடம்பு ஆகும். தூயவுடம்பு விசுத்த தேகம் எனப்படும்.

மேலே சொல்லப்பட்ட எண்குணங்களையும் சத் (உள் பொருள்) சித் (அறிவுடைய பொருள்) ஆனந்தம் (இன்பமான பொருள்) என்னும் மூன்றிலே அடக்கி, இறைவன் சச்சிதானந்த மாய் இருக்கின்றான் என்றும் நூல்கள் கூறும். சிற்றறிவினராகிய நாம் இறைவன் எப்படிப்பட்டவன் என்பதை அறிய வேண்டி யிருப்பதால் இவை குணங்கள் என்று ஒருவாறு வரையறை கற்பிக்கப்பட்டது. உண்மையிலே இறைவன் குணங்களைக் கடந் தவன். இவ்வுண்மையை அப்பர் சுவாமிகள் இவ்வாறு கூறுவர்:

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடையனல்லன் ஒருவ னல்லன்
ஒரூர னல்லன் ஒருவம னில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.

## 6. பசு

இனி, பசு எனப்படும் உயிர்களைப் பார்ப்போம். 'பசு' என்னும் சொல்லுக்குப் பாசத்தாற் கட்டுண்டது என்பது பொருள். உயிர்கள் எண்ணற்றவை; பதியைப் போலவே அநாதியானவை; என்றும் உள்ளவை. ஆனால் அநாதியாகவே பாசம் எனப்படும் மலத்தினாற் கட்டுண்டிருப்பவை. அதனால், அவை அறியக்கூடிய சித்துப் பொருளேயாயினும், அறிவு மழுங்கி இருளிலே மூழ்கியிருப்பவை; இறைவன் அவற்றுக்கு உடம்பு முதலிய கருவிகளைக் கொடுத்து அறிவித்தாலன்றி அறியமாட்டாதவை; இவ்வாறு உயிர்களை இருளில் ஆழ்த்தி வைத்திருக்கும் மூல மலத்துக்கு ஆணவம் என்று பெயர் வழங்கும். 'ஆணவம்' என்னும் சொல்லுக்கு உயிரை அணுத்தன்மைப்படுமாறு செய்வது என்பது பொருள். அதாவது உயிரைச் சிற்றறிவும் சிறுதொழிலும் உடையதாக்குதல் என்பதாம். ஆணவ மலம் உயிர்களை இடையிலே வந்து பற்றுவதற்குக் காரணமில்லை. அது, அரிசியானது தவிட்டுடனும், செம்பானது களிம்புடனும், கூடியிருத்தல் போல உயிரோடு அநாதியாகவே கூடியிருக்கின்றது.

உயிர்களுக்கு நோய் செய்யும் இந்த ஆணவ மலத்தை நீக்குவதற்காகவே இறைவன் அவைகளுக்குப் பிறவிகளைக் கொடுக்கின்றான். வைத்தியன் நோயாளியை வைத்தியசாலையில் வைத்து மருந்து கொடுத்துக் குணப்படுத்துவது போல இறைவனாகிய வைத்தியன் ஆணவமாகிய நோயை நீக்குவதற்காக உடம்பாகிய வைத்தியசாலையில் இட்டுத் தனது திருவருளாகிய மருந்தைக் கொடுக்கின்றான். பிறவி எடுத்த உயிர்கள் வினைகளைச் செய்கின்றன. வினைகளுக்குக் கன்மம் என்றும் பெயருண்டு ஆணவத்துக்கு அடங்கிச் செய்யும் வினை தீவினையாகும். ஆணவத்தை அடக்கிச் செய்யும் வினை நல்வினையாகும். தீவினைக்குப் பயன் துன்பமும் நல்வினைக்குப் பயன் இன்பமும் ஆகும். இந்த இரு வகை வினைகளும் உயிர்களைச் சேர்ந்து நிற்கின்றன. இறைவனுடைய ஆணையால் வினைப்பயன்களை அனுபவிப்பதற்கு உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றன. அனுபவித்தலாலே வினைகள் தொலைகின்றன.

இவ்வாறாக உயிரோடு தொடர்புள்ள மூன்று பொருள்கள் உண்டு. அவையாவன : (1) உயிரை மயக்கித் தீய வழியிற்

செலுத்தும் ஆணவம். (2) அந்த ஆணவத்தால் உயிர்கள் செய்யும் கன்மம். (3) கன்மத்தைச் செய்வதற்குக் கருவியாய் இருக்கின்ற உடம்பு. இந்த மூன்றும் உயிரை இறைவனோடு சேரவிடாமல் தடுத்து வைத்துக் கொண்டிருப்பதாற் 'பாசம்' எனப்படும். பிறவி எப்போது உண்டோ அப்போதே பிறவியிலே செய்யப்படும் வினைகளும் உண்டு. பிறவி அநாதியாதலால் வினைகளும் அநாதியாகும். ஆகவே, உயிரும் அதைப் பிணித்திருக்கும் மலங்களும் அதற்குரிய பிறவியும் தொடக்கமில்லாதவையாம்.

இனி, உயிர்கள் எடுக்கும் பிறவிகளோ மிகப் பல. மலங்களிலிருந்து முற்றாக விடுபட்டு முத்தியடையும் வரை, அவை மாறிமாறிப் பல பிறவிகளை இருவினைப் பயனுக்கு ஏற்றவாறு எடுக்கும். மணிவாசகப் பெருமான் தாம் முன்னே பிறந்து கழித்த பிறப்புக்களைப் பின்வருமாறு பாடுகின்றார்:

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லா மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்.

உயிர்கள் புல், பூடு, மரம் ஆகிய ஓரறிவுடைய தாவரங்களாகப் பிறக்கும்; புழுக்கள் முதலான கீழ்நிலை உயிர்களாகப் பிறக்கும்; பாம்பு முதலான ஊர்வனவாகப் பிறக்கும்; பறவைகளாகவும் பல்வேறு விலங்குகளாகவும் பிறக்கும்; கல்லா மனிதர், பேய் பூதம் போன்ற பகுத்தறிவு சிறக்காத மக்களாகவும் பிறக்கும்; மறப்பண்பு மிக்க அசுரர். அரக்கர் முதலானோராகவும் பிறக்கும்; தவமுடைய முனிவராகவும் பிறக்கும்; தேவராகவும் பிறக்கும்; அறிவு விருத்திப் படிவரிசையிலே ஆகக் கீழ் நிலையிலுள்ள தாவரங்கள் முன்செய்த வினைப்பயனை அனுபவிப்பன. அவை அதிகம் வினை செய்வதில்லை. ஆதலால் அவைகளுக்கு ஆணவம் தீர்வது குறைவு. பறவை, மிருகம் முதலியன வினை செய்வனவாயினும் நல்வினை தீவினைகளைப் பகுத்தறிய மாட்டாமையால், அவை தம்மைத் திருத்திக் கொள்ள இயலாதன. பகுத்தறிவு படைத்த மனிதப் பிறவியிலேயே உயிர்கள் தம்மையும் தலைவனையும் அறிந்து வீடு பெற முயல்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. நல்வினைப் பயனாகத் தேவராய்ப் பிறந்து இன்பம் அனுபவிப்போரும் முத்தி பெற வேண்டுமாயின் மண்ணுலகிலே மக்களாய்ப் பிறப்பெடுத்தல் வேண்டுமென்று நூல்கள் கூறுகின்றன. 'வானிடத்

தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச்சிப்பர்'' என்பது சிவஞான சித்தியாரில் வரும் கூற்று.

மனிதப்பிறவி எடுத்த உயிருக்குக் கீழே உயிரறிவு குறைந்தும் சடப் பண்பு கூடியும் செல்லும் பிறவிகள் உள்ளன; மேலே, உயிரறிவு கூடியும் சடப்பண்பு குறைந்தும் செல்லும் தன்மை கொண்ட முனிவர், தேவர் முதலான உயர்ந்த பிறவிகள் உள்ளன. மனிதப் பிறவி எடுத்த உயிரிடம் விலங்குப் பண்பு பாதியும் தெய்வப் பண்பு பாதியும் கலந்துள்ளன. உயிருக்குச் சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் ஓர் இயல்பு உண்டு. அதாவது, உயிர் எப்பொருளைச் சார்ந்து நிற்கின்றதோ அப்பொருளாகும் இயல்புடையது. அது ஆணவத்தைச் சார்ந்து நின்றால் அசத்தாகும்; சிவத்தைச் சார்ந்து நின்றால் சத்தாகும். ஆதலால் உயிர் சதசத்து என்று சொல்லப்படும். நாம் விரும்பினால் நம்மைக் கீழ் நிலைக்குத் தள்ளலாம்; அல்லது மேல்நிலைக்கு உயர்த்தலாம். நமக்குப் பகுத்தறிவு உண்டு. அதைப் பயன்படுத்தி நமக்கு நல்லது எது, தீயது எது என்று நாடித் தீயதை விடுத்து நல்லதைச் செய்யலாம். ஆணவத்துக்கு அடிமையாகித் தீய வழிகளிற் செல்வது எளிது. ஆனால், ஆணவத்தை அடக்கி நல்வழியிற் செல்வது அவ்வளவு எளிதன்று. ஆயினும் நாம் நமது சமய நெறியில் நின்று இயன்ற அளவு முயன்றால், நமக்கு இறைவன் முத்தி தருவான். இப்பிறப்பிலே கைகூடாது போயினும் இனிவரும் பிறப்பிலேனும் சித்திப்பது திண்ணம்.

Sivaneswary
Sooriyakumar

S Sivaneswary Nallathamby

My best all the best

Komathy Sivanathan
Sooriyakumar Sivaneshan

Gowri Vinnasithamby
Suwathinidevi

Jharshini
Sripirabalini

## 7. பாசம்

முன்னே பதியைப் பற்றியும் பசுவைப் பற்றியும் கூறப்பட்ட பகுதிகளில் பாசத்தைப் பற்றிய சில கருத்துகள் இடம்பெற்றுள் ளன. இங்கே பாசம் பற்றி ஓரளவு விரிவாகப் பார்ப்போம்.

'பாசம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குக் 'கட்டு' 'தளை' என்பன நேரான தமிழ்ச் சொற்கள். பாசம் உயிரை மாசுபடுத்துவது என்பதால் அதற்கு 'மலம்' என்ற பெயரும் பொதுவாக வழங்கப் படுகின்றது. 'ஆணவம்', 'கன்மம்', 'மாயை' எனப் பாசம் மூவகைப்படும். இவை மும்மலங்கள் என்று சொல்லப்படுவது வழக்கம். இவை மூன்றும் அறிவில்லாத சடப்பொருள்கள்.

### I. ஆணவம்

மும்மலங்களுள் ஆணவமே மிக்க வல்லமையுள்ளதும் மிகக் கொடியதும் ஆகும். இது ஒன்றேயாயினும் எல்லா உயிர்கள் தோறும் வெவ்வேறாகி நின்று அவற்றின் அறிவையும் தொழிலை யும் மறைக்க வல்லது. ஆதலால் இது 'இருள் மலம்' என்றும் சொல்லப்படும். உயிர்களோடு செம்பிற் களிம்புபோல அநாதி யாய்ச் சேர்ந்து நிற்பதால் இதற்குச் 'சகசமலம்' என்றும் 'மூலமலம்' என்றும் பெயர்கள் உண்டு. 'நான் பெரியவன்' என்னும் அகந்தையும் 'எனது நன்மையே முதன்மையானது' என்னும் மமதையும் இந்த ஆணவத்தினாலே நம்மிடம் உண்டா கின்றன. மேலும் காமம், வெகுளி, மயக்கம், கொடுமை என் பன போன்ற தீய குணங்கள் எல்லாம் தோன்றுவதற்கு இந்த ஆணவமே காரணம். இது நம்மை நல்ல வழியில் செல்லவிடாது தீயவழிகளிலே செலுத்தும். ஆயினும், இக்கொடிய ஆணவத்தை வெல்வதற்கு இறைவனுடைய திருவருள் எப்போதும் நம்மைச் சூழ்ந்துள்ளது. உண்மையில் நாம் எல்லாம் இந்தத் திருவருள் வெள்ளத்திலேயே இருக்கின்றோம். ஆனால் ஆணவ மயக்கினால் அதனை அறியாதிருக்கிறோம். நாம் நமது சமயங் கூறும் அறவழி யில் நின்று, நமக்கும் பிறர்க்கும் நன்மையையே செய்து, அன் பைப் பெருக்கி வருவோமானால் ஆணவத்தை வெல்லலாம். அதற்கு நாம் திருவருளை உணர்ந்து இறைவனைப் பற்றி நிற்க வேண்டும். ஆணவம் நம்மைப் பற்றிய பற்று அகல்வதற்கு நாம் அப்பற்று இல்லாத இறைவனைப் பற்றி நிற்பதே வழி. ஆணவம்

உள்பொருளாதலால் அதற்கு அழிவில்லை. உயிரானது இறைவனைப் பற்றி நிற்கும் முத்தி நிலையிலே ஆணவம் முற்றாக வலி கெட்டு மடங்கிவிடும். எவ்வாறு சூரிய ஒளியிலே விளக்கொளி தோன்றாமல் மறைகின்றதோ, அவ்வாறே முத்திநிலையிற் சிவமாகிய பேரொளி உயிரிலே பிரகாசிக்கும் போது உயிரைப் பற்றிய ஆணவம் மறைந்துவிடும்.

## II. கன்மம்

ஆணவத்தின் பிடியிலிருந்து உயிரை விடுவிப்பதற்காகவே அருள் வள்ளலாகிய இறைவன் நமக்கு மனம் முதலிய கருவிகளோடு கூடிய உடம்பைத் தந்துள்ளான். உடம்பின் துணைகொண்டு நாம் பல வினைகளைச் செய்கின்றோம். இவ்வினைகள் பொதுவாக நல்வினை, தீவினை என இருவகைப்படும். ஆணவத்தை அடக்கி, ஆன்மாவை ஈடேற்றும் செயல்கள் நல்வினைகளாம். இறை பத்தி, அன்பு, நீதி, உண்மை, பொறுமை முதலியன நல்வினைப் பண்புகளாகும். இறைவனுக்கும் மெய்யடியாருக்கும் செய்யப்படும் வழிபாடும் தொண்டுகளும் சிவ நல்வினை அல்லது **சிவ புண்ணியம்** எனப்படும். மற்றைய உயிர்களுக்குச் செய்யப்படும் நல்வினை பசு நல்வினை அல்லது **பசு புண்ணியம்** எனப்படும். இதற்குமாறாக, ஆணவத்துக்கு அடங்கி, ஆன்மாவுக்குக் கேடுவிளைக்கும் வினைகள் தீவினைகளாகும். ஆசை, கோபம், பொறாமை, செருக்கு, அநீதி, கொடுமை முதலியவை தீவினைக் குணங்களாம். தீவினைகள் சிவசம்பந்தமாகச் செய்யப்படும் போது சிவத்தீவினை அல்லது **சிவத்துரோகம்** எனப்படும். மற்றைய உயிர்கள் சம்பந்தமாகச் செய்யப்படும்போது பசுத் தீவினை அல்லது **பசுத் துரோகம்** எனப்படும்.

இனி, வினையானது மனம், மொழி, மெய் என்னும் மூன்றின் வழியாகச் செய்யப்படும். களவு செய்ய வேண்டுமென எண்ணுதல் மனத்தினால் செய்யப்படும் வினை. களவு செய்யுமாறு மற்றொருவனை ஏவுதல் மொழியினால் செய்யப்படும் வினை. களவு செய்தல் மெய்யினால் செய்யப்படும் வினை. மேலே சொன்ன நல்வினை தீவினைகள் எல்லாம் மனத்தினால் செய்யப்படுவனவும், மொழியினால் செய்யப்படுவனவும், மெய்யினால் செய்யப்படுவனவும் எனத் தனித்தனி மூவகைப்படும். இவை தவிர, 'வெறுவினை' என்ற ஒருவகை வினையும் உண்டு. இது நல்வினை தீவினை என்ற வகையிலே சேராது. உணவு சமைத்தல், ஓவியம் வரைதல், ஆடை நெசவு செய்தல் முதலியன வெறு வினைகளாம்.

வெறுவினை தவிர, மேலே சொல்லப்பட்ட நல்வினை தீவினைகள் நமது சமய மரபிலே கன்மம் என்று சொல்லப்படும். நல்வினை தீவினை ஆகிய இரண்டையும் இருவினை என்று சொல்லுவது வழக்கம். நாம் செய்யும் ஒவ்வொரு வினைக்கும் பலன் உண்டு. அது செய்து முடிந்த உடனும் கிடைக்கும்; காலம் தாழ்த்தியும் கிடைக்கும். நல்வினையின் பயன் இன்பமாயும் தீவினையின் பயன் துன்டமாயும் வரும். நல்வினைப் பயனைப் புண்ணியம் என்றும், தீவினைப் பயனைப் பாவம் என்றும் பொதுவாக நாம் சொல்வதுண்டு.

உயிர்கள் அநாதியாகச் செய்த கன்மங்களுக்கு ஈடாகவே பிறவி எடுக்கின்றன. பழவினைத் தொகுதியில் நாம் இப்பிறப்பில் அனுபவிக்கும் பகுதிக்குப் பிராரத்தம் என்பது பெயர். பிராரத்த கன்மத்தை அனுபவிக்கும்போது நாம் புதிய வினைகளும் செய்கின்றோம். நாம் இப்பிறப்பிலே செய்யும் புண்ணிய பாவங்களுக்கு ஆகாமியம் என்பது பெயர். இனி அநாதியாய் ஈட்டப்பட்ட பழவினைத் தொகுதியில் அனுபவித்துத் தீர்ந்தது போக எஞ்சியிருக்கும் பகுதிக்குச் சஞ்சிதம் என்பது பெயர். பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் என்னும் மூன்றையும் ஓர் உவமையிலே பொருத்திக் காண்போம்.

வழிவழியாக உழுது பயிரிடும் ஓர் உழவனை எடுத்துக் கொள்வோம். முன்பு அறுவடை செய்து களஞ்சியத்தில் வைத்திருந்த நெல்லின் ஒரு பகுதியை அவன் உண்டு அனுபவிக்கின்றான். அது பிராரத்த வினை போன்றது. உண்டு அனுபவிப்பது மட்டுமல்லாமல் அவன் அதில் ஒரு பகுதியை விதை நெல்லாக விதைத்து. மேலும் புதிய நெல்லை அறுவடை செய்கின்றான்; இவ்வாறு ஈட்டப்படும் புதிய நெல் ஆகாமிய வினை போன்றது. இனி, அவன் இப்புதிய நெல்லையும் பயன்படுத்திய பின் எஞ்சியதைக் களஞ்சியத்திலே சேர்க்கின்றான். இவ்வாறு களஞ்சியத்திலே எஞ்சிருக்கும் நெல் சஞ்சித வினை போன்றது.

இங்கே நாம் ஊழ் என்பதையும் ஒரளவு விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். இதற்கு விதி என்றும் பெயருண்டு. இன்னது செய்தால் இன்னது வரும் என்பது விதி,நல்வினை செய்தால் இன்பமும், தீவினை செய்தால் துன்பமும் உண்டாகும் என்பதும் விதியே. முயற்சி செய்தால் அதற்குத் தக்க பலன் கிடைக்கும் என்பதும் விதி. ஊழ் என்னும் சொல்லுக்கு 'முதிர்ந்தது', 'பக்குவப் பட்டது' என்பதே பொருள். சஞ்சித வினைத் தொகுதியிலே, பலன் தருவதற்குப் பக்குவப்பட்டிருக்கும் வினையின் பகுதிக்கு உரிய பெயரே ஊழ் என்பது. ஆயினும், பொதுவாக

அச்சொல் பழவினைக்கும், பழவினைப் பயனுக்கும், அப்பயன் கிடைக்கும் நியதிக்கும் பெயராக வழங்குகின்றது. நாம் இப்போது அனுபவிக்கும் இன்ப துன்பங்களின் ஒரு பகுதி ஊழின் பலன்; மற்றொரு பகுதி நாம் இப்போது செய்யும் முயற்சியின் பலன். ஊழின் பலன் துன்பமாயிருந்தால், அது நாம் இப்போது செய்யும் நல்ல முயற்சியின் பலனைக் குறைத்துவிடும். மறுதலையாக ஊழின் பலன் இன்பமாயிருந்தால், நாம் இப்போது அற்ப முயற்சி செய்தாலும் அதிக பலனைத் தரும். இப்போது நாம் ஊழினால் துன்பம் அனுபவிக்கின்றோம் என்பதற்காக முயற்சி செய்யாமல் இருத்தலாகாது. முயற்சி செய்தால் அதற்குத் தக்கதாகத் துன்பங் குறையும். ஊழ் தன்னுடைய முயற்சியைச் செய்ய நாம் நம்முடைய முயற்சியைச் செய்ய வேண்டும். ஊழ் தனது பலனைத் தரும்; நமது முயற்சி அதற்குரிய பலனைத் தரும். இதனையே திருவள்ளுவர் கூறுகின்றார் ;

''தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்'' (தெய்வம் = ஊழ்)

### III மாயை

உயிர்கள் தம்மைப் பிணித்துள்ள ஆணவ மலத்தை நீக்கி, முத்தி இன்பத்தைப் பெறுவதற்கு இறைவன் அவற்றுக்குத் தனு கரண புவன போகங்களை ஆக்கிக் கொடுக்கின்றான் என்பதை முன்னே கண்டோம். தனு கரணம் முதலியவற்றை ஆக்குவதற்கு முதற் காரணமாய் இருப்பதே மாயை ஆகும். ஒரு காரியம் ஆவதற்கு மூன்று காரணங்கள் தேவை. உதாரணமாக, பானையாகிய காரியத்திற்கு மண் முதற் காரணம்; திரிகை துணைக் காரணம்; குயவன் நிமித்த காரணம். அதுபோல, உடம்புகளும், அவ்வுடம்புகள் நிலைப்பதற்கு வேண்டிய உணவு முதலிய நுகர்ச்சிப் பொருள்களும், இவை எல்லாவற்றுக்கும் ஆதாரமான உலகமும் உண்டாவதற்கு முதற் காரணமாயிருப்பது மாயை; துணைக் காரணம் சிவசத்தி; நிமித்த காரணம் இறைவன். மாயை மிகவும் நுண்மையான பொருள். அதிலிருந்தே நாம் காணும் இந்தப் பிரபஞ்சம் தோன்றியது. எது போலவெனில்; ஒரு சிறிய ஆலம் வித்திலிருந்து பல கிளைகளும், பல கொம்புகளும், பல குழைகளும், பல பூக்களும், பல காய்களும், பல கனிகளும் பிறக்கின்றது போலெனலாம். சர்வ சங்கார காலத்தில் ஒடுங்கும்போதும் மாயையிலிருந்து தோன்றிய மாயா காரியங்கள் அனைத்தும் மாயையிலேயே அடங்கும்.

இந்த மாயை இருப்பதனாலே உயிர்கள் உடம்போடு கூடி, வினைகளைச் செய்து, அறிவு விளக்கம் பெறுகின்றன. எல்லா உயிர்களும் இன்பத்தையே நாடுகின்றன. பகுத்தறிவு வளர்ச்சியடைந்த நிலையில், தீவினை செய்தால் துன்பமும் நல்வினை செய்தால் இன்பமும் உண்டாகும் என்பதை உணர்கின்றன. மக்கட் பிறவி எடுத்த உயிர்கள் இவ்வாறு ஆராயும் போது, உலகப் பொருள்களாற் பெறும் இன்பங்கள் எல்லாம் சிற்றின்பங்கள் என்று தெளிந்து, பேரின்பப் பொருளாகிய இறைவனை அடைய அவாக்கொள்ளும் நிலையொன்று ஒரு காலத்தில் உண்டாகும். அந்த நிலை, இறைவன் தாளிலே தலை வைக்கும் முத்திக்கு வழி காட்டிவிடும். முத்தி நிலையிலே மாயை உயிரை விட்டு நீங்கும். ஆயினும், அது ''விடிவாமளவும் விளக்குப்போல்'' அதுவரையும் உயிர்களுக்கு உதவி செய்யும். ஆதலால் நாம் உயிரை ஓம்புதற்கு நமது உடம்பையும் ஓம்ப வேண்டும்.

''உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே''.

—திருமூலர்.

Jeyarajah
Perinpanathan
Sellaiyah
Chinthira
Senkathirchelvan ✓
Vakeeswariyamma
Tharmakulasingam
Sivanathan ✓
Sivaneshan ✓
Vinnasithamby ✓
Narendaran ✓
Thevarayah
30 Komathy ✓
Birantha

✓ Nallathamby (Janarthani)
✓ Varatharajaperumal
Sivathiran
Kamalthashan
Gowri
Aruvel
Yogeswaran
mathivathany
uma (Jeyarajah)
Gnanasubramaniam
Arivalaki
yaso
Nirmala
Balaskandan

# 8. நடராசரும் தட்சிணாமூர்த்தியும்


## (அ) நடராசப் பெருமான்

பெருங்கருணை வள்ளலாகிய இறைவன் ஆன்மாக்கள் பொருட்டுத் தனு கரண புவன போகங்களைப் படைத்தருளுகிறான் என்று முன்பு குறிப்பிட்டோமல்லவா? ஆன்மாக்கள் பொருட்டு அவன் செய்யுந் தொழில் இப்படைத்தல் மட்டுமன்று; படைத்தலோடு காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என ஐந்து தொழில்களை ஆன்மாக்களின் நன்மை கருதிச் செய்கின்றான். காத்தலாவது படைக்கப்பட்ட தனு கரண புவன போகங்களைத் தத்தமது செயல்களில் நிலைத்து நிற்கச் செய்தல். அழித்தலாவது இவ்வாறு நிலைத்து நிற்கும் தனு முதலியவற்றை (ஊழி முடிவில்) அவை தோன்றுதற்கு முதற் காரணமாய் இருந்த மாயையில் மீண்டும் ஒடுங்கும்படி செய்தல். ஆணவமல சம்பந்தத்தினால் அறியாமையில் அழுந்தி நிற்கும் உயிர்களைப் பிறவிகள் தோறும் இன்பதுன்பங்களை அனுபவிக்கச் செய்து, இன்ப துன்பங்களாற் பயனில்லை என்ற பக்குவநிலையை எய்தச் செய்தலே மறைத்தலாகும். அருளலாவது பக்குவப்பட்ட ஆன்மாக்களின் மலமாகிய மாசை நீக்கி அவற்றிற்கு வீடுபேற்றை நல்குவதாம்.

பிள்ளைகளே, நீங்கள் சிவன் கோயில்கள் தோறும் இறைவனை நடராச வடிவத்திற் கண்டு கும்பிட்டிருப்பீர்கள். இந்த நடராச வடிவமானது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாகிய ஐந்து தொழில்களையும் உணர்த்துங் கோலமாகும். அதனாலே திருச்சிற்றம்பலத்தில் நடராசப் பெருமான் ஆடும் ஆனந்தக் கூத்தைப் பஞ்ச கிருத்தியத் திருநடனம் என்றும் வழங்குவர்.

இந்த நடனத்தின் பொருளைச் சாத்திரங்களில் ஒன்றாகிய உண்மை விளக்கம் என்ற தமது நூலில் மனவாசகங்கடந்த தேவனார் அழகாக எடுத்துச் சொல்லுகிறார்.

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்— ஊற்றமாம்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.



1. நடராசர், உமாதேவியார், வியாக்கிர பாத முனிவர், பதஞ்சலி முனிவர்.

'உடுக்கு ஏந்திய திருக்கையிற் படைத்தற்றொழிலையும், அமைந்த திருக்கையிற் காத்தற்றொழிலையும், தீ ஏந்திய திருக்கையில் அழித்தற்றொழிலையும், முயலகன்மீது ஊன்றிய திருவடியில் மறைத்தற்றொழிலையும், தூக்கிய திருவடியில் அருளுதலையும் குறித்து அறிந்துகொள்' என்பது இச்செய்யுளின் பொருள்.

## (ஆ) தென்முகக் கடவுள்

பிரமாவுக்குச் சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் என்னும் நான்கு புத்திரர்கள் இருந்தனர். அவர்கள் சிறந்த முனிவர்களாகவும் விளங்கினர். ஒருபொழுது அவர்களுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. அவர்களோ வேதங்களைத் துறைபோகக் கற்றவர்கள்; சாத்திரங்களின் கரைகண்டவர்கள். அவர்களுக்கே சந்தேகம் வந்துவிட்டால் நம் போன்றவர்களாலே தீர்க்கமுடியுமா? இறைவனிடத்திலேயே முறையிடச் சென்றனர்.

இறைவன் திருக்கைலாய மலையிலே ஒரு கல்லால மர நிழலிலே தெற்கு நோக்கியவாறு அமர்ந்திருந்தான். முனிவர்கள் அங்குச் சென்று அவனை வணங்கினார்கள். பின்னர் அவனைப் பார்த்து '' மேலான பரம்பொருளே உன்னடியார்களாகிய நாங்கள் மறைகளை நெடுநாட் பயின்றோம்; ஆயினும் மெய்யறிவு கைவரப் பெற்றிலோம்; எங்களுடைய அறிவு பலவாறாக மயங்கி நிற்கின்றது; தேவரீர் எங்கள் மயக்கத்தினை நீக்கியருளல் வேண்டும்' என்று இரந்து நின்றனர்.

இறைவன் முனிவர்களிடத்திலே பேரிரக்கங் கொண்டான். முனிவர்களைப் பார்த்து ''அன்பர்களே ! உங்களுக்கு மெய்யறிவு உண்டாகும் வண்ணம் ஆகமப் பொருளை விளங்க வைப்போம்'' என்று சொல்லிச் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றையும் உரைத்தருளினான். அப்பொழுது ''ஞானத்தையும் உரைத்தருள வேண்டும்'' என்று முனிவர்கள் வேண்டி நின்றனர். ''ஞானம் நாவினாலே நவிலற்பாலதன்று '' என்று சொல்லி, ஒரு கையைச் சின் முத்திரையாகப் பிடித்து, மார்பிலே சேர்த்து, ஒருகணம் இறைவன் யோக சமாதியிலே அமர்ந்திருந்தான்.

அதைக் கண்ட முனிவர்கட்குச் சந்தேகம் நீங்கிற்று, மெய்யறிவு வரப் பெற்று சித்திரப் பாவைபோல் வீற்றிருந்தனர்.

இறைவன் காட்டிய முத்திரை யாது? சித் என்பது ஞானம். முத்திரை என்றால் அடையாளம். இந்த ஞான அடையாளத்தின் பொருளென்ன? கையிலே உள்ள விரல்களிற் பெருவிரல் இறை



2. தட்சிணாமூர்த்தி, சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர்.

வனைக் குறிக்கிறது; சுட்டுவிரல் ஆன்மாவைக் குறிக்கிறது; ஏனைய மூன்று விரல்களும் மும்மலங்களைக் குறிக்கின்றன. சாதாரணமாகப் பெருவிரல் தனித்து நிற்கும்; ஏனைய விரல்கள் நான்கும் ஒரு வரிசையில் ஒன்றுசேர்ந்து நிற்கும். ஆன்மா எப்போதும் மலங்களோடு சேர்ந்து நிற்கும்; இறைவன் மலங்களுக்கு அப்பாற்பட்டவன்.

பெருவிரல் தனித்து நின்றாலும். ஏனைய விரல்கள் அதனுடன் தொழிற்படாத காலத்து ஒரு வேலையுஞ் செய்ய முடியாது. எனவே, ஆன்மா எந்த ஒரு காரியஞ் செய்யும் பொழுதும் இறைவன் உறுதுணையாக இருக்கிறான்.

ஆன்மாவானது பாச சம்பந்தமுடையதாக இருக்கும்பொழுது நல்வினை தீவினைகளைச் செய்து இன்ப துன்பங்களை நுகரும். அது பதியோடு, அதாவது இறைவனோடு சேர்ந்துவிட்டால் பாசம் அதைவிட்டு நீங்கிவிடும்.

கல்லால மர நிழலில் வீற்றிருந்த இறைவன் சுட்டுவிரலையும் பெருவிரலையும் ஒன்று சேர்த்து, ஏனைய மூன்று விரல்களையுந் தனித்து நிறுத்திச் சின்முத்திரை காட்டினான். பாசத்திலிருந்து ஆன்மா விடுதலை பெற வேண்டுமாயின் பதியோடு சேரவேண்டும் என்பதே அம்முத்திரையின் பொருள்.

கல்லால மரத்தின் கீழ் இறைவன் தெற்கு நோக்கி இருந்தமையால், அவன் கொண்ட கோலத்தைத் தட்சிணாமூர்த்தி (தட்சிணம்-தெற்கு; மூர்த்தி-கடவுள்) என்றும் தென்முகக் கடவுள் என்றுங் கூறுவர்.

Jharshini
Sripirabalini
Kunavathy
Mahadevan
Veeragathipillai
Seevaratnam
Ramasamy
Mahaluxmy
Namachivayam,


# 9. இந்து இல்லம்

தெருவோரத்திலேயுள்ள படலைக்கு வேயப்பட்ட கூரை; படலைக்கு இரு புறமும் வழிப்போக்கர் இளைப்பாறவோ, மழைக்கு ஒதுங்கி நிற்கவோ திண்ணைகள்; ஒரு திண்ணையை அடுத்துப் பொதி சுமந்து செல்வோர் சுமையை இறக்கி வைத்து விட்டுச் சற்று ஆறுதலடையச் சுமைதாங்கி; சுமைதாங்கிக்கு அப்பாற் கால்நடைகள் தாகந் தீர்ப்பதற்கெனத் தண்ணீர்த் தொட்டி. இவற்றைக் கண்ட பரதேசி 'இது ஓர் இந்து இல்லம்' எனத் தெரிந்து கொள்கிறார். படலையைத் திறந்து உள்ளே செல்கிறார். முற்றத்திலே அழகான கோலம் ஒன்று மிளிர்கிறது. அப்பால் வீட்டின் நுழைவாயில், விருந்தினர் வரவை எதிர் பார்த்துத் திறந்தபடியே இருக்கிறது. வாயில் அண்டையில் நின்றபடி 'அம்மா' என்றொரு குரல் எழுப்புகிறார் பரதேசி.

பரதேசியை எதிர்பார்த்தவர் போல, வீட்டுக்கார சீமாட்டிச் சிறுமி ஒருத்தியை முன்னே உந்தியபடி வந்து தோற்றுகிறார். சிறுமியின் கையில் ஒரு பெட்டி நிறைய அரிசி இருக்கிறது. பிச்சைதேடி வந்த பரதேசியார் தமது கைப் பையை விரித்துப் பிடிக்கிறார். ஆசையோடு சிறுமி அரிசியைத் தனது பிஞ்சுக் கரங் களாற் கொட்டுகிறாள். கொட்டியதும் பெரியவரை நிமிர்ந்து பார்த்துப் 'போதுமா'? என்று மழலை மொழிகிறாள். பெரிய வரின் மனத்தில் உவகை பொங்கி வழிகிறது. 'போதும், தாயே, போதும்' என்று சொல்லிய வண்ணம். இடுப்பிலிருந்து பட்டுப் பையை எடுக்கிறார்; சிறிது விபூதியைக் கிள்ளிச் சிறுமியின் நெற் றியில் அழுத்திப் பூசுகிறார்; பூசியதும் திரும்பி வீதியை நோக்கி நடக்கிறார்.

இவை நடந்தது 50 ஆண்டுகட்கு முன்பு. இன்று திண்ணை யுந் தொட்டியும் மறைந்துவிட்டன. காலப்போக்கில் அவை தேவையற்றுப் போய்விட்டன. ஆனால் முற்றத்துக் கோலமும். விருந்தெதிர்பார்க்குந் திறந்த கதவும், சிறுமிக்கு அறம் பழக்குந் தாயின் கரங்களும் இன்றும் இருக்கின்றன.

இல்லத்தின் நுழைவாயிலைக் கடந்து உள்ளே சென்றால், செல்வம் வழங்குந் திருமகளின் படமோ, விக்கினந் தீர்க்கும் விநாயகனின் படமோ, இனிமை இளமை அழகுத் தெய்வமாகிய முருகனின் படமோ காட்சி தரும்.



3. இந்து இல்ல வாசல். பெண் பிள்ளை பரதேசியார் ஒருவருக்குப் பிச்சை இடுகின்றாள்; பரதேசியார் பிள்ளையின் நெற்றியிலே திருநீறு பூசுகின்றார்.



4. வீட்டு முற்றத்திற் கோலம் போடுதல்

வீட்டின் ஓர் அறை தெய்வ வணக்கத்திற்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கும். அங்கே வீட்டாரின் இட்ட தெய்வங்களின் படங்களோ, விக்கிரங்களோ வைக்கப்பட்டிருக்கும். வீட்டார் காலையும் மாலையும் திருவிளக்கேற்றித் தெய்வங்களுக்குத் தூபமிட்டு, நறுமலர் தூவி, தோத்திரம் பண்ணி, விபூதி சந்தனங்

குங்குமந் தரித்துக்கொள்வர். நறும் புகையும், மலர் வாசனையும் சந்தனச்சேற்றின் தெவிட்டா நறுமணமும் தெய்வீக எண்ணங் களை உருவாக்குஞ் சாதனங்கள். அவை மனத்தை, அது அறியா மலே சாந்தி நிலைக்குக் கொண்டுவரும்.

பொழுது சாயும்பொழுது இந்து இல்லங்கள் தோறும் விளக்கேற்றுதல் சிறந்ததொரு வழக்கமாகும். மாலைப் பொழு தானதும் வீட்டிலுள்ள சுமங்கலி ஒருத்தி குத்துவிளக்கேற்றி இறைவழிபாடு செய்வாள். விளக்கின் சுடரிலே இந்துக்கள் மெய்யறிவின் அறிகுறியைக் காண்கிறார்கள். வீட்டார் யாவரும் பல நாள்கள் வெளியே பயணஞ் செல்ல வேண்டி இருந்தால், வீட்டிலே நாளும் விளக்கேற்றுவதற்கு அயலார், அடுத்த வீட்டார் ஆகிய யாரேனும் ஒருவரோடு ஒழுங்கு செய்வார்கள்.

இந்து இல்லத்திலே முக்கிய கடமை ஒன்று விருந்தோம்பல்.

''இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு''

என்றார் தெய்வப் புலவரும். தினமும், எதிர்பாராத இரண் டொரு விருந்தினரை உபசரிக்க வீட்டார் ஆயத்தமாக இருப் பார்கள்.

இந்தக் குடும்பத்திற்கு ஆண்டிலும் அனுபவத்திலும் முதிர்ந்த கணவனே தலைவனாக இருப்பான். ஆயினும் மனைவிக் கும் அங்கு தனி இடமுண்டு. எந்த ஒரு கருமத்தையுஞ் செய்யப் புகும்பொழுது மனைவியின் கருத்தையுந் தழுவியே கணவன் நடந்து கொள்வான். மனைவியும் 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' ஆகத் தன் கணவனின் குறிப்பறிந்து நடத்தலையே தனது தலையாய தெய்வ வழிபாடாகக் கருதி நடப்பாள். அதனைக் கண்ட கணவன் செருக்குற்று அவனை அடிமைப்படுத்த நினைப்பதில்லை; அந்த வணக்கத்தைத் தன்னுள்ளே இருக்கின்ற கடவுளுக்கே அர்ப்பணித்து விடுகிறான். இதனையே,

'உன்னை ஒருவர் வணங்கில் உனதுள்ளுறையும்
நின்மலனுக் கென்றே நினை'

என்று அறிஞர் ஒருவர் கூறுகின்றார்.

கணவனும் மனைவியும் சேர்ந்து இல்லறம் நடத்தும் பொழுது தம் பிள்ளைகளிடத்தே மிகுந்த அன்போடு நடந்து கொள்வர். பிள்ளைகளிடத்துக் கொள்ளும் காதல் சிறிது சிறிதாக வளர்ந்து உற்றார், ஊரவர், நாட்டவர், உலக மக்கள் அனை வரிடத்தும் ஏன் உயிர்க் குலம் அனைத்திடத்துமே பரவ வேண்

டும். இந்தக்காதல் முதிர்ந்து தியாகமாகி, இல்லற நிலையிலிருந்து பூரண துறவுநிலை வரை, படிப்படியாக உயர்ந்து ஆன்ம விடுதலைக்கு வழிவகுக்க வேண்டும். எனவே, ஓர் இந்துவின் இல்லம் பத்தி பயில்வதற்கான களன் என்றே சொல்லலாம்.

மிகப் பழைய காலத்திலே நாகரிகம் படைத்த எந்த ஒரு சமூகத்திலும் கால்நடையைக் கொண்டே மனிதனின் செல்வத்தை அளந்தார்கள். பசு உடல் வளர்ச்சிக்குப் பால் தந்து, பயிர் வளர்ச்சிக்கு எருத் தந்து, வளம் பெருக்குகிறது. எருது வயல் புலங்களிற் பயிரிட்டு உணவு பெருக்க உதவுகிறது. இதனால் இந்துக்கள் கால்நடையைச் செல்வமென்று மதிப்பது மட்டுமல்லாமல் அவற்றிலே தெய்வத் தன்மையையும் காண்பது புதினமன்று. கால்நடைகட்குத் தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் பட்டிப் பொங்கல் பொங்கி விழாக் கொண்டாடுவதை நாம் முன்னர் படித்தோம். இவ்வாறு கால்நடைகளைப் போற்றும் இந்துக்கள் அவற்றிற்கு இடையூறு விளைக்கச் சிறிதும் இசையார். இதனாலன்றோ பசுவதைக்கு அஞ்சி ஞானப்பிரகாச முனிவர் உற்றார் உறவினரை விட்டுத் தேசாந்தரஞ் சென்றார்.

வீட்டின் முன்றிலிலோ, புறம்பாக ஒதுக்கப்பட்ட ஒரு பகுதியிலோ, பூசைக்குப் பயன்படுத்தக்கூடிய பூ மரங்களையும் செடி, கொடிகளையும் வளர்த்து இந்துக்கள் இன்பங் காண்பர். அப்பகுதியைப் பரிசுத்தமாக வைப்பதில் அவர்கள் வெகு சிரத்தை எடுப்பர். வசதியுள்ளவர்கள் தமது பூங்காவில் ஒரு செங்கழுநீர்த் தொட்டியும் அமைத்துக் கொள்வர்.

ஓர் இந்து இல்லம் புனிதமும் பண்பும் நிறைந்த தலமாகும். அது ஒரு தெய்வ சந்நிதியாகவும், கலைக் கோயிலாகவும், நற்பழக்க வழக்கங்களுக்குப் பயிற்சி நிலையமாகவும் அமைந்திருக்கும். அங்கே எப்பொழுதும் அமைதி நிலவும். அதே சமயம் உயிர்த்துடிப்புடையதாகவும் பல வகையான நல்லெண்ணமுஞ் செயலும் உருவாகும் நிலையமாகவும் அது விளங்கும். அத்தகைய பண்பட்ட உயர்ந்த இந்து இல்லத்தில் உலகை உய்விக்க வல்ல உத்தமர்கள் உதிப்பது வியப்பன்று.

# 10. சைவ நாற்பாதங்கள்

சரியை, கிரியை, யோகம், ஞானம், என்பவை சைவ நாற்பாதங்கள். இவை எமது அகவாழ்வையும் புறவாழ்வையும் நெறிப் படுத்தித் தெய்வீகத்தை ஏற்படுத்தும் சாதனங்களாக அமைந்துள்ளன. எமது ஆன்மீக வாழ்வு அரும்பி, மலர்ந்து காய்ந்து கனியாவதற்கு வாய்த்த நான்கு சைவ சாதனங்கள் இவை எனலாம்.

## (அ) சரியை

சரியை மார்க்கமானது கடவுளுக்கு நமது மனம், மொழி, மெய் ஆகியவற்றாலே தொண்டு செய்தலாம். அடியார்கள் தம் சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றை இறைவனுக்காக்கி வாழ்ந்தனர் என்று மெய்யடியார் சரித்திரங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. நாம் செய்யும் எல்லாத் தொண்டுகளும் தெய்வப் பணிகளாகவே செய்யப்படும்பொழுது, அவை தெய்வீகத் தன்மை பெறுகின்றன. சரியை நெறியைத் 'தாச மார்க்கம்' என்றும் சொல்வது வழக்கம். தாதன் அல்லது தாசன் என்றால் அடிமை அல்லது தொண்டன் என்பது கருத்து. திருநாவுக்கரசர் இறைவனை வழிபட்ட நெறி இது. 'நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு, புலர்வதன் முன் அலகிட்டு, மெழுக்குமிட்டு, பூமாலை புனைந் தேத்தி, புகழ்ந்து பாடி, தலையாரக் கும்பிட்டு, வழிபடும் நெறி இது என்று அவருடைய பாடலே நமக்கு அறிவிக்கின்றது. அடியாரை வழிபடுதல், அடியார் தினங்களைக் கொண்டாடுதல், மகேசுவர பூசை செய்தல் என்பவை யாவும் சரியைத் தொண்டில் அமைகின்றன. சரியை மார்க்கம் ஆணவத் தடிப்பைக் குறைக்கும்.

## (ஆ) கிரியை

கிரியை என்பது விதிப்படி செய்யும் சிவபூசையாகும். புதிய வாசனையுள்ள மலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனம், திருவமுது என்பன இதற்கு உபகரணங்கள். பூசை செய்யும் இடம், மேலே கூறிய பூசைத் திரவியங்கள் முதலியவற்றை மந்திர செபத்தாற் புனிதப்படுத்தி, இறைவனை அவ்விடத்தில் எழுந்தருளச் செய்து, மனமொழி மெய் ஒருமித்து, பத்தி சிரத்தையுடன் பூசை செய்தலே கிரியை வழிபாடாகும்.

இறைவனைத் தந்தையாகப் பாவனை செய்து வழிபடும் முறை இது. எனவே. இதைச் 'சற்புத்திர மார்க்கம்' என்று வழங்குவர். கிரியாவான்களையே 'முப்போதும் திருமேனி தீண்டுவார்க் கடியேன்' என்று சுந்தரர் வணங்குகின்றார். பூசலார் என்ற மெய்யடியார் உருவாக்கிய மனக்கோயிலிலே இறைவன் விரும்பி எழுந்தருளினான் என்று பெரியபுராணத்திற் படித்துள்ளோமல்லவா? அவர் கிரியை நெறி நின்று கடவுளை அடைந்தவர். கிரியை நெறியின் பயன் கடவுளுக்கருகிற் செல்லும் பேறுபெறல். 'நான்' (அகங்காரம்) 'எனது' (மமகாரம்) என்பவற்றைத் தகர்த்தெறியும் நெறியாக இது விளங்குகின்றது.

சண்டேசுவர நாயனார் கிரியை வழிபாடு செய்தவர். சிவ பூசையிலே ஒன்றியிருந்தபடியாற் பூசைக்கு இடையூறு விளை வித்தவர் தமது தந்தை என்றுகூடக் கவனிக்கவில்லை. இன்றும் ஆலய வழிபாட்டிற் சண்டேசுவரர் சந்நிதியிற் கைதட்டும் வழக் கம் ஒன்றைக் காணுகின்றோம் அல்லவா? புற நினைவுகளற்றுப் பூசையில் ஒன்றி நிற்கின்ற அவருடைய அருள்வேண்டி நமது வணக்கத்தைத் தெரிவிக்கின்ற முறையே அது.

### (இ) யோகம்

சைவ நாற்பாதங்களில் அடுத்தது யோக மார்க்கம். இறை வனைத் தோழனாகக் கொண்டு பத்தி செய்யும் நெறி இது. ''சக மார்க்கம்' என்றும் இதைக் குறிப்பிடுவர். 'யோகம்' என்பதன் கருத்துச் 'சேர்க்கை' என்பதாகும். ஆன்மா இறைவனோடு சேர் தல் என்பதே இதன் விளக்கமாகும். அத்தகைய பக்குவம் பெறு வதற்கு ஆன்மா பெறும் பயிற்சியை இந்நெறி விளக்குகின்றது. இந்நெறியிற் பொறி புலன்களின் தடுமாற்றத்தினின்றும் மனத்தை விடுவித்து, மிகவுயர்ந்த தியானத்தில் ஈடுபட்டுக் கடவுளை வேண்டுகின்றது ஆன்மா.

யோகம் எட்டு அங்கங்களை உடையது. அதனால் இதனை அட்டாங்க யோகம் என்பர் பெரியோர். இவை முறையே :

1. இயமம்—தீயவற்றை விலக்கல்
2. நியமம்—நற்காரியங்களைச் செய்தல்
3. ஆசனம்— அமரும் நிலை
4. பிராணாயாமம்—மூச்சை அடக்குதல்
5. பிரத்தியாகாரம்—புலன்களையும் மனத்தையும் உல கியலிற் செல்லவிடாது தடுத்தல்
6. தாரணை—மனத்தைக் கடவுள் பாற் செலுத்துதல்

7. தியானம்—மனத்தை இறை நினைவில் நிறுத்துதல்; நீளநினைத்தல்

8. சமாதி—ஆன்மீக அனுபவம்; இறை நினைவில் ஒன்றல்.

இந்த யோகப் பயிற்சியினால் அசாதாரண ஆற்றல் பெற லாம். ஞானியர் தம் வாழ்விற் காணப்படும் அளவிறந்த அற்பு தங்கள் இந்த ஆற்றலின் வெளிப்பாடேயாகும். எனினும், மெய்யடியார் இந்த அற்புதங்களை ஒரு பொருட்டாக மதித்தி லர். திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மாருடைய வாழ்க்கை யில் எத்தனையோ அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றைச் செய்யும் ஆற்றல் அவர்களுக்கு இருந்தது. ஆனால், அவர்கள் தமது ஆற்றலால் அவற்றைச் செய்ததாக ஒருபோதும் எண்ணி னரல்லர்; இறைவன் அருளால் அவை நிகழ்ந்தனவெனவே கொண்டனர்.

இந்த யோகத்தின் எட்டு அங்கங்களில் முதலிரண்டாகிய இயமமும் நியமமும் நாமெல்லாம் இளமையிலிருந்தே கைக் கொள்ளவேண்டிய ஆரம்ப நீதிப் பயிற்சிகளாக விளங்குகின்றன. எனவே, அவற்றை நாம் அறிந்துகொள்ளுதலும் அக்குணங்களை நம்மில் வளர்த்துக்கொள்ள முயற்சி செய்தலும் நமக்கு வாழ் வில் முன்னேற்றத்தைக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

இயமம் என்பது அகிம்சை, சத்தியம், நேர்மை, இரக்கம், பிரிவு, ஆன்ம சுத்தி, பொறுமை, தைரியம், கடமையில் ஈடுபாடு, உடற் சுத்தி என்ற பத்துக் குணங்களாகும். இவற்றையெல்லாம் சத்தியம், அகிம்சை என்ற இரண்டில் நாம் அடக்கலாம். உள் ளத்தில் உள்ளுவது உண்மை. வாயாற் கூறப்படுவது வாய்மை. மெய்யாற் செய்யப்படுவது மெய்மை. இவையெல்லாம் சத்தி யத்தின் பிறபெயர்கள். இவற்றின் மூலம் பெறப்படுவது என்ன? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத, நினைக்காத, செய் யாத நிலையை நாம்பெறவேண்டும் என்பதேயாகும். கடமையில் ஈடுபாடு, ஆன்ம சுத்தி, உடற் சுத்தி, நேர்மை என்பனவற்றுக் குச் சத்தியம் அடிப்படையாக அமைகின்றது. அகிம்சை என்பதன் கருத்து 'ஒருவருக்கும் ஊறு செய்யாமை' என்பதாகும். இதற்கு உடன்பாட்டுமுகமாகப் பொருள் கொண்டால், 'எல்லோரிடமும் அன்புகொள்ளுதல்' என்று இதனைக் கூறலாம். பொறுமை, தைரியம், இரக்கம், பிரிவு என்ற குணங்கள் ஏற்படுவதற்கு அடிப்படை அன்புதான்.

நியமம் என்பது நற்பழக்கங்களைப் பேணி வளர்த்தலாகும். தன்னை இறைபணிக்கு அர்ப்பணித்துக் கொள்ளுதல், கடவுளை,

வணங்குதல், மந்திர உச்சாடனம், பரந்த மனப்பான்மை, தவம் என்பவற்றால் நல்லதை நினைக்கவும், நல்லதைப் பேசவும், நல்லதைச் செய்யவும் முடியும். இப்பழக்கங்கள் நல்வாழ்வுக்கு அத்திவாரமாக அமைகின்றன.

இயம நியமங்கள் கருணை கூர்ந்து அருள்செய்யும் முதல்வன் விதித்த விதிகள். ஒழுக்கம் முதலிய நன்மைகளை ஒருவன் அனுட்டித்துவரின், முதல்வன் அவற்றைத் தன் பணியாக ஏற்றுப் பயனளிப்பான் என்கின்றது சிவஞானசித்தியார்.

ஆன்ம சாதனைக்கு இயமமும் நியமமும் முதற்படியாக விளங்குகின்றன என்பது இதன் மூலமும் பெறப்படுகின்றதல்லவா? சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றும் ஒருவனை இறுதிச் சாதனை நெறியாகிய ஞான மார்க்கத்துக்கு ஏற்றவனாக்கும் ஆயத்தங்கள் எனலாம்.

(ஈ) ஞானம்

சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று சாதனைகளும் கைவரப்பெற்ற ஒருவர் ஞான சாதனைக்கு உரியவராகின்றார். உண்மையிலே, முதற் சொன்ன மூன்றும் இறுதிச் சாதனைக்கு இட்டுச் செல்லும் படிகள் என்று சொல்லலாம். ஞானத்தைக் கனி என்று கொண்டால், சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றும் முறையே அரும்பும், மலரும், காயும் ஆகும். அரும்பு முதிர்ந்து மலராவதும், மலர் மலர்ந்து காயாவதும், காய் முற்றிக் கனியாவதும் இயற்கையான படிமுறை வளர்ச்சிகளாம்.

நான்கு வேதங்களும் புராணங்களும் ஆகமங்களும் ஞானமே முத்திக்கு வழி என்று உறுதி கூறுகின்றன. இந்த ஞானத்தையே திருவள்ளுவர் 'மெய்யுணர்வு' என்று கூறுகின்றார். இந்த ஞானமாகிய மெய்யுணர்வைப் பெறுவதற்கு ஒருவர் வேதங்கள், புராணங்கள், சாத்திரங்கள் முதலிய சமயநூல்கள் எல்லாவற்றையும் கற்றுணர்தல் வேண்டும். அவ்வாறு கற்றுணரும்போது, சைவசித்தாந்தம் தவிர்ந்த பிற எல்லாம் ஆன்ம அறிவுக்கு உட்பட்டவை என்றும் கீழானவை என்றும் தோன்றும். பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளின் தன்மையை உள்ளவாறு உணரத் தரும் சித்தாந்த ஞானமே மேலான உண்மை ஞானம் என்ற தெளிவு பிறக்கும். இதனைத் திருவள்ளுவர்,

''எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு''

என்று கூறுவர். இந்த மெய்யுணர்வு உண்டானபோது. ஆன்மாவானது அறிபவனாகிய தன்னையும் அறியப்படும் மெய்ப்பொருளாகிய சிவத்தையும் பிரித்தறிதலின்றிச் சிவமேயாய் நிற்கும். இந்நிலையை அடைந்தார் சிவத்தோடு இரண்டறக் கலத்தலாகிய 'சாயுச்சிய முத்தி' பெறுவர். இந்த முத்தியைத் தரும் ஞான மார்க்கம் 'சன்மார்க்கம்' என்று சொல்லப்படும்.

இத்தகைய ஞானத்தைப் பெறுவதற்கு நல்ல வழியொன்று உண்டு. அது 'ஞான பூசனை' எனப்படும். ஞான நூல்களை ஒருவர் படித்தல், நாம் படித்தவற்றை மற்றவர்களுக்குப் படிப்பித்தல், மெய்ப்பொருளை ஞானாசிரியரிடம் கேட்டல், நாம் கேட்ட பொருளைப் பக்குவமுடையோர்க்குச் சொல்லுதல், அந்த மெய்ப்பொருள் பற்றிச் சிந்தித்தல் ஆகிய ஐந்துமே ஞானபூசனை எனப்படும்.

இவ்வாறு ஞானபூசனை புரிந்து மெய்யுணர்வு கைவரப்பெற்றால், பொய்யறிவாகிய 'அஞ்ஞானம்' சூரியனைக் கண்ட இருளைப்போல் அகன்றுவிடும். அறியாமை அழிய உயிரின் பந்தமும் அகன்றுவிடும். பந்தம் அகன்ற நிலையே முத்தி நிலையாகும். இத்தகைய முத்தி பெற்றவர் உடம்போடு கூடியிருக்கும்போது 'சீவன் முத்தர்' என்று பெயர்பெறுவர். உடம்பு கழலும்போது அவர் சிவத்தோடு இரண்டறக் கலக்கும் பரமுத்தி பெற்று, என்றும் பேரின்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார்.

நம்முடைய சமய குரவர்களுள் மாணிக்கவாசகர் ஞானமார்க்கத்தில் நின்று மேலான முத்தி பெற்றவர். அவர், சீவன் முத்தராயிருந்த நிலையில் 'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்' என்று பாடியுள்ளார்.


Sivanathan 1
Sivanesan 2
Vinasithamby 3
Komathy 4
Nakendran 5
Nallathamby 6
Seevaratnam 7
Crown 8
Lalitha 9
Janarthani 10 Varatharajaperumal
Kumal 10,
Chandrasekaran

# 11. சக்தி வழிபாடு

எல்லாம் வல்ல இறைவனைத் தந்தையாகவும் தாயாகவும் தோழனாகவும் தலைவனாகவும் பக்தி செய்து வழிபடும் மரபு சைவ சமயத்தில் உண்டு. இவற்றுள் அவனைத் தாயாக வழிபடும் முறை சிறந்தது. அன்பு, தூய்மை, பொறுமை, தன்னலமின்மை, மன்னிக்கும் சுபாவம் ஆகியவற்றிற் சிறந்தவள் தாய். தாயை அணுகக் குழந்தை ஒரு பொழுதும் அஞ்சுவதில்லை. தன்பிள்ளை நன்றே செய்தாலும் தீதே புரிந்தாலும், உயர்நிலையடைந்தாலும் தாழ்மையுற்றாலும் ஒரு தாயின் அன்பு மாறுபடாது. இந்தத் தாய் அன்பிலும் மேலானது இறைவன் உயிர்களிடத்துச் செலுத்தும் அன்பு. இதனாலேயே 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ' என்றும் 'தாயினும் நல்ல தலைவரென்றடியார் தம் மடி போற்றிசைப்பார்கள்' என்றும் சைவ அடியார்கள் பாடியிருக்கிறார்கள். இறைவனுடைய திருவருளைத் தாயாக வழிபடுதலே சக்தி வழிபாடாகும்.

இவ்வுலகம் முழுவதும் ஒரு சக்தியின் ஆற்றலால் இயங்குகின்றது. மேகம் மின்னி இடித்துத் தாரை தாரையாக மழை பொழிகின்றது. ஆகாயத்தை அளாவி நிற்கும் மலைகளின் வழியே ஆறுகள் வேகமாகப் பாய்ந்தோடி விழுகின்றன. இவற்றிற்கெல்லாம் காரணமாக ஒரு சக்தி உண்டல்லவா? இறைவனோடு பிரிவின்றி உள்ளதாகிய சக்தி தான் அது. அதனையே நாம் தாய்த் தெய்வமாகப் போற்றுகிறோம்.

அன்னை பராசத்தியே உலகின் சத்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள். சூரிய சந்திரரின் ஒளியாகவும், பூவின் மணமாகவும், நீரின் தன்மையாகவும் விளங்குபவள் அவள். மனோபலத்தையும் வாக்குவன்மையையும் உடல் வலிமையையும் எமக்கு அருளுபவள் அவள். இச்சத்தியையே வீரத்தைத் தரும் துர்க்கையாகவும், கல்வியைத் தரும் கலைமகளாகவும், செல்வத்தைத் தரும் திருமகளாகவும் நாம் போற்றி வழிபடுகிறோம். அம்பிகை, அம்பாள், பவானி, உமை, சாமுண்டி, பகவதி, காளி, உருத்திராணி என்பன அன்னை பராசக்திக்கு வழங்கும் பிற பெயர்கள். சக்தியையே தாம் வணங்கும் ஒரே தெய்வமாகக் கொண்டவர்கள் சாக்தர்கள் எனப்படுவர். சாக்தர்கள் இன்றும் வங்காள தேசத்தில் உளர் என்பது குறிப்பிடத்தக்கது.





5. அர்த்தநாரீசுவரர்.

''சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'' என்பது சைவசித்தாந்தக் கருத்து. எனவே, சிவ பக்தர்கள் சிவ வழிபாட்டுடன் சக்தி வழிபாட்டிற்கும் தமது சமய வாழ்வில் முக்கிய இடமளித்துள்ளனர். சிவன் கோவில்களிலே சிவனையும் உமையையும் ஒன்றாக வைத்து வழிபடுவதும், சக்திக்குத் தனியாகச் சந்நிதானம் அமைத்து அம்மன் என வழிபடுவதும், ஊர்கள் தோறும் அம்பாளுக்குத் தனியே கோவிலெடுத்து வழிபடுவதும் சைவ சமய மரபாகும். இந்தியாவிலுள்ள சக்தி ஆலயங்களுள் மதுரை மீனாட்சியம்மன் கோவில், காஞ்சி காமாட்சியம்மன் கோவில், காசி விசாலாட்சி அம்மன் கோவில், கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் ஆகியன பிரசித்தமானவை. ஈழத்திலும் அவ்வாறே சைவர்கள் வாழும் ஊர்களில் அம்பாளுக்கெனத் தனியான கோவில்கள் உண்டு. யாழ்ப்பாணத்திலுள்ள வீரமாகாளி அம்மன் கோவிலும் நயினை நாகபூஷணி அம்மன் கோவிலும் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தவை. திருக்கோணமலையிலுள்ள பத்திரகாளியம்மன் கோவிலும் மாத்தளை முத்துமாரியம்மன் கோவிலும் அவ்வூர் மக்களாற் பெரிதும் போற்றப்படுகின்றன.

சிவத்தையும் சத்தியையும் வேறு பிரித்துக் காணாத சைவ மக்கள் சக்தி விரதங்களை அனுட்டித்து வருதலைக் காண்கிறோம். சக்தி விரதங்களுட் குறிப்பிடத்தக்கவை வரலட்சுமி விரதம், கேதார கௌரி விரதம், நவராத்திரி விரதம் என்பவையாகும். அன்னை பராசக்தியை மனத்திலிருத்தித் தியானம் செய்பவர்கள் சகல விதமான ஆற்றல்களையும் பெற்று நலமடைவர்.

## சக்தி விரதம்

### (அ) கேதார கௌரி விரதம்

சக்தியின்றிச் சிவமில்லை, சிவமின்றிச் சத்தியில்லை என்பதை விளக்குவதாக உள்ளது கேதார கௌரி விரதம். அது மக்கள் சிவனையும் பார்வதியையும் அர்த்தநாரீசுவரர் வடிவத்திற் போற்றி வழிபடும் விரதம். புரட்டாசி மாதச் சுக்கில பட்சத்துத் தசமி தொடங்கி ஐப்பசி மாதக் கிருஷ்ண பட்சத்துத் தீபாவளி அமாவாசை வரை 21 நாள்களும் தினமும் வில்வத்தினால் இலிங்கத்திற்கு அர்ச்சனை செய்து 21 இழையினால் ஒரு கயிறு முறுக்கித் தினமும் ஒரு முடிச்சாக 21 நாள்களும் முடிந்து, கடைசி நாள் அக்கயிற்றைக் கையிலணிந்து விரதத்தை முடிப்பர்.

சிவமும் சக்தியும் ஒன்றிணைந்திருப்பது போல, ஆன்மாக்கள் பரம்பொருளுடன் ஐக்கியமடைதல் வேண்டும் என்பதைச் சுட்டுவதாக உள்ளது இவ்விரதம்.

### (ஆ) நவராத்திரி விரதம்

சக்தி விரதங்களிலே தலையானது நவராத்திரி விரதம். இது புரட்டாசி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி ஈறாக ஒன்பது நாள்கள் அனுட்டிக்கப்படும் (நவ இராத்திரி—ஒன்பது இராத்திரி). பத்தாம் நாளான விஜய தசமியையும் சேர்த்து வட இந்தியாவில் இவ்விழாவைத் 'தசரா' என்பர். இந்துக்கள் வாழ்கின்ற எல்லா இடங்களிலும் இந்நோன்பு நோற்கப்படுகிறது.

ஒன்பது தினங்களில் முதல் மூன்று தினங்கள் துர்க்கையையும், அடுத்த மூன்று தினங்கள் இலக்குமியையும், இறுதி மூன்று தினங்கள் சரஸ்வதியையும் வழிபடுவது வழக்கம். ஒன்பதாம் நாள் இரவு ஆயுத பூசை நிகழும். ஒவ்வொருவரும் தாம் தாம் பயன்படுத்தும் ஆயுதங்களையும் சுருவிகளையும் புத்தகங்களையும் பூசையில் வைத்து வழிபடுவர். 'செய்யுந் தொழிலே தெய்வம்' என்னும் தத்துவத்தை ஆயுத பூசை விளக்குவதாக உள்ளது.

நவராத்திரி ஒன்பது நாள்களும் காலையில் நீராடித் தேவியைப் பூசிப்பர். தினமும் ஒன்று முதல் பத்து வயதுக்குட்பட்ட கன்னிப் பெண்களைக் குமாரி, கல்யாணி, ரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்திரா ஆகிய தேவியின் அம்சங்களாகப் பாவித்துப் பூசித்து உணவு, உடை, அணிகலன் முதலியவை கொடுத்து வழிபாடாற்றலும் வழக்கம். இந்நாள்களில் லலிதா சகஸ்ரநாமம், சகலகலாவல்லிமாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் ஆகிய தேவி தோத்திரங்களைப் பாராயணம் பண்ணி வருதல் பயன் தரும்.

நவராத்திரி விழாவை இந்துக்களின் கலைத் திருவிழா என்றே கூறலாம். அழகிய பொம்மைகளைக் கொலுவைத்தல் போன்ற கலை அம்சங்களுடன் கலையுணர்ச்சி பெருக இவ்விழாவைக் கொண்டாடுவர். சிறப்பாக நவராத்திரியின் இறுதி மூன்று நாள்களும் கலையம்சத்திற் சிறந்தவை.

> ஆய கலைக ளறுபத்து நான்கினையு
> மேயவுணர்விக்கு மென்னம்மை— தூய
> வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
> யிருப்பளிங்கு வாரா திடர்.

என்று பாடினார் மகாகவி கம்பர். கல்விக்கும் கலைகளுக்கும் அதி தேவதை சரஸ்வதி. கல்வியும் கலைகளும் உள்ளத்திற்கு இன்பம் அளிப்பவை; அழகுணர்ச்சியுடன் கூடியவை. எனவே, கலைமகள் விழாவைப் பாரதத்திலும் ஈழத்திலும் வாழும் இந்துக்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடி வருகின்றனர். வாழ்க்கை என்பது ஒரு கலையே; அதிலும் அழகுக்கு நாம் முதலிடம் கொடுத்தல் வேண்டும்.

''சரஸ்'' என்றால் நீர் அல்லது ஒளி என்பது அர்த்தம். தங்குதடையின்றிப் பிரவாகமாகப் பாய்வது ''சரஸ்'' என்று சொல்லப்படும். இதனாலேதான் நதிகளுக்குச் 'சரஸ்வதி' என்னும் பெயர் பண்டைக் காலத்தில் வழங்கப்பட்டது. கலைவாணியின் அருள் இருந்தால் வார்த்தைகள் தங்கு தடையின்றிப் பிரவாகமாக வெளிப்படும். வாக்குக்கும் கலைகளுக்கும் தெய்வமாதலால் நாமகள், கலைவாணி என்னும் பெயர் களையும் அவள் பெறுகின்றாள்.

ஏட்டுப் படிப்புக்கு மாத்திரமன்றி, உழவுத்தொழில், கைத் தொழில் முதலிய எல்லாவற்றுக்கும் அருள் செய்பவள் கலை மகள். அதனாலேயே கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களும்,

'நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே''

என்று பாடினார். உண்மையிலே வெவ்வேறு தொழில்களையும் நாம் வெவ்வேறு கலைகளாகவே போற்றி வாழுதல் வேண்டும். அதுவே தொழிலில் இன்பம் காணுவதற்கு வழியுமாகும்.

### (இ) விஜயதசமி

நவராத்திரியை அடுத்து வரும் பத்தாம் நாளே விஜயதசமி யாகும். ஏடு தொடங்குதல், வித்தியாரம்பம் ஆகியன அன்று நடைபெறும். ஒன்பது நாள்களும் சக்திக்குப் பூசை செய்ததன் பயன் கைகூடும் நாள் விஜய தசமி. பண்டைக் காலத்தில் அரசர் பத்து நாள்களும் தேவி பூசை செய்து முடித்த பின்னர் கவிஞர்க கள், கல்விமான்கள், வித்துவான்கள் ஆகியோரைக் கூட்டிக் கௌரவிப்பது வழக்கம். விஜய தசமியன்று அரசர் சிம்மாசனம், குடை, சாமரம் முதலியவைகளையும் யானை குதிரைகளையும் பூசிப்பார்களாம். நாட்டிய நிகழ்ச்சிகள், மல்யுத்தம், வாண வேடிக்கை, விளையாட்டுக்கள், இரதங்களினதும் குதிரைகளின

தும் அணிவகுப்பு ஆகியனவும் நடைபெறும். விஜய நகர மன்னரும் மைசூர் மன்னரும் நவராத்திரி வைபவத்தை மிகவும் விமரிசையாகக் கொண்டாடினர் என அறிகிறோம்.



6. மகிடாசுர சங்காரம்

விஜய தசமியன்று ஆலயங்களில் நிகழும் ஒரு முக்கியமான பூசை 'மானம்பூ' (மகாநோன்பு) அல்லது மகிடாசுர சங்காரமாகும். ஆலயங்களில் வன்னிமரம் அல்லது வாழை மரம் நாட்டி

மகிடாசுரன் எனும் அசுரனைத் தேவி சங்கரித்த பாவனையாக அம்மரத்தை வெட்டித் திருவிழா செய்வர். மகிடாசுரன் என்பவன் காட்டெருமை வடிவினனான அசுரன். தேவர்களுக்கும் மனிதருக்கும் இன்னல்கள் செய்து வந்தவன். அவனைக் கொல்லுதல் மகிடாசுர சங்காரம் எனப்படும். மகிடாசுர சங்காரம் என்பது உண்மையில் ஆன்மாக்களைப் பீடித்துக் கொழுத்து வளரும் ஆணவ மலம், அறியாமை, மிருகத் தன்மை ஆகியவற்றை அழித்தலைக் குறிக்கும். ஒன்பது நாள்களும் தேவியை வழிபட்டுப் பெற்ற சக்தியினால் அவற்றினை அழித்துவிட முடியும்; அதனால் ஞானம் கைகூடும் என்பது தாற்பரியம். அதனாலேயே பத்தாம் நாள் விஜய தசமி என்று சொல்லப்படுகிறது. பாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் முடித்து, தாங்கள் வன்னி மரத்தில் வைத்து விட்டுப் போன ஆயுதங்களை எடுத்துப் பூசை செய்த நாளும் விஜய தசமி நாள் என்று மகாபாரதத்திலிருந்து அறிகிறோம்.

## 12. நந்தியை விலகச் செய்த நந்தனார்

நமது சமயப் பெரியார்கள் இறை பத்தியையே வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். இவர்கள் செய்தொழிலால் வேறுபட்டவர்கள். எனினும் எல்லோரும் சிவனடியார்கள் என்ற முறையில் ஒன்றுபட்டவர்கள். இறைவனுக்குத் தொண்டு செய்வதையே தமது வாழ்வின் சிறப்புச் செயலாகக் கொண்டவர்கள். இவர்களைத் 'திருத்தொண்டர்கள்' என்று குறிப்பிடுகின்றோம். இவர்களுக்கும் இறைவனுக்கும் பேதமில்லையென்று நமது சமய சாத்திரங்கள் கூறுகின்றன.

கண்கண்ட தெய்வங்களாக விளங்கிய இந்தச் சிவனடியார்களில் ஒருவர் திருநாளைப்போவார் என்ற சிறந்த அடியார். திருத்தொண்டர் கூட்டத்தில் ஒருவராக வைத்து இவரை எமது சமயம் போற்றுகிறது. இவருக்காக நந்தி விலகிற்று. இவர் தென்னிந்தியாவில் ஆதனூர் என்னுங் குக்கிராமத்திற் பிறந்தவர். இக்கிராமம் காவிரி நதியின் கிளையாகிய கொள்ளிடத்தின் கரையிற் காணப்படுகின்றது. இவரது இயற்பெயர் நந்தனார் என்பது.

மிகப் பழைய காலத்தில் கிராமங்கள் மானியமுறை அடிப்படையிலேயே இயங்கி வந்தன. கிராமங்களிலே தொழில் அடிப்படையிற் சாதிப் பிரிவினைகள் இருந்தன. ஊருக்கு நடுவே கோயில் இருக்கும். அதைச் சுற்றி குடிமனைகள் இருக்கும். ஊரின் புறத்திலேயே புலைச் சாதியினர் வசிப்பர். பறை அடிப்பது, நாற்றுநடுவது, மீன் உலர்த்துவது, கோழி வளர்ப்பது என்பன போன்றவை அவர்களின் தொழில்கள். அவர்களை ஆலயத்துக்குள் விடமாட்டார்கள்.


ஆதனூரிலுள்ள புலைப்பாடியில் நந்தனார் வாழ்ந்தார். அவர் தமக்கு அறிவு தெரிந்த நாளிலிருந்து இறைபக்தி மிகுந்தவராக விளங்கினார். எப்பொழுதும் அவருடைய வாய் 'சிவ சிவ'' என்று சொல்லிக்கொண்டிருக்கும். நந்தனார் தாம் செய்யுந் தொழிலெல்லாம் சிவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதினார். அவர் கோவில் வாத்தியங்களுக்கு வேண்டிய வாரும் தோலும் நரம்பும் தரும் பணியை மேற்கொண்டிருந்தார். பூசைக்கு வேண்டிய வாசனைத் திரவியங்களில் ஒன்றாகிய கோரோசனையையும் கொடுத்து மகிழ்வார். ஆலயத்தின் வெளியே நின்று, மனம் உருகி,



7. ஆதனூரில் நந்தனார் வாழ்ந்த சேரி.

இறைவனின் நாமாவளிகளைப் பாடுவார்; பத்திப் பரவசத்துடன் ஆடுவார்.

இவருக்குச் சிவத் தலங்களுக்குப் போகும் ஆசை பிறந்தது. ஆதனூருக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிறந்த சிவத்தலம் திருப்புன் கூர். அங்குச் செல்லவேண்டும், அங்குள்ள கோயிலில் வீற்றிருக் கும் சிவலோகநாதனைக் காணவேண்டும் என்று பேரார்வங் கொண்டார். அவ்வார்வம் அவரை உந்த, அவர் விரைவாகச் சென்று திருப்புன்கூரை அடைந்தார். தூரத்திற் கோபுரம் தெரிந்தது. நந்தனார் ஓட்டமும் நடையுமாகச் சென்று கோயிலை அடைந்தார். கோபுர வாயிலுக்கு நேராக வெளியே நின்றார். எப்பொழுது கதவு திறப்பார்கள், சிவலிங்கப் பெருமானைக் காணும் பாக்கியம் எப்பொழுது கிடைக்கும் என்று ஆவலாகக் காத்து நின்றார். கதவு திறக்கப்பட்டது. அவரது கண்கள் மூலத் தானேசுவரரை நோக்கின. என்ன பெரிய ஏமாற்றம்! நந்தியின் உருவமே தெரிந்தது.



8. திருப்புன்கூரில் நந்தனார் சுவாமியைத் தரிசிப்பதற்காக நந்தி விலகியிருத்தல்.

"ஆண்டவா, இதென்ன கொடுமை! உன்னைப் பார்க்க ஓடோடி வந்தேனே. வழியை மறைத்துக்கொண்டு, மலைபோல, ஒரு மாடு படுத்திருக்கிறதே" என்று புலம்பினார். ஆண்டவன் அடியார்க்கு எளியவனல்லவா? 'எனது பக்தன் என்னைக் காண

வந்துள்ளான்; சற்றே விலகியிரும் பிள்ளாய்; அவனுக்கு எனது சந்நிதானம் மறைகின்றதாம்' என்று அவன் ஆணை பிறப்பித்தான். நந்தி விலகியது, வெளிவாயிலில் நிற்கும் நந்தனாருக்குப் பளிச்சென்று சிவலிங்கக் காட்சி கிடைத்தது. அவர் ஆனந்தம் கொண்டார்; ஆடினார்; பாடினார்; இறைவனைத் தரிசிக்கும் பேறு பெற்றுவிட்டேன் என்று பெருமிதம் அடைந்தார்.

அன்பின் வடிவமாக நின்ற நந்தனாருக்கு ஓர் ஆசை பிறந்தது. 'எனக்கு இரங்கியருளிய இறைவனுக்கு நானொரு தொண்டு செய்ய வேண்டும்' என்று நினைத்தார். அப்பொழுது குடங்களில் தண்ணீர் சுமந்து கொண்டு வேலையாட்கள் உள்ளே செல்வதைப் பார்த்தார். இறைவன் அபிடேகத்துக்காகப் போகின்ற நீர்க் குடங்கள் அவை. அவற்றைப் பார்த்ததும் நந்தனார் தான் செய்ய வேண்டியது என்னவென்று நிச்சயஞ் செய்துகொண்டார். 'கோயிலுக்குப் பக்கத்தில் ஒரு குளம் வெட்டுவேன் என்று உறுதி கொண்டார். அங்கு ஓரிடத்திற் பள்ளம் ஒன்றிருப்பதை கண்டு அதைக் குளமாக வெட்டினார். தடையின்றி ஆண்டவன் திருப்பணிக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற ஆசையால் உருவாகிய குளம் அது. குளத்தை வெட்டி முடித்தபின் கோயிலைச் சுற்றி வலம் வந்து ஆடிப்பாடி, ஆண்டவனிடம் விடைபெற்றுத் தமது ஊருக்குச் சென்றார்.

நந்தனார் திருப்புன்கூருக்குப் போய் வந்தாரல்லவா? அதற்குப் பின் அவருக்குத் தில்லைக்குப் போகவேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது.

> ''தில்லை அம்பலத் தலமொன்று இருக்குதாம்—
> அதைக் கண்ட பேர்க்குச்
> சனன மரண பிணியைக் கருக்குதாம்''

என்ற ஒரு செய்தியை அவர் கேட்டார். அது அவரது சிந்தனையை நிறைத்துக் கொண்டது. தில்லையம்பலத்தில் என்ன காணலாம்? திருச்சிற்றம்பலத்தைக் காணலாம். அங்கே அம்பலத்தில் ஆடும் நடராசப் பெருமானது திருக்கோலத்தைக் காணலாம்.

நமது இதய வெளியில் ஞானமாக நிறைந்து நிற்கின்றது ஒரு சக்தி. அதுவே எமது உயிருக்கு உயிராக நின்று நம்மை இயக்குகின்றது. அச்சக்திதான் நடராசக் கோலம்கொண்டு இத்தலத்திற் காட்சியளிக்கின்றது. ஆண்டவன் வீற்றிருக்கும் இடமெல்லாம் கோயில் என்றாலும் அப்பெயரைத் தனது சிறப்புப் பெயராகக் கொண்டுள்ள தலமல்லவா சிதம்பரம்?

'சிதம்பரம் போகவேண்டும். அந்த ஆடும் பெருமானைத் தரிசிக்க வேண்டும்' என்ற துடிப்பு நந்தனாருக்கு ஏற்பட்டது. பகலெல்லாம் இதே நினைவு; இரவெல்லாம் நித்திரையில்லை; பொழுது விடிந்த பின்பும் இந்த நினைவன்றி வேறில்லை. ''இப்பொழுதே போகமுடியுமென்றால் எவ்வளவு நல்லது'' என்று நினைப்பார். அதே சமயம் ஓர் அச்சமும் ஏற்படும். நமது நிலையென்ன? தொழிலென்ன? ஆவுரித்துத் தின்றுழலும் புலையர் குலத்திற் பிறந்துவிட்டேனே; அங்கு தூய்மையே உருவான தில்லைமூவாயிரவர் ஆண்டவனுக்குப் பூசை செய்கிறார்களாமே. அங்கு நான் போவது எங்ஙனம்? என்று மனமுடைவார் நந்தனார்

ஆயினும், சிதம்பரம் செல்லவேண்டுமென்ற விருப்பம் அதிகரித்ததே தவிரக் குறையவில்லை, ஒவ்வொரு நாளும் 'நாளை நான் கட்டாயம் சிதம்பரம் போவேன்' என்று உறுதி கொள்வார். இங்ஙனமே நாள்கள் பல கழிந்தன. 'நாளைக்குப் போவேன், நாளைக்குப் போவேன்' என்று சொல்லி வந்தபடியால் அவருக்கு எல்லோரும் 'நாளைப்போவார்'' என்று பட்டம் சூட்டினார்கள். நாம் அவரைத் 'திருநாளைப்போவார்' என்றே இனி அழைப்போம்.

திருநாளைப்போவார் தம் கனவு நனவாகும் நாளும் வந்தது. அவர் தில்லை வந்து சேர்ந்தார். தில்லைத் தலத்தில் எங்கே பார்த்தாலும் ஓம குண்டங்களும், வேத ஒலியும், அடியார் மடங்களும் அரகர என்ற ஓசையும் நிறைந்திருப்பதைக் கண்டு அவர் வெருண்டு நின்றார். 'மிகவுந் தூய்மையான இந்தச் சூழலிலே தூய்மையற்ற யான் எங்ஙனம் புகுவேன்? இவற்றைக் கடந்து சென்று இறைவனின் நடனக் கோலத்தை எங்ஙனம் காண்பேன்? என்ற எண்ணம் வருத்த, இரவும் பகலும் ஓயாது தில்லையைச் சுற்றிச் சுற்றி வலம் வந்தார். உள்ளம் வேதனையால் நொந்தது; உடல் சோர்வுற்றது. அவர் சற்றே உறங்கினார்; அப்பொழுது அற்புதமான ஒரு கனவு கண்டார். இறைவனே கனவில் வந்து தோன்றுகின்றான்; தன்னை அடைய அலையும் பத்தரைத் தேற்றுகின்றான், 'தில்லை மூவாயிரவரைத் தீவளர்க்கப் பணித்துள்ளேன்; அதில் மூழ்கி எழுந்தாற் புதிய வடிவம் பெறுவாய்; அத்துடன் நம்மை வந்தடைவாய்'' என்று அன்பு மொழி பகர்கின்றான் இறைவன்.

தில்லை மூவாயிரவருக்கும் ஒரு கனவுக் காட்சிதோன்றியது. ''நமது பத்தன் ஒருவன் ஊருக்கு வெளியே படுத்திருக்கின்றான்; நந்தன் என்ற பெயரினன்; நம்மைக் காண வந்துள்ளான்; அவன்

மூழ்கத் தீ வளர்ப்பீர்; அவனை நம்மிடம் அழைத்து வருவீர்' என்று நடராசப் பெருமானின் கட்டளை அக்கனவுக் காட்சியிற் பெறப்பட்டது.

திடுக்குற்று எழுந்தார்கள் தில்லைவாழ் அந்தணர்கள். ''இறைவனது பத்தராம்; அவர் எங்கே'' என்று தேடி அலைந்து திருநாளைப் போவாரைக் கண்டனர்; அவர் அடியில் வீழ்ந்து வணங்கினர். ''வாருங்கள்'' என்று அழைத்தனர்; இறைவன் ஆணையை அவருக்கு எடுத்துக் கூறினர்; தெற்குக் கோபுர வாயிற்புறத்திலே தீ வளர்த்தனர். அவர்கள் வளர்த்த தீயில் நந்தனார் மூழ்கினார்; முப்புரிநூல் தரித்த முனிவர் உருவிற் சடைமுடியுடன் தீக்கொழுந்து போல வெளியே வந்தார். இவ்வதிசயத்தைக் காண்பதற்குக் கடல் போலத் திரண்டு வந்த மெய்யடியார்கள் கைகூப்பித் தொழுதனர்; இறைவனது கருணைத் திறத்தை நினைத்து விம்மிதம் அடைந்தனர்.

அன்புப் பிழம்பாகக் காட்சியளித்த திருநாளைப்போவார், அகமும் புறமும் ஆண்டவனைக் காணும் ஆர்வம் நிறைந்தவராய், தெற்குக் கோபுர வாயில் வழியே தில்லை நடராசர் ஆடும் அம்பலத் தெல்லையை அடைந்தார், ''உள்ளே புகுந்தார்'' நடமாடும் எல்லையிலே தலைப்பட்டார்; யாவரும் கண்டிலர்'' என்று பெரிய புராணத்திற் சேக்கிழார் பாடுகின்றார்.

''தில்லைவாழ் அந்தணரும் உடன் செல்லச் சென்றெய்தி
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
ஒல்லைபோயுள் புகுந்தார் உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால்.

இந்தக் காட்சியைக் கண்ட தில்லைமூவாயிரவர் அதிசயித்தனர். அடியார்கள் துதி செய்தனர், திருநாளைப்போவார் நடராசப் பெருமானுடைய அருளைப்பெற்ற வரலாறு சுந்தரரின் உள்ளத்தையும் உருக்கியது. அவர் ''செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்'' என்று திருத்தொண்டத் தொகையிலே பெருமை தோன்றக் கூறுகின்றார்.

# 13. நட்டமாடும் நம்பனுக்கொரு மீன்

பெரிய புராண நாயன்மார்கள் பலர் தாம் பிறந்த குலத்தால் வேறுபட்டவர்கள்; தத்தம் குலத்துக்குரிய தொழிலையும் மேற் கொண்டிருந்தவர்கள். ஆனால், அவர்களுக்கிடையே ஒரு பொதுவான சிறப்புக் காணப்பட்டது. சிவனை ஒருபொழுதும் மறவாத சிந்தை உடையவர்களாய், உள்ளும் புறமும் தம்மை அப்பெருமானுக்கே அர்ப்பணித்து வாழ்ந்தமையே அது. அதனால், 'சிவத்தொண்டர் குலம்' என்னும் தனிப்பெருமை பெறுதற்கு அவர்கள் உரியவர்களாயினர். ஏற்றத் தாழ்வின்றி இவ்வடியார்கள் யாவரும் சேக்கிழாராற் சமமாகப் போற்றப் படுகின்றனர். இவர்களுள் ஒருவரே அதிபத்த நாயனார். அவர் பரதவ குலத்தைச் சேர்ந்தவர்.

அதிபத்தர் வாழ்ந்த நாடு சோழ நாடு. அங்கே கடல் அலைகள் வந்து மோதும் நாகபட்டினம் எனும் துறைமுகப்பட்டினம் இருக்கின்றது. அவர் காலத்திலே யானைகள், குதிரைகள், மணிகள், துகில்கள் எனப் பல பொருள்கள் மரக்கலங்களில் அங்கு வந்து குவிந்தன. வணிகத்திற் சிறந்து விளங்கிய அந்நகரின் ஒரு பக்கத்திலே பரதவர் கூடி வாழ்ந்த நுளையர்பாடியிலே பிறந்தவர் அதிபத்தர்.

அந்நுளையர்பாடியானது மீனுணவு மலியப்பெற்றது; மீன் விற்றலினால் அதிக செல்வம் பெற்று விளங்கியது. 'உலர்ந்த மீன்களை உண்ணும் விருப்புடன் பறவைகள் அங்கே கூடிநிற்கும். வலைகளை வடம்பிடித்து இழுக்கும் மீனவரது ஒலியும், மீன்களைக் குவை குவையாக விலை பகர்ந்து விற்பவர் ஒலியும், தலைசிறந்த வெண்சங்குகளைக் கரையிலே சொரிபவர்களின் ஒலியும், அலை வீசும் நெடுங்கடலின் ஒலிக்கு எதிரொலியாக அமையும்' என்று நுளையர் பாடியைச் சேக்கிழார் வருணிக்கின்றார்.

கடலிலே நெடுந் தூரஞ் சென்று, வலை வளைத்துத் தாம் பிடித்த மீன்களைக் கரைசேர்க்கும் அவ்வலைஞர்களுக்கெல்லாம் தலைவராக அதிபத்தர் விளங்கினார். அவர் சிவபிரானைத் தம் மனக்கோயிலில் இருத்தி, அவன் நினைவோடு தம் தொழில் பார்த்து வந்தார்; சிவதொண்டுகள் செய்வதில் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். தமக்குக் கிடைக்கின்ற மீன்களிலே சிறந்த ஒரு மீனை இறைவனுக்கென ஏன் வீட்டுவிடக்கூடாது என்ற உயர்ந்த சிந்தனை ஒரு பொழுது அவரது உள்ளத்திலே தோன்றியது.




9. அதிபத்தர் நிவமும் ஒரு மீனை இறைவனின் திருப்பாதங்களுக்கென அர்ப்பணித்தல்.

அன்று தொட்டுத் தினமும், வலையில் அகப்படும் மீன்களை ஆவலுடன் நோக்குவார். உருவப் பொலிவும் அழகும் மிக்க மீனைக் கண்டதும் அவரது உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். ''இது எனையாளும் ஈசனுக்கே உவந்தது'' என்று சொல்லி அதனைத் தூக்கிக் கடலில் விட்டுவிடுவார். ஒரு மீன் மட்டும் அகப்பட்டபோதும் ''இது என் அந்தப்பிரானுக்கென்றே கிடைத்தது; அவன் கழல்களையே சென்று அடையட்டும்'' என்று அம்மீனையும் கடலில் விட்டுவிடுவார். இவ்வாறு இறைவனது திருப்பாதங்களுக்கெனத் தினமும் ஒரு மீனை அர்ப்பணித்து மகிழ் வெய்தி வந்தார் அதிபத்தர்.

அதிபத்தரது அன்பைச் சோதிக்கச் சித்தங்கொண்டான் இறைவன். பொன்னை அக்கினியிற் புடம்போட்டு எடுக்கும் பொழுது தானே அதன் தூய்மை வெளியாகும். பெரிய புராண நாயன்மார்களுக்கு, அவர்களது பக்தி தூய்மையானது என்பது உறுதியாகும் வரை, இறைவன் அவர்களது வாழ்க்கையிற் பல துன்பங்களைக் கொடுத்துச் சோதித்து வந்திருக்கிறான். ஆனால் எத்துன்பம் வந்த போதும் அவர்களது பக்தி குறையவில்லை. அதே வழியில் அதிபத்தரையும் சோதிக்கத் திருவுளம் கொண்ட சிவபிரான், அதிபத்தருக்குத் தினமும் ஒரு மீன் மட்டுமே கிடைக்கும்படி செய்தார்.

அடுத்தடுத்து அநேக நாள்களாக ஒரு மீனே அகப்பட்டது. 'தனக்குப் பின் தானம்' என்று அதிபத்தர் எண்ணினாரா? இல்லை. இறைவற்கென விட்டுவிட ஒரு மீனாவது கிடைத்ததே என்று அவர் மனமகிழ்ந்தார். இவ்வாறு பல நாள்களாக ஒரு மீன் மட்டும் அகப்பட்டமையால் மீனுணவினாற் பெற்று வந்த செல்வங் குறைந்தது. அதிபத்தரை அண்டி வாழ்ந்த சுற்றத்தவர் பசியால் வாடினர். உணவின்றி அதிபத்தரது அழகிய திருமேனியுந் தளர்ந்தது. வறுமையிலும் தம் இலச்சியத்தில் வழுவாது நின்றார் அதிபத்தர். கிடைத்துவந்த ஒரு மீனையும் எம்பெருமானுக்கென விட்டு மகிழ்ந்தார்.

அப்படியிருக்கும் நாளிலே ஒரு நாள் இதுவரை கிடைக்கப் பெறாத தலைசிறந்த ஒரு மீன் அகப்பட்டது. அது பசும் பொன்னிலே நவமணிகள் வைத்து இழைக்கப் பெற்றதோ என்று காண்போர் வியக்கும்படி கண்களைக் கூசச் செய்தது. ''உலகம் முழுவதையும் இதற்கு விலையாகக் கொடுத்தாலும் தகும்'' என்று கூறி வலைஞர் அம்மீனைக் கரைக்குக் கொணர்ந்தனர். ''சிவந்த சூரியன் இதோ உதித்து விட்டானோ?'' என்று நின்றவர்கள் அதிசயித்தனர். ''மீனொன்று படுத்தனம்'' என்று வலைஞர் அதிபத்தருக்கு மீனைக் காண்பித்தனர். ஒளி மிகுந்த அந்த மீனைக் கண்ட அதிபத்தர் மனம் மிக மகிழ்ந்தார். ''பெருமானே, இம் மீன் உன் பொற்பாதங்களுக்கே ஆகட்டும்'' என்று கூறி, அம் மீனைத் திரும்பவுங் கடலில் விட்டார்.



10. அதிபத்தர் பொன் வர்ண மீனை அர்ப்பணித்தபோது இறைவன் காட்சிகொடுத்தல்.

பொருட் செல்வமே சிறந்த செல்வம் என்று போற்றுவது இவ்வுலகம். பல நாள்களாக வறுமையினால் வாடியவர் அதிபத்தர். அரும்பொருளீட்டித் தரவல்ல அழகிய பொன்மீன் அகப்பட்டபோது, அதனை விற்றுத் தம் துன்பம் போக்கியிருக்கலாம். ஆனால், எமது அடியார் பொருளாசையை முற்றும் துறந்தவர்; தாம் கொண்ட பக்தியின் உறுதி குலையாதவராக, அழகிய அம்மீனையும் இறைவனது பொற் கழல்களுக்கே விட்டு மகிழ்ந்தார். அதிபத்தரின் தளராத பக்தியைக் கண்டுகளித்த இறைவன், அவருக்கு இடபாரூடராய்க் காட்சி கொடுத்து அருள்புரிந்தார்.

வாழ்வில் நாம் எந்தத் தொழிலையும் மேற்கொள்ளலாம்; கிடைக்கும் வருவாய் சிறிதாகவோ, பெரிதாகவோ இருக்கலாம்; எந்த நிலையில் நாம் இருந்தாலும் தூய்மையான, தெய்வீகச் சிந்தனையுடன் கூடிய மேம்பட்ட வாழ்க்கையை நடத்த முடியும்; உயர்ந்த சிந்தனைகளைப் போற்றி வாழ்விற் கடைப்பிடிக்க முடியும். இந்த உண்மைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு அதிபத்த நாயனாரது வரலாறு ஆகும்.

# 14. அப்பாலும் அடிச்சார்ந்தார்

சேக்கிழார் சுவாமிகள் இயற்றிய திருத்தொண்டர் புராணத்தைப் பற்றி ஏற்கனவே படித்திருக்கின்றோம். இச் சைவத் தமிழ்க் காப்பியத்திலே அறுபத்துமூன்று தனியடியார்களின் சிவப் பணிகளைச் சேக்கிழார் விதந்து கூறியிருக்கின்றார்; அத்துடன் ஒன்பது வகைத் தொகையடியார்களின் சிறப்பினையுங் குறிப்பிடுகின்றார்.

தொகையடியார்களுள் ஒரு பிரிவினரான அப்பாலும் அடிச்சார்ந்தாரை "அப்பாலும் அடிச்சார்ந்தார்க்கு அடியாருக்கும் அடியேன்" என்று சுந்தரர் போற்றியுள்ளார். திருத்தொண்டர் புராணத்திற் கூறப்படும் தனியடியார்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திலே தமிழ்நாட்டில் வாழ்ந்தவர்கள். அவர்கள் காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் எத்தனையோ அடியார்கள் தமிழ் வழங்கு நாட்டிற்கப்பால் இறைவழி நின்று பரகதி அடைந்திருக்கிறார்கள். அவர்களை "அப்பாலும் அடிச்சார்ந்தார்' என்று சேக்கிழார் கூறுகின்றார்.

சேக்கிழார் வழிவந்த சிவநேயச் செல்வர்களில் ஒருவரான உமாபதி சிவாசாரியார் "அப்பாலும் அடிச்சார்ந்தார்" என்ற தொடரைப் பின்வரும் செய்யுளிலே சிறப்புற விளக்குகின்றார்.

செப்பரிய பொய்யடிமை இல்லாதார் மெய்யில்
திருநீறு பூசுமுனி வரர் உலகு தன்னில்
அப்பாலும் அடிச்சார்ந்தார் இவர்கள் தமிற் சிலபேர்
ஆய்ந்ததமிழ்ப் பேர் சிலபேர் மலையாளர் சிலபேர்
தப்பாத தெலுங்கர் சிலர் மற்றுளதே சத்தோர்
தவஞ்செய்து பரகதியை அடைந்த வர்கள் சிலபேர்
இப்போதும் இருந்தரனை வழிபடுவோர் சிலபேர்
இனிமேலும் திருமேனி கொடு வருவோர் சிலரே.

தமிழ்பேசும் நல்லுலகத்திற்கு அப்பாற் பிறமொழி பேசும் மக்களிடையேயும் பொய்யடிமை இல்லாது வாழ்ந்து பரகதி அடைந்த அடியவர்கள் வாழ்ந்தமையையும், இனியும் வாழும் சாத்தியத்தையும் உமாபதி சிவம் இச்செய்யுளால் வலியுறுத்துகின்றார்.

பிள்ளைகளே, சிந்தாந்த சைவச் சான்றோர் வாழ்கின்ற தமிழ் வழங்கு பிரதேசங்களுக்கு அப்பாலும் நிறைமாந்தராய் இருந்து இறையருள் பெற்ற அனுபூதிமான்கள் வாழ்ந்தனர், வாழ்கின்றனர், வாழப்போகின்றனர் என்பதை நாம் மனத்திற் கொள்ள வேண்டும். இக்கருத்து நமது சமயத்திற்கே உரிய சிறந்த தொரு கொள்கையாகும்.

இத்தகைய அனுபூதிமான்களுள் உலகறிய அண்மையில் வாழ்ந்த சுவாமி விவேகானந்தர் ஒருவராவார். அவர் வங்காள தேசத்தைச் சேர்ந்தவர். சிவ வணக்கத்திலே தலைசிறந்த குடும்பத்திற் பிறந்தவர். பொய்யடிமையில்லாத வாழ்வு வாழ்ந்தவர். துறவியாய் விளங்கிய இப்பெரியாரது வாழ்க்கையைச் சற்றுப் பார்ப்போம்.

## சுவாமி விவேகானந்தர்

1897 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆம் திகதி காவியுடை தரித்த பெரியார் ஒருவருக்குக் கொழும்புத் துறைமுகத்திலிருந்து அவர் தங்கியிருந்து பாண்ஸ் பிளேஸ் மாளிகை வீதியெங்கணும் அமோகமான வரவேற்பு. குதிரைகள் பூட்டிய வண்டியொன்றில் அவர் அழைத்துச் செல்லப்படுகிறார். வீதிகள் தோறும் தோரணங்கள்; சைவப் பெருமக்களது வாயில்கள் தோறும் நிறை குடங்கள்; பாரதத்திலிருந்து அமெரிக்காவிலே சிக்காகோ நகரில் நடைபெற்ற சர்வமத மாநாட்டிற் கலந்து கொள்ளச் சென்று, இந்து மதத்தின் சிறப்பினை உலகறியச் செய்துவிட்டுத் திரும்பிய மகானைக் காண ஈழத்துச் சைவ மக்களது உள்ளம் துடித்தது. மலர்ந்த முகம்; ஞான ஒளிவீசும் கண்கள்; ஏறுபோன்ற பீடுநடை, இவை யாவும் அமையப்பெற்ற இந்தப் பெரியார் யார்? அவரே சுவாமி விவேகானந்தர்.

உலகில் மக்கள் சமுதாயம் உய்யும் நெறியைக் காட்டியருளிய பெரியார்களில் ஒருவர் அவர். இந்து சமய பாரம்பரியத்திற் சமய வாழ்வானது யாது என வாழ்ந்து காட்டிய பெரியார்கள் உளர். இவர்களுள், 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி ஏழாந்தரப் பாட நூலிற் கற்றீர்கள். இப்பொழுது அவரது முதற் சீடராகிய சுவாமி விவேகானந்தரைப் பற்றி அறிவோம். இராமகிருஷ்ணர் உலக மக்களுக்கு மெய்ஞ்ஞான ஒளி காட்டுதற்கென ஏற்றிவைத்த ஞான விளக்கே சுவாமி விவேகானந்தர். பாரத பூமி ஆங்கில மோகத்திலே திளைத்து, ஆன்மீக உணர்வு குன்றி, சமய நெறி சீர்குலைந்து இருந்த காலத்திலே இந்துக்களது உள்ளத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத் தோன்றிய உத்தமர் அவர்



11. சுவாமி விவேகானந்தர்

வங்காளத்திலே கல்கத்தா நகர் ஆங்கிலேயர் ஆட்சியின் நிலைக்களமாக விளங்கியது. அந்நகரிலுள்ள உயர் நீதி மன்றத்தில் விசுவநாத தத்தர் என்பவர் பணிபுரிந்து வந்தார். அவருடைய மனைவியார் பெயர் புவனேசுவரி தேவியார். அவர்களுக்கு 1863 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆம் திகதி ஓர் ஆண்பிள்ளை பிறந்தது. அதற்கு அவர்கள் நரேந்திரன் எனப் பெயரிட்டனர்.

நரேந்திரன் தனது இளமைப் பிராயத்தில் வங்காளி, ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளையுந் துறைபோகக் கற்றான். அம்மொழிகளில் அமைந்த இலக்கியங்களைச் சுவைத்தான். வரலாற்று நூல்களை விரும்பிப் படித்தான். உபநிடதங்களையும், மேலை நாட்டுத் தத்துவ நூல்களையும் பைபிள், குரான் போன்ற சமய நூல்களையும் தனது நுண்ணிய அறிவு கொண்டு ஆராய்ந்தான். மேலைத் தேய, கீழைத் தேய நுட்பங்களை ஒருங்கு பெற்ற பீ. ஏ. பட்டதாரியானான்.

நூலறிவுடன் நாவன்மை, சங்கீத நாடகக் கலைஞானம் யாவும் அவனிடம் ஒருங்கே மிளிர்ந்தன. விளையாட்டுக்களிலும் அவன் திறமை மிக்கவனாய்த் திகழ்ந்தான். கேட்போரைக் கவரும் சொல்லாற்றல், எவ்வித இடர்களுக்கும் அஞ்சாத மன உறுதி, உரமேறிய உடற்கட்டு ஆகியன நரேந்திரனுக்குத் தனி வசீகரத்தைத் தந்தன.

கடவுட் பற்று அவனுடன் கூடவே பிறந்தது போலும்! துடுக்கு மிகுந்த இச்சிறுவனை அடக்குவதற்குப் புவனேசுவரி அம்மையார் படாதபாடு படுவார். குளிர்ந்த நீரைத் தலையிற் கொட்டிக் காதில் 'சிவா' 'சிவா' என்று ஓதினால் துடுக்கு எவ்வாறோ அடங்கிவிடும். ''நரேன், நீ நல்ல பிள்ளையாக ஒழுகாவிட்டாற் சிவபிரான் உன்னைக் கைலாயத்துக்கு வர விடமாட்டார்'' என்று கூறினாலும் பேசாது அவன் இருந்து விடுவான், பிரதிமைகளை வைத்துச் சிறுவன் வழி பட்டு வந்தான். பூஜை அறையில் உலகை மறந்து தியானத்திலும் அவன் அவ்வப்பொழுது மூழ்கிவிடுவான். சுலபமாக மனத்தை ஒரு முகப்படுத்தக்கூடியவன் அவன். அவனுடன் கூட அவனது கடவுட் பற்றும் வளர்ந்து வந்தது.

பதினெட்டு வயது நிரம்பிய வாலிபனது உள்ளத்திற் கடவுளைக் காண வேண்டும் என்னும் ஆசை கொழுந்துவிட்டு எரிந்தது. இந்நிலையிலேதான் தக்கிணேசுவரத்து இராமகிருஷ்ணரை முதன் முதலில் அவன் சந்தித்தான். இராமகிருஷ்ண பரமஹம்சரை அவன் அவ்வாறு முதலிற் சந்தித்தது 1881 ஆம் ஆண்டில்.

இராமகிருஷ்ணர் நரேந்திரன் சந்திப்பு ஆன்மீக வரலாற்றிலே மிக முக்கியமானதொரு நிகழ்ச்சி. இராமகிருஷ்ணர் நூலறிவு இன்றி அனுபவஞானம் கைவரப்பெற்றவர். இறையனுபவத்தில் மூழ்கித் திளைத்தவர். பாரதத்தின் பாரம்பரிய மரபில் வளர்ந்தவர். எளிமையே வடிவானவர். அத்தகையவர் முன்னிலையிலே ஆங்கிலக் கல்வி தந்த ஆணவமிடுக்குடன் ஓர் இளைஞன் வருகின்றான். பழைய பாரதத்தை நவீன பாரதம் சந்திக்கின்றது.

''ஐயா, தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?'' என்று தான் இதுவரை மனத்திற் சுமந்து வந்த கேள்வியை இராமகிருஷ்ணரிடம் வெளியிடுகிறான் நரேந்திரன். 'உள்ளம் கருதிய சீடன் வந்து விட்டான்' என்று பெருமகிழ்ச்சியடைகிறார் இராமகிருஷ்ணர். ''கண்டிருக்கிறேன் பிள்ளாய், கண்டிருக்கிறேன்; இதோ உன்னை என் கண்முன் காண்கிறேன் அல்லவா? அது போல அவனையும் கண்டிருக்கிறேன். இல்லை உன்னை நான் காண்பதை விட இன்னமும் தெளிவாக அவனைக் கண்டிருக்கிறேன்'' என்று அவர் விடை பகருகிறார். அவற்றைக் கேட்ட நரேந்திரனின் உள்ளம் பூரித்தது.

இராமகிருஷ்ணரின் விருப்பத்துக்கிணங்கி நரேந்திரன் அடிக்கடி தக்கிணேசுவரம் வந்தான். அவருடைய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் சீர்தூக்கிப் பார்த்துத்தான் நரேந்திரன் ஏற்றுக் கொள்வான். இடைக்காலத்தில் தந்தையார் இறந்து, வறுமையால் தனது குடும்பம் வாடியபொழுது நாத்திகனாகவும் அவன் மாறியவன். ஆனால் நாட் செல்லச் செல்லப் பரமஹம்சர் தொடர்பாற் கடவுளைப் பற்றி அவன் கொண்ட ஐயங்கள் நீங்கின. இராமகிருஷ்ணரைக் குருவாக ஏற்றுக்கொள்ளும் நிலை வந்தது.

குருவின் அருளினாற் பேரறிவும் இறையனுபவங்கள் பலவும் பெற்றான் நரேந்திரன். அவ்வின்ப அனுபவங்களிலே திளைத்திருக்க விரும்பினான். ''நரேன், இது உனக்குத் தகாது. ஆல மரமாய் நின்று, ஆயிரக் கணக்கான மக்களுக்கு நிழல் தருவாய் என்றல்லவா நான் நினைத்தேன், நீயோ உனது விமோசனத்தை மட்டுமே நாடுகிறாய் என்று அவனது சமூகப் பணியை அவனுக்கு நினைவுறுத்தினார் பரமஹம்சர். குருநாதரால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டான் நரேந்திரன். ஐந்து ஆண்டுகளிலே அவரது சீடர்களுக்கெல்லாம் அவன் தலைவனானான்.

குருநாதர் தொடர்பால் அவன் அறிந்துகொண்ட உண்மைகள் பல. 'கடவுள் என ஒருவர் உண்மையில் இருக்கிறார். அனுபவத்தால் மட்டுமே அவரை அறிந்து கொள்ளலாம். கடவுட் காட்சி பெறுதலே எமது இலட்சியமாக வேண்டும். கடவுள் உருவமற்றவராகவும் உருவமுடையவராகவும் இருக்கிறார். உருவச் சிலைகளிற் கடவுளைக் காணும் நாம் அவரை உயிருடன் உலவும் மனிதரிலும் காணலாம். மனிதரில் வதியும் அவ்விறைவனுக்கும் நாம் சேவை செய்தல் வேண்டும். ஒருவனது வயிற்றுப் பசியைத் தீர்த்த பின்பே அவனுக்குச் சமயம் போதிக்கலாம்'. இத்தகைய கருத்துக்கள் யாவற்றையும் தன் குருநாதரிடமிருந்தே பெற்றுக் கொண்டான் நரேந்திரன்.

நூலறிவு பெற்றிருந்த நரேந்திரனுக்குக் குருவின் அருளினால் அனுபவ ஞானமும் கைகூடிற்று. உலகினர்க்கு உய்யும் நெறி காட்டும் தகுதியினையும் அவன் பெற்றுவிட்டான். தம் சக்தி அனைத்தையும் நரேந்திரனுக்கு ஈந்து 1886 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆந் திகதி இராமகிருஷ்ணர் இறைவனடி சேர்ந்தார். அவர் ஏற்றிய ஞானதீபம் சுடர்விட்டு எரிய ஆரம்பித்தது.

தன் குருநாதர் கருத்தின்படி மக்கட் சமூகத்துக்குச் சேவை செய்வதை இனித் தன் கடனெனக் கொண்டான் நரேந்திரன். துறவு வாழ்க்கையை அவன் விரும்பி ஏற்றான். இத் துறவியின் பெயர் சுவாமி விவேகானந்தர்.

இமாலயம் தொடக்கம் கன்னியாகுமரி வரை சுவாமி விவேகானந்தர் யாத்திரைகளை மேற்கொண்டார். அறியாமையாகிய இருளிலும் ஏழ்மையிலும் கோடானுகோடி மக்கள் படும் இன்னல்களைக் கண்டு அவரது நெஞ்சு விம்மியது. மேனாட்டு மோகத்திற் சிக்கியிருந்த பாரத மக்களுக்கு அவர்களது ஆன்மீக பாரம்பரியத்தின் சிறப்பினை எங்ஙனம் உணர வைக்கலாம் என்று சிந்தித்தார். பாரத நாட்டின் பெருமையை மேனாட்டவரும் உணரும்படி செய்தலே இதற்குச் சிறந்த வழி என்று முடிவு செய்தார். இச் சமயத்திலேயே அமெரிக்காவிலே சிக்காகோ நகரிற் சர்வமத மாநாடு கூட இருந்த செய்தி அவருக்கு எட்டியது.

1893 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆந் திகதி உலகின் ஆன்மீக வரலாற்றிலே முக்கியத்துவம் வாய்ந்த தினம். சமயப் போட்டிகள் பூசல்கள் தலையெடுத்த ஒரு காலத்தில் உலகின் வரலாற்றிலேயே முதன்முதலாக ஒரு சர்வமத மாநாடு கூட்டப்பட்டது. மதத் தலைவர்கள் பலரும் கூடியுள்ள மாநாட்டிலே அன்பர்களது வேண்டுகோளுக்கு

இணங்கி இந்து மதத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார் சுவாமி விவேகானந்தர். இந்து மதத்தின் பெருமையை உலகறியச் செய்யும் பணி அவரைச் சார்ந்தது.

பேச்சாளராகக் கலந்து கொண்ட தலைவர்கள் யாவரும் தத்தம் மதத்தின் அருமை பெருமைகளை விதந்துரைந்தனர். சபையினரை நோக்கினார் சுவாமி விவேகானந்தர். 'மதத்தால், இனத்தால், நிறத்தால் வேறுபட்ட மக்கள் யாவரும் ஒரே இறைவனது குழந்தைகளே, எமது சகோதரரே என்ற எண்ணம் உள்ளத்திற் பளிச்சிட்டது. ''அமெரிக்க நாட்டுச் சகோதர சகோதரிகளே'' என விளித்துத் தமது பேச்சை அவர் ஆரம்பித்தார். ''மக்கள் யாவரையும் ஒரே குடும்பமாகக் காணும் இந்த ஞானி யார்? எம்மையும் தமது சகோதரராகக் கட்டித் தழுவும் இத்தூர தேசத் துறவி யார்? எனச் சபையினர் சுவாமிகளது ஆரம்ப உரையிலேயே அவர் வசப்பட்டு நின்றனர்.

பிரபஞ்சத்திலேயே மிகமிகத் தொன்மை வாய்ந்த துறவியர் திருக்கூட்டத்தின் சார்பில், எல்லா மதங்களுக்கும் அன்னையான இந்து மதத்தின் சார்பில், கோடானுகோடி இந்துக்களின் சார்பில் சபையோருக்கு நன்றி செலுத்தினார் விவேகானந்தர். பல்வேறு நதிகளும் வெவ்வேறு இடங்களில் உற்பத்தியானாலும் ஒரே கடலிலே சென்று கலக்க வில்லையா? அவ்வாறே சமயங்கள் யாவும் ஒரே கடவுளையே சென்றடைகின்றன. எனவே, மதத்தின் பெயரால் சண்டையிடுவதை ஒழித்து மக்கள் சகோதர மனப்பான்மையுடன் வாழ வேண்டும் என அவர் வற்புறுத்தினார்; வேதமும் உபநிடதமும் புகட்டும் கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துக்கூறி, இந்து மதத்தின் பெருமையை உலகறியச் செய்தார்.

சிறிய சொற்பொழிவேயானாலும் அவரது சர்வசமய, சமரசக் கருத்துக்கள் மாநாட்டின் குறிக்கோளை நிறைவேற்றி வைத்தன. அவர் வார்த்தைகள் யாவும் மேனாட்டு மக்களது ஆன்மீக உணர்ச்சியைத் தூண்டிவிட்டன. அவரது புகழ் எங்கணும் பரவியது. குருதேவரின் அருளினால் விவேகானந்தர் குன்றிலிட்ட தீபமானார். இந்து சமயக் கருத்துக்கள் அமெரிக்காவில் மட்டுமன்றிப் பல ஐரோப்பிய நாடுகளிலும் பரவும் வகையில் அந்நாடுகளுக்கு அவர் சென்று சொற்பொழிவாற்றினார். பாரத மக்களின் சேவைக்கெனச் சேவியர் தம்பதிகள், சகோதரி நிவேதிதை என்போர் அடங்கிய மேலை நாட்டுச் சீடர்கள் அவரைத் தொடர்ந்து வந்தனரென்றால் அவரின் பெருமையை என்னென்பது?

'பாரதம் ஒரு அநாகரிக நாடு; பாரத மதம் ஒரு அநாகரிக மதம்' எனத் தாம் இதுவரை எண்ணியது தவறு; பாரதத்திடமிருந்து தாம் கற்கவேண்டியவை ஏராளமுண்டு என மேனாட்டார் அப்பொழுது உணரத் தலைப்பட்டனர். அமெரிக்காவில் இந்துமத அறிவைப் புகட்டுதற்கெனச் சன் பிரான்சிஸ்கோ நகரிற் சங்கமொன்றையும் 'சாந்தி ஆச்சிரமம்' என்ற ஒரு நிலையத்தையும் அவர் ஏற்படுத்தினார். 1897 ஆம் ஆண்டு அவர் தாய்நாடு திரும்பினார்.

மூன்று வருட காலம் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் இந்துமதப் பணியாற்றிய புகழுடன் திரும்பிய மகானை முதலில் வரவேற்று உபசரிக்கும் பாக்கியத்தைப் பெற்றவர்கள் கொழும்பில் வாழ்ந்த சைவ மக்கள். அவர் பிரயாணம் செய்த நீராவிக் கப்பல் 1897 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி கொழும்புத் துறைமுகத்தை அடைந்தது. அவரை வரவேற்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. வரவேற்புக் குழுவுக்குத் தலைவராக விளங்கியவர் கனம். பொ. குமாரசுவாமி அவர்கள். சுவாமிகள் கொழும்பு மாநகரிலிருந்து கண்டி, மாத்தளை, அனுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்தார். கொழும்பிற் 'பரிசுத்த பாரத பூமி', 'இந்துமதம்' எனும் விடயங்கள் பற்றியும் அனுராதபுரத்தில் 'சமய வாழ்விற் சகிப்புத் தன்மை' எனும் பொருள் பற்றியும் யாழ்ப்பாணத்தில் 'நமது மதம்' எனும் பொருள் பற்றியும் அவர் சொற்பொழிவு ஆற்றினார் இலங்கையிற் பதினொரு நாள் திக்கு விஜயத்தை முடித்துக்கொண்டு சனவரி 25 ஆம் திகதி அவர் இந்தியா திரும்பினார். சுவாமி விவேகானந்தரது ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டதே கொழும்பு விவேகானந்த சபை.

'பரலோக சிந்தனைகள் மட்டும் சமயமாவதில்லை. இகவாழ்வு, பரவாழ்வு இரண்டின் மேம்பாட்டுக்கும் உதவுவதே இந்து சமயம்' என்று பரமஹம்சரிடம் அவர் உபதேசம் பெற்றிருந்தார். எனவே, தாய்நாடு திரும்பியதும் பரவாழ்வுக்கு உதவும் சமயப் பணியுடன் இகவாழ்வுக்கு வழிகாட்டும் சமூகப் பணியையும் ஒருங்காற்றுதற்கெனக் குருநாதர் பெயராற் சத்சங்கம் ஒன்றை அவர் உருவாக்க முயன்றார். அதன் விளைவாகத் தோன்றியவையே இன்று நாம் காணும் இராமகிருஷ்ண சங்கம், இராமகிருஷ்ண மடங்கள் என்பன. அவை எண்ணிறந்த மக்களுக்கு, மருந்தளித்து, உணவளித்து, உடையளித்து, கல்வியளித்து வருகின்றன; மக்கட் குலம் உடற்பலமும் மனவளர்ச்சியும் பெற்று ஆன்மீக விடுதலைக்கான

முயற்சியில் ஈடுபட வழிவகுக்கின்றன; தருமப் பிரசங்கங்களுக்கு முதலிடங் கொடுக்கின்றன.

இம்மடங்களுள் விவேகானந்த சுவாமிகளது ஆதரவில் முதன் முதலாகத் தாபிக்கப்பட்ட மடம் கங்கை நதி தீரத்திலே தக்கிணேசுவரத்தில் அமைந்த பேலூர் இராமகிருஷ்ண மடம். அது இராமகிருஷ்ண மடங்களுக்கெல்லாம் தலைமை இடமாக விளங்குகின்றது. இராமகிருஷ்ண மடங்கள் குருதேவரை மட்டுமன்றி அவரது போதனைகளைச் சாதனைகளாக்கிய விவேகானந்தரது சமூகப் பற்றையும் எமக்கு நினைவுறுத்துகின்றன.

ஏழைகளுக்கு அனுதாபம், அவர்களுடைய பசித்த வாய்க்குப் பிடி அன்னம், பாமர மக்களுக்கு அறிவொளி ஆகியவற்றை அளிக்க வல்ல புனித சேனையைத் திரட்ட அவர் விரும்பினார்; பாரத மக்களைப் பீடித்துள்ள அஞ்ஞான இருள், மூட நம்பிக்கைகள் யாவற்றையும் அகற்ற ஆவல் கொண்டார். அஞ்சாமையும் உடற்பலமும் தன்னம்பிக்கையும் வீரதீரமும் அறிவாற்றலும் நிறைந்த பாரதத்தைக் காணவிழைந்தார். புறச் சடங்குகள் மட்டுமன்றிப் பத்தியும் சேவையும் தூய்மையுமே மனித வாழ்க்கையின் இலட்சியங்கள்; அவையே சமயத்தின் சிறந்த பண்புகள் எனவும் அவர் வலியுறுத்தினார்.

மக்களுக்குத் தத்துவங்களை மட்டுத் தந்தாற் போதாது. முதலில் அவர்களுக்கு உணவும் உடையும் இருக்கையும் அளிக்க வேண்டுமென அவர் விரும்பினார். ஆண்டவனைத் தேடி நாங்கள் எங்கும் போக வேண்டியதில்லை; துன்பப்பட்டவர்கள், ஏழைகள், பலவீனர்கள், இழிந்தோர் ஆகிய யாவருந் தெய்வ வடிவங்களே என்று அவர் கருதினார். ''ஏழைகளுக்காக எவனது இதயம் குருதி கசிகிறதோ, அவனையே மகாத்மா என்கிறேன்'' என்று 1895 ஆம் ஆண்டு நியூயோக்கிற் சொற்பொழிவாற்றியவர் அவர். ஏழைகளுக்கென வாழ்ந்து வந்த காந்தியடிகளுக்கும் மகாத்மா என்னும் பட்டத்தைத் தமது ஞான திருஷ்டியினால் முன்மொழிந்து வைத்தார் போலும்!

பாரத தேசத்திற்கும் உலகிற்கும் ஒளியேற்ற வந்த அன்பராக, அறிவுத் தீபமாக, ஞான வீரராக இவ்வுலகில் நாற்பது ஆண்டுகளே வாழ்ந்து 1903 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆந் திகதி சுவாமி விவேகானந்தர் இறைவனடி சேர்ந்தார். 1902

# 15. சம்பந்தர் தேவாரம்

## திருக்காளத்தி

திருஞானசம்பந்தர் தல யாத்திரை செய்தபோது அற்புதங்கள் பல செய்தும் தலங்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகளின் பெருமைகளைச் சிறப்பித்தும் தேவாரப் பதிகங்கள் பாடியுள்ளார். ஆளுடைய பிள்ளையாரினால் இவ்வாறு சிறப்பித்துப் பாடப்பட்ட தலங்களிலே தமிழ் நாட்டிற்கு அப்பாலுள்ள திருக்காளத்தி என்பதும் ஒன்று. கண்ணப்பநாயனாரின் பேரன்பு வெளிப்பட்ட தலமாகிய திருக்காளத்தி, சீகாளத்தி என்றுங் கூறப்படும்.

''சந்தமார்'' என்னும் திருக்காளத்திப் பதிகப் பாடலில் இயற்கையழகு வருணிக்கப்பட்டுள்ளது. அடியவர் மனத்தில் இறைவன் உறைவான் என்னும் கருத்து இப்பாடலின் சாரம்.

பண்: கொல்லி

திருச்சிற்றம்பலம்

சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே.

திருச்சிற்றம்பலம்

சந்தனம், கொன்றை, அகில், சிறுசண்பகம், தேக்கு என்னும் மரங்களை ஒதுக்கும் பொன்முகலி ஆற்றின் கரையிலே தென்றல் வீசும் சோலைகள் வளர்ந்து பெருகும் வளமுள்ள திருக்காளத்தியில், உமாதேவியாரோடு வீற்றிருக்கின்ற எமது தந்தையான காளத்தி நாதரின் திருப்பாதங்கள் என் உள்ளத்தில் உள்ளன.

ஆர் – கொன்றை; சாதி – சிறுசண்பகம்; மா முகலி – பொன்முகலி ஆறு ; மந்தம் – தென்றல் ; பொழில் – சோலை; எந்தை எம் தந்தை.

## திருக்கேதாரம்

திருஞானசம்பந்தர் தமிழ் நாட்டுத் தலங்களைச் சிறப்பித்துப் பாடியிருத்தல் போலவே வட இந்தியாவில் இமயமலைச் சாரலிலுள்ள திருக்கேதாரம் என்னும் திவ்விய தலத்தையும் திருக்காளத்தியில் இருக்கும்போது மானசீகமாகத் துதித்துப் பதிகம் பாடியுள்ளார். திருக்கேதாரம் உமாதேவியார் சிவ பிரானைப் பூசித்து இடப்பாகம் பெற்ற தலம்.

பண் : செவ்வழி

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார் மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யும் இடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

திருச்சிற்றம்பலம்

வண்டுகள் பாடவும், மயில்கள் ஆடவும், சிறுமான்கள் துள்ளவும், அழகிய கெண்டை மீன்கள் பாயவும் குளத்தில் நீலோற்பல மொட்டுக்கள் விரியும் திருக்கேதாரமானது அடியவர்கள் தமது ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி, வண்டுகள் மொய்க்கும் பூக்களைத் தலைமாலையாகக் கட்டும் பூமாலைத் தொண்டு செய்து இறைவனை வழிபடும் இடம் என்று (ஞானிகள்) கூறுவர்.

அஞ்சு - ஐம்பொறிகள்; மெய், வாய், கண், மூக்கு, செவி; களிறு - ஆண் யானை; சுரும்பு - வண்டு; இண்டை - தலைமாலை; என்பரால் - என்பர் (ஆல் - அசை).

## திருக்கேதீஸ்வரம்

திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டுத் தல யாத்திரையை மேற்கொண்டபோது இராமேஸ்வரத்தை அடைந்து அங்கே இறைவனைத் துதித்துத் தேவாரப் பதிகம் பாடினார். அங்கு இருக்கும் போது ஈழநாட்டுத் தலங்களாகிய திருக்கேதீஸ்வரமும் திருக்கோணேஸ்வரமும் நினைவுக்கு வந்தன. அத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் இறைவனையும் இறைவியையும் மானசீகமாக வணங்கித் தேவாரப் பதிகங்கள் பாடினார்.

மாந்தை என்னும் மாதோட்டத்திற் பாலாவி நதி தீரத்தில் உள்ள திருக்கேதீஸ்வரம் பழைமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புடையது. இது சோழ மன்னர்களாற் சிறப்பாகப் போற்றப்பட்டது. ஆயின், ஐரோப்பியர் ஆட்சிக் காலத்தில் அழிநிலை அடைந்தது. இன்று புதுப்பொலிவு பெற்று விளங்கும் திருக்கேதீஸ்வரம் சம்பந்தர் பெருமானின் காலத்தில் எய்திய சிறப்பையும் இயற்கை அழகையும் அவரின் பதிகத்தின் மூலம் அறியலாம்.

''பண்டு நால்வருக்கு'' என்னும் பாடலிற் காழியர்கோன் இயற்கையழகுள்ள திருக்கேஸ்வரத்தில் விரும்பியுறையும் இறைவன் அறமுரைத்த சிறப்பைப் போற்றியுள்ளார்.

பண் : நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
  லுலகினி லுயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
  காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்மஞ்ஞை
  நடமிடு மாதோட்டத்
தொண்டர் நாடொறுந் துதிசெய அருள்செய்கே
  தீச்சர மதுதானே.

திருச்சிற்றம்பலம்

சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் என்னும் நான்கு முனிவருக்கும் முன்னொருபொழுது அறத்தைப் போதித்துப் பல உலகங்களிலும் உயிர்களின் நல்வாழ்வைக் கண்ட தலைவரான தென் முகக் கடவுள் மக்கள் வணங்க விரும்பியுறையுங் கோயில், வண்டுகள் இனிமையாகப் பாடும் பூஞ்சோலைகளில் மயில்கள் நடனமாடும் மாதோட்டத்தில் அடியவர்கள் ஒவ்வொரு நாளுந் துதிக்கும் திருக்கேதீச்சரமேயாகும்.

பண்டு - பழைய காலத்தில்; கடலிடம் - பூமி, இங்கே மக்களைக் குறிக்கின்றது; பண் செ(ய்)யும் - இனிமையாகப் பாடும்; பண் - இராகம், இனிமை; மஞ்ஞை - மயில்.

நால்வருக்கு அறமுரைத்தமை பற்றித் தென்முகக் கடவுள் என்னும் பாடத்திற் பார்க்க.

# 16. அப்பர் தேவாரம்

## பாவநாசத் திருக்குறுந்தொகை – பொது

திருநாவுக்கரசு நாயனார் தல யாத்திரை செய்தபோது பல அற்புதங்களைச் செய்து, சிவாலயங்களைச் சிறப்பித்துப் பல தேவாரப் பதிகங்களைப் பாடியுள்ளார். ஆளுடைய அரசு இவ்வாறு பாடிய பொதுப் பதிகங்களிற் பாவநாசத் திருக்குறுந் தொகை என்பதும் ஒன்று. உயிர்களின் பாவங்கள் அழிதற்கு ஒவ்வொருவரும் உணர்ந்து கடைப்பிடிக்க வேண்டிய சைவ உண்மைகளை நாயனார் இதில் விளக்கியுள்ளார்.

சைவ மக்கள் பலர் புண்ணிய தீர்த்தங்களிலே நீராடுவதனாலே தம் பாவங்கள் அழிந்துவிடுமென நம்புகின்றனர். புண்ணிய தீர்த்தங்கட்கு யாத்திரை செய்து நீராடல் நல்லது தான், ஆனால், அவ்வாறு நீராடுவதால் மட்டும் பாவங்கள் அழிந்துவிட மாட்டா. நாம் எங்குமுள்ள இறைவனை மெய்யன்போடு வழிபட்டு, அப் புண்ணிய தீர்த்தம் எங்கள் பாவங்களை அகற்றிவிடும் என்ற நம்பிக்கையோடு தீர்த்தமாடல் வேண்டும். இந்த உண்மையைத் திருநாவுக்கரசு நாயனார் ''கங்கையாடிலென்'' என்னும் பாவநாசத் திருக்குறுந்தொகைப் பாடல் ஒன்றில் உரைத்துள்ளார்.

திருச்சிற்றம்பலம்

கங்கையாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்கும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீ ராடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே.

திருச்சிற்றம்பலம்

கங்கை, காவிரி என்னும் புண்ணிய நதிகளில் நீராடினாலென்ன, நறுமணமும் குளிர்ச்சியும் உள்ள குமரித்துறை, பெரிய அலைநீர்க் கடல் ஆகிய பிற புண்ணிய தீர்த்தங்களில் நீராடினாலென்ன ஒருவர் ஈசன் எங்கும் இருக்கின்றான் என்று

கூறி அவ்வீசனை மெய்யன்போடு வழிபடாவிட்டால் அவர்க்குப் பாவநாசமாகிய நன்மையில்லை.

ஆடிலென் - நீராடினாலென்ன; கொங்கு - நறுமணம்; ஓதநீர் - அலைநீர்; எனாதவர்க்கு - என்று கூறாதவர்க்கு; எ(ன்)னாதவர் என்னும் சொல் 'என்று கூறாதவர்' என்னும் பொருளைத் தருவதோடு அமையாது; இங்கே 'என்று கூறி அன்போடு வழிபடாதவர்' என்னும் பொருளையுந் தருகின்றது.

## திருக்குறுந்தொகை—கடம்பூர்

கடம்பூர்த் திருக்குறுந்தொகைப் பதிகம் திருக்கரக் கோயிலில் எழுந்தருளியுள்ள அமிர்தகடேசுவரரின் பெருமைகளைக் கூறுகின்றது. ''நங்கடம்பனை'' என்னும் இப் பாசுரம் தொண்டின் பெருமையைச் சிறப்பித்துக் கூறுகின்றது. கடம்பை என்னும் கடம்பூரிலுள்ள அமிர்தகடேசுவரரின் கடமை பிற அடியாரையும் தம்மையும் காத்தலாவது போலத் தமது கடமை தொண்டு செய்து வாழ்தலே என்பது அப்பரின் கொள்கை. அப்பர் கடைப்பிடித்த தாச மார்க்கத்தின் சிறப்பு ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்னும் அடியில் உயிர் நாதமாய் ஒலிக்கின்றது.

திருச்சிற்றம்பலம்

நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கட னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே.

திருச்சிற்றம்பலம்

நமது முருகனைப் பெற்ற உமாதேவியாரை இடப்பாகமாகக் கொண்டவர் அழகிய கடம்பூர்த் திருக்கரக்கோயிலில் அமிர்தகடேசுவரர் என்னும் பெயரோடு வீற்றிருக்கும் சிவபெருமான். அவரின் கடமை ஏனைய உயிர்களைப் போல அடியேனையும் காத்தலாகும். எனது கடமை தொண்டு செய்து வாழ்வதேயாகும்.

கடம்பன் - கடப்ப மாலையையுடைய முருகன்; பாகினன் - பாகத்தையுடையவன்; கடம்பை - கடம்பூர்; பணி — தொண்டு.

நாம் தொண்டு செய்யும்போது பயனை எதிர்பாராது செய்தல் வேண்டும்.

### தனித் திருத்தாண்டகம்

திருநாவுக்கரசு நாயனார் 'தாண்டகம்' என்னும் ஒரு வகைப் பாடலைப் பாடுவதில் வல்லவர். தாண்டகப் பாடல்களை அவர் பொதுவாகவும் தலச் சார்பாகவும் பாடியுள்ளார். அதனாலே ''தாண்டக வேந்தர்'' என்னும் சிறப்புப் பெயர் நாயனாருக்கு உண்டானது.

பொது நோக்கிற் பாடப்பட்ட 'சங்க நிதி' என்னும் தனித் தாண்டகம் குலச் சிறப்பைப் பார்க்காது அன்புச் சிறப்புக் காரணமாகச் சிவ பத்தர்களைக் கடவுளாகக் கொள்ளுந் தகுதியை வற்புறுத்துகிறது. நந்தனாரின் வாழ்க்கை வரலாற்றினால் இவ்வுண்மை தெளிவாகின்றது.

திருச்சிற்றம்பலம்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே.

திருச்சிற்றம்பலம்

மகாதேவரான சிவன் மீது இடையறாது அன்பு செலுத் தாதவர்கள் சங்கம், தாமரை என்னும் இரு பேரளவுச் செல் வங்களையும் தந்து, மண்ணுலகையும் விண்ணுலகையும் ஆளும் உரிமையைத் தந்தாலும், பெருமை குறையும் அவர்களின் செல் வத்தை நாம் மதிக்கமாட்டோம்.

ஆனால், உறுப்புக்கள் எல்லாம் குறைந்து அழுகும் குட்ட நோயாளிகளாய், பசுவின் தோலையுரித்து அதன் மாமிசத்தை உண்டு அலையும் இழிகுல மக்களேயானாலும், கங்கையைத் தமது சடையில் மறைத்து வைத்துள்ள சிவபிரானின் அன்பர்களானால் அவர்களே நாம் வணங்கும் கடவுளாவர்.

சங்க நிதி - சங்கம் என்னும் பேரளவினையுடைய செல்வம்; பதும நிதி - தாமரை என்னும் பேரளவினையுடைய செல்வம். இவ்விருவகை நிதிகளையும் குபேரன் பெற்றிருந்தான் என்பது புராணச் செய்தி. தரணி - பூமி, மாதேவர் - சிவன், ஏகாந்தர் - பிறவழியில் மனத்தைச் செல்ல விடாது பத்தி செலுத்துவோர். கண்டீர் என்பது முன்னிலையசை.

# 17. சுந்தரர் தேவாரம்

## திருவெண்பாக்கம்

சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலியாரை மணந்து, திருவொற்றியூரில் வாழ்ந்தபொழுது திருவாரூர் வசந்த விழா நினைவு வந்தது. எனவே, அவர் சங்கிலியாருக்கு அளித்த சத்திய வார்த்தை தவறித் திருவொற்றியூரைக் கடந்ததும் இரு கண் பார்வையையும் இழந்தார். அவர் பார்வைத் திறன் இழந்து வருந்தித் திருவாரூரை நோக்கி நடந்து செல்லும்போது திருவெண்பாக்கத்தை அடைந்தார். இத்தலத்தை அடைந்த சுந்தரர் திருவெண்பாக்கநாதரை வணங்கி ''இறைவனே, நீர் கோயிலில் இருக்கின்றீரா?'' என்று கேட்க, எம்பெருமான் ஊன்றுகோல் ஒன்றைக் கொடுத்து ''உ(ள்)ளோம். போகீர்'' என்று கூறியருளினார். அயலாருக்குக் கூறுவது போல இவ்வாறு வெண்பாக்கநாதர் கூறியதும் சுந்தரமூர்த்தி நாயனார் அன்பு கொண்டவர் போல் ''பிழையுளன பொறுத்திடுவர்'' என்னும் பதிகத்தைப் பாடினார்.

''பிழையுளன பொறுத்திடுவர்'' என்னும் பாடலிற் குற்றம் பொறுத்தலே மேலான கடவுட் பண்பெனச் சுந்தரமூர்த்தி நாயனார் வலியுறுத்தியுள்ளார். அடியாரைச் சோதிக்கும் இயல்பினரான இறைவன் சுந்தரருக்கு வழித் துணையாக ஊன்றுகோல் ஒன்றைக் கொடுத்துக் குற்றம் பொறுக்கும் பண்பைச் சிறிது காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண் : சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா கோயிலுளா யேயென்ன
உழையுடையான் உள்ளிருந்து உளோம்போகீர் என்றானே.

திருச்சிற்றம்பலம்

அடியாரின் பிழைகளை இறைவன் பொறுப்பாரென்று எண்ணி அடியேன் அறியாமற் பிழை செய்தபோது, பழியைப் பாராமல் என் பார்வையைக் கண்படலத்தால் மறைத்து விட்டாய். குண்டலம் அணிந்த தாழ்காதுகளை உடையவனே, நீ கோயிலில் இருக்கிறாயா?' என்று நான் கேட்க, மாலை வைத்திருக்கும் சிவபிரான் 'உள்ளே இருந்துகொண்டு 'நாம் இருக்கின்றோம்; நீ போவாயாக' என்று சொல்லி விட்டானே.

பிழையுள்ள – அடியாரிடம் உள்ள பிழைகள்; குழை – குண்டலம் ; உழை – மான்.

## திருக்கச்சியேகம்பம்

சங்கிலியாருக்குக் கொடுத்த சத்திய வாக்குத் தவறிக் கண்பார்வையை இழந்த சுந்தரமூர்த்தி நாயனார் திருவெண் பாக்கத்தில் ஊன்றுகோலைப் பெற்றபின் யாத்திரையைத் தொடர்ந்து, காஞ்சி புரத்திலுள்ள திருக்கச்சியேகம்பம் என் னும் தலத்தை அடைந்தார். இங்கே அவர் இறைவன் அரு ளால் இடக்கண் பார்வையைப் பெற்றார். அப்போது அவர் பாடியதே " ஆலந்தானுகந்து " என்னும் பதிகம்.

பண் : தக்கேசி

திருச்சிற்றம்பலம்

ஆலந் தானுகந் தமுது செய்தானை
  ஆதியை அமரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்உடையானைச்
  சிந்திப் பாரவர் சிந்தை யுளானை
ஏல வார்குழ லாளுமை தங்கை
  என்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
  காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே

திருச்சிற்றம்பலம்

திருப்பாற் கடலிலிருந்து தோன்றிய நஞ்சினை விரும்பி யுண்டவனும், யாவற்றிற்கும் தொடக்கமானவனும், தேவர் கள் வணங்கித் துதிக்கும் ஒழுக்கம் மிகவுடையவனும், தன் னைத் தியானிப்பவரின் மனத்தில் வீற்றிருப்பவனும், ஏலச் சாந்து பூசப்பெற்ற கூந்தலையுடைய உமையென்னும் பெண்

ணிற் சிறந்தவளால் எப்போதும் துதித்து வழிபடப் பெற்ற யம சங்காரனும், ஏகாம்பரநாதன் ஆகிய எமது தலைவனுமான சிவபிரானைக் காணும் பாக்கியம் பெற்ற கண்ணை அடியேன் அடைந்த விதம் வியக்கத்தக்கது.

ஆலம் - நஞ்சு; அமுது செய்தல் - உண்ணல்; அமரர் - தேவர்; ஏலம் - நறுமணச் சாந்து; காலகாலன் - யமனுக்கு யமனானவன்; கம்பன் - ஏகாம்பரநாதன்.

## திருக்கேதீஸ்வரம்

சுந்தரமூர்த்தி நாயனார் தமது தல யாத்திரையைச் செய்தபோது இராமேஸ்வரத்தை அடைந்தார். அத்தலத்தைச் சிறப்பித்துத் தேவாரப் பதிகம் பாடிய பின் அங்கிருந்தவாறே இலங்கையை நோக்கி மன்னாரில் மாதோட்ட நன்னகரிற் பாலாவியின் கரைமீது உள்ள திருக்கேதீஸ்வர ஆலயத்தில் எழுந்தருளியுள்ள திருக்கேதீஸ்வர நாதரைத் துதித்துத் தேவாரப் பதிகம் ஒன்று பாடினார்.

இப்பதிகத்திலுள்ள "மூவரென" என்னும் பாடல் தம்மை வழிபடப் பாலாவிக் கரையிற் கூடுகின்ற அடியவர்களின் பாவங்களை அறுத்தருளும் கேதீஸ்வரநாதரின் கருணைச் சிறப்பைப் போற்றுகின்றது.

பண் : நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

மூவரென இருவரென முக்கணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரில்
பாவம்வினை யறுப்பார்பயில் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்திருக் கேதீச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

பிரமா, விட்டுணு, உருத்திரன் என்னும் மூவராகவும், சிவம், சத்தி என்னும் இருவராகவும் கருதப்படும் முக்கட் பெருமான், மாங்கனிகள் தொங்கும் சோலைகள் நிறைந்த மாதோட்டம் என்னும் நகரிலே தம் பாவங்களையும் தீவினைகளையும் அறுப்பவர்களாகிய அடியவர் பலமுறை கூடும் பாலாவி ஆற்றங்கரையின்மீது, 'தேவன் அடியேனை ஆளுபவன்' என்று போற்றுமாறு திருக்கேதீச்சரத்தில் வீற்றிருக்கிறான்.

பொழில் - சோலை; தூங்கும் - தொங்குகின்ற.

## 18. திருவாசகம்

சமயகுரவர் நால்வரில் ஒருவராகிய மாணிக்கவாசகர் பாடிய நூல்கள் திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டுமாம். இவை எட்டாந் திருமுறையாயுள்ளன. நெஞ்சை உருக்குந் திருவாசகம் மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல இறைவனால் எழுதப் பெற்ற சிறப்பினையுடையது. திருவாசகத்திலுள்ள திருச்சதகம் என்னும் பிரிவு திருப்பெருந் துறையிற் பாடப்பட்டது. 'திரு' என்பது தெய்வத்தன்மை யைக் குறிக்கும் அடைமொழி; 'சதகம்' என்னும் சொல் 'நூறு பாடல்களின் தொகுதி' எனப் பொருள்படும். திருச்சதகம் 'பத்தி வைராக்கியத்தின் சிறப்பு' என்னும் உண்மைப் பொருளின் விளக்கமாயுள்ளது.

### இறைவனின் வியாபகம்

''வானாகி மண்ணாகி'' என்னும் திருச்சதகப் பாடல் இறை வனின் வியாபகத்தை மிகவுந் தெளிவாகக் கூறுகின்றது. இந்த வியாபகம் நம்மால் வாழ்த்த இயலாத அருமை உடையது.

திருச்சிற்றம்பலம்

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

திருச்சிற்றம்பலம்

ஆகாயம், பூமி, காற்று, நெருப்பு என்னும் பூதங்கள் ஆகியும் உடல், உயிர், மெய்ப்பொருள், பொய்ப்பொருள் என்பன ஆகியும் யாவற்றிற்கும் அரசனாகியும் 'நான்' என் னும் செருக்கும் 'எனது' என்னும் செருக்கும் உள்ளவரை ஆட்டுவிக்கும் திருக்கூத்துடையவனாகியும் நின்ற உன்னை இறைவனே, என்ன சொல்லி வாழ்த்துவேனோ? (தெரிய வில்லை).

நீர் என்னும் பூதத்தை வெளிப்படையாகக் கூறாவிடினும் அதனையும் குறிப்பாற் கொள்ளலாம். இறைவன் ஆத்திகருக்கு

மெய்ப்பொருளாயும் நாத்திகருக்குப் பொய்ப்பொருளாயும் உள்ளான். 'உண்மையுமாய் இன்மையுமாய்' என்ற தொடர் இவ்வாறு பொருள்படும்.

வளி—காற்று ; ஒளி—ஒளியுடைய நெருப்பு; ஊன்—தசையால் ஆகிய உடல்; கோன்—அரசன்; யான் என்றவர்—நான் என்னும் செருக்கு (அகங்காரம்) உள்ளவர்; எனது என்றவர்—எனது என்னும் செருக்கு (மமகாரம்) உள்ளவர்; கூத்தாட்டுவானாகி நின்றாயை—திருக்கூத்து உடையவனாய் நின்ற உன்னை.

## இறைவன் ஆட்கொள்ளுமாறு

கீழ்வரும் பாடல் இறைவன் உயிர்கள் மீது வைத்துள்ள தம் பெருங் கருணையினாலே உருவத் திருமேனி தாங்கி வந்து செய்யும் அருள் விளையாடல்களைக் கூறுகின்றது.

திருச்சிற்றம்பலம்

காட்டகத்து வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை—வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே, வாழ்த்து.

திருச்சிற்றம்பலம்

காட்டில் வேடனாகவும், கடலில் வலைஞனாகவும், பாண்டி நாட்டிற் குதிரைப்பாகனாகவும் வந்தருளிய திருப்பெருந்துறை ஈசன் எங்கள் வினைகளை அழித்துத் தனது அழகிய தாமரை மலரடிகளை அருளுவான். எனவே மனமே, மயக்கம் கெட இறைவனை வாழ்த்துவாயாக.

வலைவாணன் — வலைவீசி வாழ்பவன், மீனவன், வலைஞன்; பரி—குதிரை; வீட்டி—அழித்து ; மருள்—மயக்கம்.

### 1. சிவபிரான் வேடனாக வந்தருளிய வரலாறு

பாண்டவர்கள் காட்டில் வசித்து வருகின்ற காலத்திலே அருச்சுனன் பகைவர்களை வெல்ல உதவும் பாசுபத அஸ்திரத்தைப் பெறவிரும்பிச் சிவபிரானைக் குறித்துத் தவஞ் செய்

தான். இதையறிந்த துரியோதனன் அருச்சுனனின் விருப்பத்தைக் கெடுத்து அவனைக் கொல்ல அசுரன் ஒருவனைப் பன்றி வடிவில் அனுப்பினான். அருச்சுனனைக் காத்தருளும் நோக்கங் கொண்ட சிவபெருமான் வேடனுருவம் எடுத்து வந்தார். அருச்சுனனும் சிவபிரானான வேடனும் எய்த அம்புகளினால் அப்பன்றி இறந்தது. பன்றியின் உடலுக்காக அருச்சுனனோடு போரிட்டு அவனைச் சோதித்த சிவபிரான் இறுதியில் அவனுக்குப் பாசுபத அஸ்திரத்தைக் கொடுத்து மறைந்தருளினார்.

2. கடல் வலைஞனாகச் சிவபிரான் வந்தருளிய வரலாறு

முன்னொரு காலத்திற் சிவபிரானோடு ஞான தர்க்கம் செய்த உமாதேவியார் அவரருளினாற் பூமியில் அவதரித்து வலைஞர் மகளாக வளர்ந்து வந்தார். நந்திதேவர் வலைஞர் மகளாகிய உமாதேவியார் வளர்ந்து வந்த மீனவர் சேரியைச் சார்ந்த கடலில் ஒரு சுறாவாகி அக்கடலையும் மீனவர்களையும் கலக்கி வந்தார். எவராலும் வலை வீசிப் பிடிக்க முடியாமலிருந்த அச்சுறாவைப் பிடித்து வருபவனுக்குத் தனது மகளை மணமுடித்துத் தருவதாக உமாதேவியாரை வளர்த்த மீனவன் தெரிவித்தான். சிவபிரான் ஒரு வலைஞனாகி வந்து அச்சுறாவை வலைவீசிப் பிடித்து வலைஞர் மகளான உமாதேவியாரை மணஞ் செய்தருளினார்.

3. சிவபெருமான் குதிரைப் பாகனான வரலாறு

பாண்டியனுக்குக் குதிரைகள் வாங்கி வரச்சென்ற மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையிற் குருவாக வந்த சிவபிரானால் ஆட்கொள்ளப்பட்டதும் குதிரைகள் வாங்கக் கொண்டு சென்ற பணத்தைக் குருதட்சணையாகக் கொடுத்தார். மாணிக்கவாசகர் செய்த இச்செயலையறிந்து பாண்டிய மன்னன் தூதர்களை அனுப்பி மாணிக்கவாசகரை அழைப்பிக்க, அவர் ஆவணி மூல நாளிலே குதிரைகள் வருமெனக் குரு கூறியவாறு பாண்டியனுக்குத் தெரிவித்தார். தன் அடியவருக்கு அருள்புரிய விரும்பிய இறைவன் காட்டு நரிகளைக் குதிரைகளாக்கித் தான் குதிரைப் பாகனாக உருவமெடுத்து அக்குதிரைகளை நடத்திவந்து பாண்டிய மன்னனுக்குக் கொடுத்தான்.

## சிவனோடு ஐக்கியமாதல்

மாணிக்கவாசகரின் திருவாசகத்திலுள்ள ஒரு சிறந்த பிரிவு 'திருக்கோத்தும்பி' என்பதாம். கோத்தும்பி என்பது

அரச வண்டு எனப் பொருள்படும். இப்பிரிவிலுள்ள ஒவ்வொரு பாடலும் 'கோத்தும்பீ' என்று முடியும். சிவனோடு ஐக்கியம் பெறுதலே இப்பிரிவுப் பாடல்களின் பொதுப் பொருள்.

அன்பு, பணிவு உள்ளவர்களுக்கு இறைவன் அருள்புரியும் அருமையையும், கண்ணப்ப நாயனார் மீது தமக்குள்ள மதிப்பின் பெருமையையும் மாணிக்கவாசகர் தெளிவாய்க் கூறியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருச்சிற்றம்பலம்

அரச வண்டே, கண்ணப்ப நாயனாரின் பேரன்பிற்கு இணையான அன்பு பிறரிடம் இல்லாமையைக் கண்ட பின்னரும் என் தந்தையாகிய இறைவன் (அன்பின்மையில் எனக்கு ஒப்பார் இல்லாத) என்னையும் அடிமையாகக் கொண்டருளி நற்பண்புள்ளவனாக்கித் (தில்லைக்கு) வாவென்று கூறிய பெருங்கருணையும் அழகிய திருநீற்றுப் பொடியுமுடைய சிவபிரானின் பாதமலர்க்கே போய் ஊதுவாயாக.

வண்ணம் — நற்பண்பு; பணித்து — கட்டளையிட்டு
வண்ணப்பணித்து — நற்பண்புள்ளவனாக்கி.

## 19. திருவிசைப்பா

சைவத் திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையாகத் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன உள்ளன. திருவிசைப்பாப் பாடல்களைத் திருமாளிகைத் தேவர், கருவூர்த் தேவர், கண்டராதித்தர், புருடோத்தமநம்பி, பூந்துருத்தி நம்பி, காடநம்பி, சேதிராயர், வேணாட்டடிகள், திருவாலிய முதனார், சேந்தனார் என்னும் ஒன்பது பேரும் அருளினர். திருவிசைப்பா என்னும் தொடர், தெய்வத் தன்மையுள்ள இறைவன் புகழைக் கூறும் பாடல் எனவும், தெய்வத்தன்மை மிக்க, இசைப் பண்புள்ள பாடல் எனவும் பொருள்படும்

கங்கை கொண்ட சோழன் ஆகிய முதலாம் இராசேந்திர சோழன் தன் தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்திற் கட்டிய கங்கை கொண்ட சோளேச்சரத் திருக்கோயிலைச் சிறப்பித்துக் கருவூர்த்தேவர் திருவிசைப்பாப் பதிகம் ஒன்று பாடியுள்ளார். இப்பதிகம் இத்தலத்து இறைவனாகிய கங்கை கொண்ட சோளேசுவரனின் அருட் பெருமைகளைக் கூறுகின்றது. ''அன்னமாய்'' என்னும் பாடலிலே பக்தர்கட்கு எளிதாகக் காட்சி கொடுத்தலே இறைவனின் சிறப்பியல்பு எனக் கருவூர்த்தேவர் எடுத்துரைத்துள்ளார்.

பண் : பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனமே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்று(ம்) நான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

திருச்சிற்றம்பலம்

திருமால் முன்னர் (பன்றியாக) தேடியும் காணாத ஒருவனாகிய ஒப்பற்ற சிவசக்தி வடிவினனே, மூன்று கண்களை உடையவனே, நான்கு பெரிய அகன்ற தோள்களை உடையவனும் கரும்பு, தேன், அமிர்தம் போன்றவனுமான இறைவனே, கங்கை கொண்ட சோளேச்சரத்து ஈசனே.

பிரமா அன்னப் பறவையாய் ஆகாயத்திற் பறந்து தேடவும் காட்சியளிக்காத பெருமையுள்ள நீ, என்னை ஆட்கொள்ள விரும்பி எனது உள்ளத்திற் புகுந்தருளிய எளிமைப் பண்பை நான் ஒரு போதும் மறக்கமாட்டேன்.

விசும்பு — ஆகாயம்; அயன் — பிரமா; ஒருவன் — ஒப்பற்றவன்; இருவர் — சிவமும் சத்தியுமாய் அமைந்தவர்; கன்னல் — கரும்பு, கங்கை கொண்ட சோளேச்சரத்தான் என்னும் ஈசனின் சிறப்புப் பெயரில் ழகரம் ளகரமாகத் திரிந்துள்ளது.

பிரமா விட்டுணுக்கள் அடிமுடி தேடிய வரலாறு

முன்னொரு காலத்திற் பிரமாவும் விட்டுணுவும் யார் பெரியவர் என்று வாதாடி மாறுபட்டபோது சிவபிரான் ஒளி வடிவாய்த் தோன்றித் தமது அடியையும் முடியையும் தேடிக் காணுமாறு அசரீரியாக அவர்களுக்கு உரைத்தார். பிரமா அன்னப் பறவையாகப் பறந்து முடியையும், விட்டுணு பன்றியாய்ப் பூமியை அகழ்ந்து சென்று அடியையும் முடியையும் தேடித் தமது முயற்சியில் வெற்றிகாணவில்லை. இக்கதை சிவபிரானின் பரத்துவத்தை விளக்குகின்றது.

## 20. திருப்பல்லாண்டு

ஒருமுறை சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவிலே தேர் பூமியில் அழுந்தியபோது சேந்தனார் அத்தேர் தானே அசைந்தோடப் பாடியதே திருப்பல்லாண்டு என்னும் பதிகம். என்றுமுள்ள இறைவனைப் பல்லாண்டுகள் வாழ்க என அன்பு மீதூரப் பாடுகின்றார் சேந்தனார்.

கோயில்

பண் — பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

தில்லைநகர் நிலைபெறுக; நம் அடியார்கள் பெருகுக; வஞ்சகர்கள் நீங்கியொழிக; பொன்னினாற் செய்யப்பட்ட மண்டபத்துள்ளே புகுந்து உலகம் முழுவதும் விளங்க; அன்னநடை போன்ற நடையுடைய மாதாகிய உமாதேவி நாயகனாகிய சிவபெருமானின் அடியோங்களுக்கு அருள் செய்து இனிமேல் வரக்கூடிய பிறப்பை அறுக்கும்பொருட்டு, முத்தி நெறியைத் தந்த பித்தனாகிய சிவபெருமானுக்குப் பல்லாண்டு சொல்வோம்.

தில்லை—தில்லைநகர்; மன்னுக—நிலைபெறுக; நம் பத்தர்கள்—நம் அடியார்கள்; வளர்க—விருத்தியடைக; வஞ்சகர் போய் அகல— வஞ்சகர்கள் நீங்கியொழிக; பொன்னின்

செய்—பொன்னினாற் செய்யப்பட்ட; மண்டபத்துள்ளே புகுந்து ; புவனி யெல்லாம் விளங்க—உலக முழுவதும் விளங்க; அன்னம் நடை—அன்னத்தின் நடைபோலும் நடையையுடைய; மடவாள்—மாதாகிய; உமை கோன்—உமாதேவி நாயகனாகிய சிவபெருமானது; அடியோமுக்கு—அடியோங்களுக்கு; அருள் புரிந்து—அருள் செய்து; பின்னை—இனிமேல் வரக்கடவதாகிய; பிறவி—பிறப்பை; அறுக்க—அறுக்கும்பொருட்டு; நெறி தந்த முத்தி நெறியைத் தந்த; பித்தற்கு—பித்தனாகிய சிவபிரானுக்கு ; பல்லாண்டு கூறுதும்—பல்லாண்டு சொல்லுவோம்.

பொன்னின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது வேற்றுமை மூன்றாவதன் கருவிப் பொருளில் வந்தது. முத்திநெறி—முத்தியடைதற்குரிய நெறி; அது ஞான மார்க்கம்.

# 21. திருமந்திரம்


சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாவதாக வைக்கப்பட்டிருப்பது திருமூலர் இயற்றிய திருமந்திரம். ஏனைய திருமுறைகள் எல்லாம் பெரும்பாலும் தோத்திர நூல்களாய் இருக்க, திருமந்திரம் ஒன்று மட்டும் சாத்திர நூலாய்த் திகழ்கின்றது. தமிழில் எழுந்த முதல் ஞானநூல் திருமந்திரமாகும். சைவ சித்தாந்தத்திற்குச் சிறப்பான ஆகம நூல்கள் எல்லாம் வடமொழியில் அமைந்திருக்க, அந்த ஆகமநூல்கள் கூறும் பெரும்பாலான பொருள்களைத் திருமந்திரம் நமக்குச் செந்தமிழிலே தருகின்றது. ஆதலால், இதனைத் 'தமிழ் ஆகமம்' என்று வழங்குவர் பெரியோர். ''தோத்திரத்துக்குத் திருவாசகம், சாத்திரத்திற்குத் திருமந்திரம்'' என்பது ஒரு பழமொழி.

திருமந்திரம் ஒரு வாழ்க்கை நூல். இந்த நூலில் உள்ள ஒன்பது தந்திரங்களும் முறையே நல்லொழுக்கம், அறவாழ்கை, யோகப் பழக்கம், மந்திர நுட்பம், சமய ஒழுக்கம், குருநெறி நிற்றல், அகப்புற உணர்வு, அருள் நுகர்வு, பேராப் பெருவாழ்வு என்னும் பொருள்களை விளக்குகின்றன. அன்றியும் மழை, செல்வம், ஆட்சி, கல்வி, கேள்வி, ஒழுக்கம், உடலோம்பல், ஆயுள்வகை, மருத்துவ முறை, மூச்சொழுங்கு, மனவொருமை முதலான பற்பல நல்வாழ்க்கைக் குறிப்புகள் திட்பநுட்பமாக இந்நூலிற் கூறப்பட்டுள்ளன. 'நல்லவர் வாழ, நல்லுணர்வுகள் பரவும்; அவை நுண்ணிய பொருள்களை இயக்கும்; அதனால் மழை பொழியும்; நாடு செழிக்கும்; அரசு ஓங்கும்; மறம் தேயும்; அறம் பெருகும்; அருள் சிறக்கும்; உலகத் துயர் தீரும்' என்று இதன் பாயிரம் கூறுகின்றது.

மேலும், சைவ சித்தாந்த அடிப்படைத் தத்துவங்களான முப்பொருள், மூவகை உயிர்கள், மும்மலம், நால்வகை நெறிகள், திருநீறு, திருவைந்தெழுத்து, திருக்கூத்து முதலியவை நூல் முழுதும் விளக்கப்பட்டுள்ளன. 'அன்பேசிவம்' என்பது திருமந்திரத்தின் பிழிந்த ஞான உரை. 'அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின் அன்பே சிவமாய் அமர்ந்தாரே' என்பது சைவ சமயம் இட்டுச் செல்லும் முடிவான இலக்கு என்று இந் நூல் கூறுகின்றது.

இந்நூலை இயற்றிய திருமூலர், பெரியபுராணம் கூறும் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராவர். இவர் பல்லாண்டுக் காலம் தவமிருந்து, அத்தவத்தாலே தெளிந்த ஞானத்தை மூவாயிரம் பாடல்களில் எமக்குத் தந்துள்ளார். நூலறிவால் உணர்ந்துகொள்ள இயலாத பல நுண்ணிய உண்மைகளைத் திருமூலர் தமது தவயோகத்தாற் கண்டு விளக்கியிருக்கின்றார். ''சக்கரவர்த்தி தவராச யோகி எனும் மிக்க திருமூலன்'' என்று இவரைத் தாயுமான ர் சிறப்பித்துப் பாடுகின்றார். இவருடைய வரலாற்றைப் பெ புராணம் பின்வருமாறு கூறுகின்றது:

திருமூலர் திருக்கைலையில் இருந்த முனிவர்; திருநந்தி தேவரிடம் மெய்ப்பொருள் கேட்டவர்; அணிமா முதலாய அட்டமா சித்திகளும் கைவரப் பெற்றவர். பொதிய மலையிலே இருக்கும் அகத்திய முனிவரைக் காணும் பொருட்டுத் தென்னாடு வந்தார். வழியிலே, திருவாவடுதுறையை அடைந்தபோது, ஒரு காட்டுப் புறத்திலே ஆன் நிரைகள் அழுது கொண்டிருப்பதைக் கண்டார். அதற்குக் காரணம் அவற்றை மேய்த்துக்கொண்டிருந்த மூலன் என்பவன் இறந்து விட்டமை என்று அறிந்தார். ஆக்களின் துயர் போக்க விரும்பிய முனிவர், தமது உடம்பைப் காப்பாக ஓரிடத்தில் வைத்துவிட்டு, தமது சித்தியினால் மூலன் உடலிற் புகுந்து, ஆக்களை மகிழ்வித்தார். அதன் பின் தமது முன்னைய உடம்பைத் தேட, அது காணப்படாமையால், திருவாவடுதுறையிலேயே தவத்தில் அமர்ந்தார். அது முதல் அவருக்குத் திருமூலர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.



12. பசுவிற்கொரு வாயுறை

தவத்தால் தாம் பெற்ற ஞானத்தை—இன்பத்தை—வையகம் உய்ய வழங்க விரும்பினார். ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற ஆர்வத்தால் திருமந்திரப் பாடல்களை அருளிச் செய்தார். கடவுள் தம்மைப் படைத்த நோக்கம் அதுவே என்று நாயனார் தாமே கூறுகின்றார்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமந்திரத்திலிருந்து ஒரு பாடலைப் படிப்போம். அறஞ்செய்வது அரிய செயலன்று; அது யாவர்க்கும் ஆவது, யாவர்க்கும் எளியது. அறஞ் செய்வதற்குக் காலம் வேண்டியதில்லை. இடம் வேண்டிய தில்லை. எல்லாரும் எப்போதும் எவ்விடத்திலும் செய்யலாம். ''எல்லார்க்கும் உயிர்க்குயிராய் உள்ள இறைவனுக்கு ஒரு பச்சிலை இட்டாவது வணங்குங்கள்; எல்லார்க்கும் பால் கொடுக்கும் பசுவுக்குச் சிறிதளவு பசும் புல்லாயினுங் கொடுங்கள்; சாதி மதம் பாராமல், பசியென்று வந்த எவருக்கும் நீங்கள் உண்ணும் போது ஒரு பிடி சோறாவது கொடுங்கள். பிறருக்கு இன்னுரை பேசுதல் யாவருக்குமே நன்மையாகும்; அது எல்லார்க்கும் இயன்றது தானே'' என்கின்றார் திருமூலர்.



13. உண்ணும்போதொரு கைப்பிடி.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

(யாவர்க்கும் ஆம்—யாவருக்கும் நன்மையாகும்; யாவருக்கும் இயலக்கூடியது; இறைவற்கு ஒரு பச்சிலை (இட்டு வணங்குதல்) யாவர்க்கும் ஆம்; பசுவிற்கு ஒரு வாயுறை (கொடுத்தல்) யாவர்க்கும் ஆம்; உண்ணும்போது ஒரு கைப்பிடி (ஈதல்) யாவர்க்கும் ஆம்; பிறர்க்கு இன்னுரை (வழங்குதல்) யாவர்க்கும் ஆம்.

பச்சிலை—பசிய இலை; வில்வம் முதலிய அருச்சனைக்காகும் இலை; வாயுறை—ஒருவாய் உணவு; அதாவது ஒரு பிடி பசும்புல்; கைப்பிடி—ஒரு பிடி சோறு; ஒரு கவளம் உணவு; இன்னுரை—இனியசொல்.

# 22. அற்புதத் திருவந்தாதி

அற்புதத் திருவந்தாதி என்பது காரைக்கால் அம்மையார் அருளிச்செய்த பிரபந்தங்களுள் ஒன்று. மூத்த திருப்பதிகம், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை என்பன அம்மையார் அருளிச்செய்த ஏனைய பிரபந்தங்களாகும். இவை எல்லாம் பதினோராந் திருமுறையிலே சேர்க்கப்பட்டுள்ளன.

அந்தாதி என்பது முதற் செய்யுளின் அந்தம் அஃதாவது ஈற்றுச் சொல்) அடுத்த செய்யுளின் ஆதியாக (தொடக்கமாக) அமையுமாறு, மாலை போல மண்டலித்து வரும் வண்ணம் பாடப்படும் பிரபந்தமாகும். இவற்றால் முதற் செய்யுளின் முதற் சொல், இறுதிச் செய்யுளின் ஈற்றுச் சொல்லாய் அமையும். காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி நூற்றொரு வெண்பாக்களைக் கொண்டுள்ளது.

தேவாரம் பாடிய மூவர்க்கும் காலத்தால் முற்பட்டவரான காரைக்கால் அம்மையார் தோத்திர வகையிலே புதிய பிரபந்தங்களைத் தொடக்கி வைத்த பெருமைக்கு உரியவராவர். குறிப்பாக, பத்துப் பாடல்களால் இறைவனைத் துதிக்கும் பாமாலையான பதிகத்தை முதன்முதற் பாடி, மூவர் முதலிகளுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றார் நம் அம்மையார். அழகிய சொல்லாட்சியும், அரிய கருத்தாழமும், அளப்பரும் பத்திச் சுவையும் நிறைந்தவை அம்மையாருடைய திருப்பாடல்கள்.

புனிதவதியார் என்னும் இயற்பெயர் பூண்ட அம்மையார் இளமைப் பிராயம் முதலே சிவபத்தியிற் சிறந்து விளங்கினார். அவருடைய தெய்வத் தன்மையைக் கண்ட கணவன் அவரோடு இல்லறம் நடத்த அஞ்சி, அவரை விட்டகன்று வேற்றூரிலே வேறு திருமணஞ் செய்து வாழ்ந்து வந்தான். இதனை அறிந்ததும், புனிதவதியார் தம் கணவனுக்காகப் பேணிய தமது இளமை அழகை உதறிவிட்டு, இறைவனை வேண்டிப் பேய் வடிவம் பெற்றுக் கொண்டார். உற்றார் உறவினர் எல்லாம் விட்டகல, இறைவனையே பற்றாகப் பற்றி நின்ற அம்மையார், அவனருளால் அற்புதத் திருவந்தாதி

யைப் பாடினார். அதிலிருந்து இரண்டொரு திருப்பாடல் களைப் படிப்போம்.

இறைவன்மேல் ஆராக் காதல் கொண்ட அம்மையார், அவனைக் கண்ணாரக் கண்டு, கையாரக் கும்பிட்டு, அவன் தாளில் என்றும் இருக்க விரும்புகின்றார். ''நான் பிறந்து மொழி பயிலத் தொடங்கிய நாள் முதலாக உன்மேல் அன்பு வைத்திருக்கிறேன். நாளாக ஆக அந்த அன்பு மேன் மேலும் பெருகி வருகின்றது. நீயோ தேவர்களின் இடர் களைவதற்காக ஆலகாலத்தை உண்டு நீலகண்டனாய் விளங்கு கின்றாய்; அத்தகைய கருணையுள்ள நீ எனது இடரைக் களைவது எப்போது?'' என்று பரிவோடும் உரிமையோடும் கேட்கின்றார் அம்மையார்.

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் — நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

காதல் சிறந்து—அன்பு மேன்மேலும் பெருகப் பெற்று; நிறந்திகழும்—சிவபெருமானின் பொன்னிறமான மேனியிலே அவனது நீலகண்டத்தின் கருநிறம் துலக்கமாக விளங் குகின்றது என்பது கருத்து. மைஞ்ஞான்ற கண்டம்— நஞ்சு தங்கி நின்ற மிடறு; மை என்பது கருமை நிறத்தைக் குறித்து, ஆகுபெயரால் நஞ்சினை உணர்த்துகின்றது; ஞான்ற — தங்கி நின்ற, இறங்கிய, இடர் - துன்பம்; இங்கே இறைவனைக் காணாமையால் உண்டான துன்பம்.

''அன்று எனது இளமைப் பிராயத்தில் - உற்றார் உற வினரோடு இருந்த காலத்தில் உன் பெருமையை உணர்ந்து, உனக்கு ஆட்பட்டேன்; அப்போதும் நான் உனது திருவுரு வைக் கண்டிலேன் ; இன்று - உற்றார் உறவினர் எல்லாம் விட்டகன்ற பின்பு - நான் உன்னையே பற்றாகக் கொண்டிருக் கின்றேன், இன்றும் நான் உன் திருவுருவைக் காண்கின்றி லேன், 'உன்னுடைய தலைவன் எப்படிப்பட்ட உருவமுடைய யவன்?' என்று ஊரார் எந்நேரமும் என்னைக் கேட்கின்ற னர். நான் அவர்களுக்கு என்ன விடை கூறுவேன் ? உன்னு டைய திருவுருவம் எப்படிப்பட்டது? அந்த உருவம் எது என்று கூறமாட்டாயா?''

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது.

ஆட்பட்டேன் — அடிமையானேன்; அன்று மாங்கனி வேண்டி இரந்தபோது, இறைவன் தன் உருவத்தைக் காட்டாமலே அம்மையாரின் கையில் மாங்கனியை வரச்செய்தான். அந்நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து அம்மையார் இவ்வாறு பாடினாராகலாம். என் உரைக்கேன் — என்ன சொல்லுவேன்.

தம்முடைய பேரன்புக்குப் பாத்திரமான பெருமானைக் காணப் பெற்றால் தாம் என்ன செய்வார் என்பதை அம்மையார் மற்றொரு வெண்பாவிலே பாடுகின்றார்.

கண்ணாரக் கண்டும்என் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும்—விண்ணோன்
எரியாடி என்றென்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின்.

ஆர — நிறைய; கண்கள் பிறிதொன்றையும் காணாது அவனையே காணும்; கைகள் பிறிதொன்றுஞ் செய்யாமல் அவனையே அஞ்சலி செய்யும்; நெஞ்சம் வேறொன்றையும் எண்ணாமல் அவனையே எண்ணும் என்றபடி, 'விண்ணோன் எரியாடி' என்று நாவாற் சொல்லி எப்போதும் இன்புறுவேனோ? 'கொல்' என்பது ஐயங் குறிக்கும் ஓரிடைச் சொல். பெரியானைக் காணப் பெற்றால் தாம் என்ன செய்வார் என்று ஐயப்படுவது அவரது பரவச நிலையைக் குறிப்பால் உணர்த்துகின்றது.

இறைவனைக் காண வேண்டும் என்ற ஆராக் காதலினாலே அம்மையார் திருக்கையிலாயத்துக்குச் சென்றார். அங்கே இறைவனே தனது திருவாயால் 'அம்மையே' என்று அழைத்து, அவரைத் திருவாலங்காட்டிலே தனது திருக்கூத்தைக் கண்டுகொண்டு, என்றென்றும் தன் தாள்நிழலிலே இருக்குமாறு பணித்தான்.

# 23. மெய்யடியார்களின் மாண்பு

சேக்கிழார் பாடிய பெரிய புராணம் பன்னிரண்டாம் திருமுறையாயுள்ளது. திருத்தொண்டர் புராணம், ஆளுடைய நம்பி புராணம் என்னும் பிற பெயர்களும் பெரிய புராணத்தைக் குறிக்கும். செயற்கரிய செய்வர் பெரியர். செயற்கரிய செய்த் பெரியாரான தொண்டர்களின் வரலாற்றைக் கூறுதலாற் 'பெரிய புராணம்' என்னும் பெயர் திருத்தொண்டர் புராணத் திற்கு உரியதாயிற்று.

சேக்கிழார் பெரிய புராணத்தைப் பாடியதற்கான கார ணத்தை ஏழாம் வகுப்பிற் படித்தீர்கள். நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை முறைப்படி பாடுமுன் சேக்கிழார் சிவனடியார்களின் பெருமையையும் உயர்வையும் 'திருக்கூட் டச் சிறப்பு' என்னும் பகுதியிற் போற்றியுள்ளார். இப் பகுதி யிலுள்ள 'மாசிலாத' என்னும் பாடல் அகத் தூய்மை, புகழ், பெருமை என்பன புனிதர்களான அடியார்களின் சிறப்புக்க ளென எடுத்துரைக்கின்றது.

*மாசி லாத மணிதிகழ் மேனிமேல்*
*பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்*
*தேசினாலெத் திசையும் விளக்கினார்*
*பேச வொண்ணாப் பெருமை பிறங்கினார்.*

குற்றம் இல்லாத உருத்திராக்க மணி விளங்கும் உடம் பிற் பூசப்பட்ட திருநீறுபோல, மனத்திலும் தூய்மையுடைய அடியவர்கள் தம் உபதேசங்களாலும் வாழ்க்கையாலும் மக் களிடையே ஞான ஒளியைப் பரப்பினர்; 'இருளிலிருந்து ஒளியிற் செலுத்துவாய்' என்ற வேத மந்திரத்துக்கு இலக் கியமாக வாழ்ந்து காட்டினர். அவர்களின் பெருமை சொல் லொணாதது.

*மாசு*—குற்றம்; *மணி*—உருத்திராக்க மணி; *தேசு*—ஒளி; அஃதாவது ஞான ஒளி; *ஒண்ணா (த)*—இயலாத; *பிறங்கினார்*—விளங்கினார்கள்.

இப்பகுதியிலுள்ள இன்னொரு பாடல் 'பூதம் ஐந்து'' என் பது. இப்பாட்டு, சிவனடியார்கள் உறுதியான சிவசிந்தனையும்

உறைப்பான பக்தியும் உடையவர்களென, அவர்களின் சிறப்பைக் கூறுகின்றது.

பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாள் மறப்பிலார்
ஓது காதல் உறைப்பின் நெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனார்.

ஐம்பூதங்களும் தத்தம் நிலையினின்று மாறின காலத்திலும், உமாதேவியைப் பாகத்தில் உள்ளவரது தாமரை மலர் போன்ற திருவடியை மறவாதவர்கள், பஞ்சாட்சரத்தை எக்காலமும் ஓதிக் கொண்டு இருக்கின்ற வைராக்கிய நெறியில் நிற்கின்றவர்கள். அவர்கள் தம்முடைய குற்றமற்ற குணங்களினாற் பெரிய மலையை ஒத்தவர்கள்

# 24. உபநிடதச் சிந்தனை

எமது சமயத்தின் முதல் நூல்கள் வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம். இவற்றில் வேதம் அடர்ந்து பெருத்து வளர்ந்த தொரு மரமாக விளங்குகின்றது. அதன் பழுத்த கனிகள் எனக் கொள்ளக்கூடியவையே உபநிடதங்கள். இவை எமது சமயச் சிந்தனையின் சிகரமாக விளங்குகின்றன.

''பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலது போல''

என்று மகாகவி பாரதி அவற்றை விதந்து உரைக்கின்றார்.

வடமொழியில் அமைந்துள்ள இந்த உபநிடதங்களைப் பாரசீக மொழியிற் பெயர்த்து எழுதிய பெருமை பிற மத இளவரசன் ஒருவனையே சாரும். அவன் பதினேழாம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த மொகலாயப் பேரரசன் ஷாஜஹானின் மூத்த மகனாகிய தாராஷிகோ என்பவன். பெரும்பாலும் பாரசீக மொழியிலிருந்தே மேனாட்டு மொழிகள் பலவற்றில் இவை மொழிபெயர்க்கப்பட்டன. உலக மேதைகள் பலர் இவற்றாற் கவரப்பட்டனர். ஹொப்பன்ஹோவர் என்ற ஜேர்மன் தத்துவஞானி ஒவ்வொரு நாளும் இரவிற் படுக்கப் போவதன் முன் உபநிடதங்களிலிருந்து சில சுலோகங்களைப் பாராயணம் பண்ணுவதை ஒரு விரதமாகக் கொண்டிருந்தார்.

எமது பழைய கல்வி முறை குருகுல வாசக் கல்வி முறையாக அமைந்திருந்தது. மாணவர்கள் ஆசிரியர்களோடு பல்லாண்டுகள் சேர்ந்து வாழ்ந்து பெற்ற கல்வியின் நினைவுக் குறிப்புக்களாக இந்த உபநிடதங்கள் விளங்குகின்றன. பாடம் தொடங்குமுன் குருவும் சீடர்களும் கற்றலில் இணக்கத்தோடு கூடிய ஒத்துழைப்பை வேண்டும் பிரார்த்தனைகளைப் பல உபநிடதங்களிற் காணலாம். 'கட' உபநிடதத்தில் வரும் பிரார்த்தனையை இங்கு நோக்குவோம்.

''ஸஹநாவ் அவது, ஸஹ நௌ புனக்து; ஸஹ
வீர்யம் கரவாவஹ. தேஜஸ்வி நாவ் அதீதம்
அஸ்து ; மா வித் விஷா வஹை.
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி''

''இறைவன் எம்மைக் காப்பாற்றுவானாக; எம்மிடத்திற் பிரியம் வைப்பானாக; நாம் உற்சாகத்துடன் கற்றலில் ஈடுபடுவோமாக; கற்பதன் மூலம் எம்மிடம் ஞானம் உதயமாகட்டும்; நாம் ஒருவரையொருவர் வெறுக்காதிருப்போமாக, ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி,''

அத்தகைய உளப்பாங்கை வளர்ப்பது ஆசிரியர்க்கும் மாணவர்க்கும் இன்றும் பொருத்தமாகும்.

பௌதிகப் பொருள்கள், உயிர்கள், தெய்வங்கள் என்னும் மூன்று தொகுதிகளாலும் விளையக்கூடிய இடர்களைத் தவிர்ப்பதற்குப் பிரார்த்தனையின் இறுதியில் மூன்று முறை சாந்தி கூறுவது இந்து சமயத்தவர் புராதன காலந்தொட்டு மேற்கொண்டுவரும் வழக்கமாகும்.

பல அரிய தத்துவக் கருத்துக்களைக் கதைகள் மூலமும் உரையாடல்கள் மூலமும் விளக்குவது உபநிடதங்களின் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

## (அ) நசிகேதன் கதை

### கடோபநிடதத்தின் தோற்றுவாய்

புராண வடமொழி இலக்கியத்தில் உள்ள கதை ஒன்றுடன் கடோபநிடதம் தொடங்குகிறது. 'விஸ்வஜித்' என்னும் யாகம் செய்து நற்பயன் அடைய விரும்புகிறான் வாஜசிரவக என்னும் பிராமணன். எனினும், யாகம் செய்ய வந்தோருக்கு வயது போன, வலிமை குன்றிய பசுக்களையே அவன் தானமாகக் கொடுக்கின்றான். தந்தையின் செயலால் நசிகேதனுடைய மனம் வேதனை அடைகிறது. இங்கே புறச்சடங்குகளை முதன்மைப்படுத்துபவனாகத் தந்தையும் ஆன்ம ஈடேற்றத்தை நாடுபவனாகத் தனயனும் காட்சி தருகின்றனர்.

தந்தையின் நன்மையை மனத்துட் கொண்ட நசிகேதன் வினவுகின்றான்: ''ஐயா, என்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கப் போகின்றீர்கள்?'' தன்னுடைய கேள்விக்கு விடை கூறாததனால், இரண்டாம் முறையும், மூன்றாம் முறையும் இவ்வாறு அவன் வினவவே ''உன்னை யமனுக்குக் கொடுக்கப் போகிறேன்'' என்றான் தந்தை.

ஆசிரியர், பெற்றோர் ஆகியோரின் விருப்பங்களை முன்ன றிந்து செய்து முடிப்பது சிறந்த மாணாக்கர், புத்திரர் ஆகி யோரின் கடமை. இதிலும் ஒருபடி கீழே உள்ளோர் ஆசிரி யர், பெற்றோர் சொல்வதைச் சொன்னபின் செய்து முடிப் பர். அவ்வாறு சொன்ன பின்னுஞ் செய்யாறு இருப்பது மிகக் கீழ் நிலையிலுள்ள மாணவர், புத்திரர்களது செயலாகும்.

நசிகேதன் சிறந்ததோர் புத்திரனுக்கு எடுத்துக்காட் டாக விளங்கினான். தனது வாயிலிருந்து வெளிவந்த சொற் களை நினைந்து வேதனை அடைந்தான் வாஜசிரவஸர் சற்புத் திரனாகிய நசிகேதன் கலக்கமடையவில்லை; தந்தைக்குத் தேறுதல் சொல்லி இயமலோகம் போய்ச் சேர்ந்தான்.

எதிர்பாராத விருந்தினன் என்றமையால் அங்கு அவன் மூன்று நாள்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. அதன் பிறகே யமனுக்கு அவனது வருகை தெரிந்தது.

''விருந்தினனாக வந்த உன்னை மூன்று நாள்கள் காத்தி ருக்க வைத்துவிட்டேன். நான் செய்த குற்றத்துக்குப் பரி காரமாக உனக்கு மூன்று வரங்கள் தருகிறேன். வேண்டிய வற்றைக் கேட்டுப் பெற்றுக் கொள்'' என்றான் யமன்.

''தர்மராசரே, எனது தந்தையின் மனம் அமைதி அடைய வேண்டும். உம்மிடமிருந்து விடைபெற்று நான் மீண்டும் வீட்டை அடையும்போது அவர் என்னை இன்முகத்துடன் வர வேற்க வேண்டும். நான் கேட்கும் முதல் வரம் இதுவே'' என்றான் நசிகேதன். 'அவ்வாறே ஆகுக'' என்றான் யமன்.

''தேவலோகத்தை அடையச் செய்யும் அக்கினி (யாகம்) பற்றி நீர் அறிவீர். அது பற்றி எனக்கு விளக்குவீராக. இதுவே நான் கேட்கும் இரண்டாம்வரம்.'' இந்த இரண்டாம் வரத் தையும் யமன் ஈந்தான்.

மூன்றாம் வரமாகப் பரம்பொருளைப் பற்றித் தமக்கு விளக்குமாறு நசிகேதன் வேண்டிக் கொண்டான்.

''நீ சிறுவன், உனக்கு ஏன் இந்த விடயங்கள் பற்றிய ஆராய்ச்சி? அளப்பருஞ் செல்வமும், அதிகாரமும் உனக்கு நான் பெற்றுத் தருவேன்; திருத்தியடைந்து செல்வாயாக'' என்றான் யமன்.

இத்தகைய ஆசை வார்த்தைகளால் நசிகேதன் மயக்கம் அடையவில்லை; அவன் தனது குறிக்கோளிலிருந்து சிறிதளவும் நழுவ மறுத்துவிட்டான்; ''தர்மராசரே, மரண தேவதையாகிய நீர் இருக்கும் வரையில் மனிதர்களின் ஆயுள் எம்மாத்திரம்? நீர் தரும் ஆயுளும் ஐசுவரியமும் என்ன சுகம் தரும்? உம்மைப் போன்ற ஒரு குருவிடம் நித்திய வாழ்வுக்கான உண்மை உபதேசம் பெறவே நான் விரும்புகின்றேன்'' என்று சொன்னான்.

''உன்னைப் போன்ற ஒரு தீரனைச் சீடனாகப் பெறுவது மிக அரிது'' என்று கூறி யமனும் அருள்கூர்ந்து நசிகேதனுக்கு நித்திய வாழ்வின் இரகசியத்தை உபதேசம் செய்யப் புகுந்தான். இந்த உபதேசமே கடோபநிடதமாக மலர்ந்துள்ளது.

## (ஆ) சுவேதகேதுவும் அவன் தந்தையும்

சாந்தோக்கிய உபநிடதம்

''தந்தையே, உலகம் அனைத்தும் ஒரு சத்தியினின்றும் வந்ததாகச் சொல்லுகின்றீர்கள். இவ்வுலகு எத்தனை அற்புதங்கள் நிறைந்துள்ளது. எத்தனை உருவங்கள்; எத்தனை வேற்றுமைகள்; எத்தனை பலதிறப்பட்ட காட்சிகள்! இவையெல்லாம் பெயரும் வடிவும் அற்ற ஒரு பொருளிலிருந்து எங்ஙனம் உண்டாக முடியும்?'' என்று சுவேதகேது கேட்டான். ''சுவேதகேது, அந்த ஆலமரத்தின் பழம் ஒன்றை எடுத்துக் கொண்டு வா'' என்றார் தந்தை உத்தாலகர்.

சுவேதகேது ஆலம்பழம் ஒன்றைத் தேடியெடுத்து வந்தான். ''பழம் கொண்டு வந்து விட்டேன் ஐயா'' என்றான்.

''அதைக் கிள்ளிப்பார்'' என்றார் தந்தை.

''கிள்ளிப் பார்த்தேன் ஐயா'' என்றான் சுவேதகேது

''உள்ளே என்ன இருக்கின்றது என்று பார்'' என்றார் தந்தை.

''சின்னஞ்சிறு விதைகள் இருக்கின்றன'' என்றான் மகன்.

''அவற்றில் ஒரு விதையை எடு. அதைக் கிள்ளிப் பார்'' என்றார் தகப்பனார்.

சுவேதகேது ஓர் ஆலம் விதையை எடுத்துக் கிள்ளிப் பார்த்தான்.

'' என்ன தெரிகிறது ?'' என்றார் உத்தாலகர்.

'' கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை'' என்றான் மகன்.

அப்பொழுது உத்தாலகர் சொல்லுகின்றார். ''மகனே அதோ வெளியிற் கம்பீரமாக நிற்கும் ஆலமரத்தைப் பார்த்தாயா? அதன் கிளையும் கொப்பும் விழுதும் சேர்ந்து பிரமாண்டமான தோற்றத்தை அளிக்கின்றன. அது எங்கிருந்து வந்தது என்று நினைக்கின்றாய்? உன் கண்ணுக்குப் புலப்படாமல் அந்த ஒரு விதைக்குள்ளிருக்கும் நுண்ணிய பொருளே பின்பு இந்தப் பெரிய மரமாகக் காட்சியளிக்கும். இதை நன்றாக யோசித்துப் பார். இது போன்றே உலகம் முழுவதும் கண்ணுக்குப் புலப்படாத பரம்பொருளிலிருந்து உண்டாயிற்று.''

## (இ) உப்பு எங்கே

''உலகம் முழுவதிலும் இந்தப் பொருள் பரவியிருக்கின்றது என்கின்றீர்களே, அது எங்கே மறைந்து போயிருக்கிறது ?'' என்று சுவேதகேது கேட்டான். உத்தாலகர் அதற்கு மறுமொழி ஒன்றுங் கூறாமல் ''ஓர் உப்புக் கட்டியைக் கொண்டு வா '' என்றார். மகன் கொண்டு வந்தான்.

''அதை நீர் நிறைந்த பாத்திரம் ஒன்றிலே போடு'' என்றார் தந்தை. மகன் அவர் சொன்னபடியே செய்தான். அதன்பின் ''நாளைக் காலை வா'' என்றார்.

மறுநாட் காலை சுவேதகேது வந்து தந்தையின் முன் நின்றான்.

''நேற்று நீரிற் போட்ட உப்புக் கட்டியை எடுத்துக் கொண்டு வா '' என்றார் உத்தாலகர்.

மகன் சென்று பார்த்தான். உப்புக் கட்டி அப்படியே இருக்குமா? அது கரைந்து போயிருந்தது. ''ஐயா, உப்பு அழிந்து போய் விட்டது '' என்றான் சுவேதகேது.

''அந்தப் பாத்திரத்து நீரில் மேலாற் சிறிது எடுத்து அருந்து'' என்றார் தந்தை.

'' உப்பாக இருக்கின்றது'' என்றான் மகன்.

'' மத்தியிலிருந்து சிறு நீர் எடுத்து அருந்திப் பார் என்றார் தந்தை.

'' அதுவும் உப்பாக இருக்கின்றது'' என்றான் மகன்.

'' அடித் தண்ணீரை அருந்திப்பார்'' என்றார் தந்தை.

''அதுவும் உப்புக் கரிக்கின்றது, ஐயா'' என்றான் சுவேதகேது.

'' அப்பனே உப்பு அழிந்துவிட்டதா?'' என்று கேட்டார் தந்தை.

'' இல்லை. ஏதோ ஓர் உருவத்தில் அது (எங்கேயோ) இருக்கின்றது, ஐயா'' என்றான் சுவேதகேது.

''மகனே, இங்ஙனம் உலகம் முழுவதிலும் பரம்பொருள் மறைந்து நிற்கின்றது. கண்ணுக்குப் புலப்படாமல் அனைத்திலும் இருக்கின்றது. அதுவே சத்து'' என்றார் உத்தாலகர்.

## * 25. சத்தியமே வெல்லும்

"சத்தியமே வெல்லும்" (சத்யமேவ ஜயதே) என்று இருக்கு வேதங் கூறுகின்றது. சத்தியம் சகல அறங்களுக்கும் வித்து. இவ்வுண்மையை வள்ளுவர்,

"பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந் தரும்" 30.6

என்று கூறி வற்புறுத்துகின்றார்.

பிள்ளைகளே, நாம் சைவ நாற்பாதங்களில் யோகத்தைப் பற்றிப் படித்திருக்கிறோம். யோகம் எட்டு உறுப்புக்களை உடையது என்றும், இவ்வுறுப்புக்களில் முதலாவதாய இயமம் என்பது சத்தியம், அகிம்சை, நேர்மை, இரக்கம், பிரிவு, ஆன்மசுத்தி, பொறுமை, தைரியம், கடமையில் ஈடுபாடு, உடற் சுத்தி ஆகிய பத்துக் குணங்கள் என்றும் படித்தோம். இந்தப் பத்துக் குணங்களையும் "சத்தியம், அகிம்சை" என்ற இரண்டிலும் அடக்கலாம். இந்த இரண்டு குணங்களுக்கும் காந்தியடிகளின் வாழ்க்கை எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

காந்தியடிகள் வாழ்க்கையிற் சத்தியத்தையும் அகிம்சையையும் கடைப்பிடித்து, இறைவழி நின்றவர். அதனால்,


"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்"

என்ற பரந்த கொள்கையை உடைய சைவ மக்களாகிய நாம் அவரைச் சமயப் பெரியாராகக் கொள்கிறோம்; அவருடைய வாழ்க்கையின் இலட்சியங்களைப் போற்றுகின்றோம். அம் மகான் வாழ்க்கையில் அகிம்சையையும் சத்தியத்தையும் கடைப் பிடித்த வண்ணத்தைச் சற்றுப் பார்ப்போம்.

### காந்தி காட்டிய வழி

கடவுள் நம்பிக்கை அவசியம்; உயிர்களிடத்து அன்பாய்ப் பழகுதல் வேண்டும்; மக்களுக்கு நாம் சேவை செய்தல் வேண்டும்; மனத்திலே தூய சிந்தனைகளை வளர்த்தல் வேண்டும் என்பன இந்து மதம் பன்னெடுங் காலமாகப் போற்றி வருகின்ற பண்புகளாகும். இப்பண்புகளுக்கு உறைவிடமான பெரியோர்

பலர் நம் சமூகத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களுள் அண்மைக் காலத்தில் வாழ்ந்த ஒரு பெரியார் காந்தி அடிகள்.



14. காந்தி அடிகள்

அவர் 1869 ஆம் ஆண்டு இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள குஜராத்திற் பிறந்தவர்; கரம்சந்திரர், புத்லிபாய் ஆகியோரின் புத்திரர்; மோகனதாஸ் என்பது அவரது பெயர்.

காந்தியடிகள் 1948 ஆம் ஆண்டு தாம் அமரத்துவம் அடையும் வரையிற் சத்தியம், அன்பு, அகிம்சை என்னும் ஆன்மீகப் பண்புகளைத் தமது அன்றாட வாழ்விற் போற்றி வாழ்ந்தார். அவற்றுள்ளும் சத்தியத்தில் அவருக்குக் கூடிய ஈடுபாடு இருந்தது. சமூகத்தில் இருந்துகொண்டு அதற்குச் சேவை செய்தலை ஒரு தெய்வீகப் பணியாகக் கொண்டார்; படைப் பலத்தையோ, போர்க் கருவிகளையோ நம்பியிருக்காது ஆன்மீகப் பலத்தினால் ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத் தந்தார்; மக்கள் வையத்தில் வாழ் வாங்கு வாழ வழி காட்டினார்.

காந்தியை ஒரு புதிய மனிதராக உருவாக்கியது அவரது தெய்வ பக்தி. கடவுள் என்னும் உயர்ந்த சக்தி தமக்கு என்றும் துணையாக இருப்பதை அவர் உணர்ந்தார். வாழ்க்கையிற் சஞ்சலம் குறுக்கிடும்பொழுது 'ஆண்டவா' வழி காட்டு' என்று அவர் வேண்டுவார். உள்ளத்திற் குடிகொண்ட அவ்விறைவனிடம் சரண்புகுவார், அவருக்கு மனத்தெளிவும் சாந்தியும் உண்டாகும்.

''ஆண்டவன் எங்கேயோ வானத்திலிருந்து ஆட்சி புரியவில்லை; தமக்குள் மறைந்து நிற்கிறான்; நம்முடைய ஊனுக்குள், உயிருக்குள் அந்தரங்கமாக இருக்கிறான்'' என்ற நம்பிக்கை கொண்டவர் அடிகள்.

''ஒன்றை உங்களுக்கு நான் கூறமுடியும். நீங்களும் நானும் இந்த அறையில் உட்கார்ந்திருக்கிறோம் என்பது எவ்வளவு உண்மையோ, அதனைக் காட்டிலும் இறைவன் இருக்கிறான் என்ற உண்மையில் நான் உறுதி பெற்றுள்ளேன். காற்று இல்லாமலும் குடி தண்ணீர் இல்லாமலும் நாம் வாழ்ந்தாலும் வாழலாம். ஆனால், ஆண்டவனின்றி வாழவே முடியாது. நீங்கள் என் கண்ணைப் பிடுங்கி விடலாம்; அதனாற் சாகமாட்டேன். ஆனால், கடவுள் மேல் வைத்த நம்பிக்கையைப் போக்கி விடுங்கள்; அக்கணமே இறந்து விடுவேன்'' என்று அவர் கூறுவது அவரது தெய்வ நம்பிக்கையைப் புலப்படுத்துகிறது அல்லவா? கடவுளைக் கண்டதுண்டா? என்று கேட்டு வந்த நரேந்திரனுக்கு இராமகிருஷ்ணர் அருளின விடையையும் ஒத்திருக்கிறதல்லவா இக்கூற்றின் முற்பகுதி ?

''புறந் தூய்மை நீரான் அமையும் அகந் தூய்மை
வாய்மையாற் காணப்படும்.'' 30.8

என்று கூறினார் வள்ளுவர். வள்ளுவரது கூற்றுக்கு இலக்கியமாக வாழ்ந்தவர் காந்தியடிகள். வாய்மையை சத்தியம்

எனும் பெயரால் அவர் போற்றி வாழ்ந்தார். சிந்தனையிலும் பேச்சிலும் செயலிலும் உண்மையைக் கடைப்பிடித்தலே சத்தியம். சிறு வயதில் அரிச்சந்திர நாடகத்தில் தமது மனத்தைப் பறிகொடுத்தவர் அவர். வாழ்க்கையில் எத்தனை இடையூறுகள் ஏற்படினும், அரிச்சந்திரனைப் போலத் தாமும் வாய்மையில் வழுவாது நடக்க வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார். சத்தியத்தை நாடுவதே அவரது வாழ்வின் இலட்சியம் ஆயிற்று. தமது வாழ்க்கைச் சரித நூலுக்கும் 'சத்திய சோதனை' என்றே பெயர் தந்துள்ளார்.

'எவனொருவன் தனது மனச்சாட்சிக்கு மாறாக நடக்கவில்லையோ, நீதியைப் போற்றி வாழ்கின்றானோ அவனே உண்மையிற் கடவுளைப் போற்றி வாழ்பவனாவான், மனச்சாட்சியே சத்தியத்தின் வடிவான ஆண்டவனின் குரல்,' என்று அவர் கருதி வந்தார்.

சத்தியத்தை உணர்வதற்கு உதவக்கூடிய கருவி அன்பு அல்லது அகிம்சை என்று அவர் கண்டார். சிறு பையனாக இருந்த பொழுது சிரவணன் என்பானைப் பற்றிய நாடகம் ஒன்றை வாசித்தார். சிரவணன் பார்வையற்ற தன் தாய் தந்தையருக்குச் சிரத்தையுடன் சேவை செய்தமை காந்தியின் பிஞ்சு மனத்தைக் கவர்ந்தது. தாமும் தமது தாய் தந்தையருக்குப் பணி செய்ய ஆசைப்பட்டார். தந்தையார் நோய்வாய்ப்பட்டபொழுது அவரது கால்களை வருடி விடுதல் ஆதியாம் தொண்டுகளைச் செய்து மகிழ்ந்தார். தாய் தந்தையரது மனத்தைப் புண்படுத்தாது வாழ்ந்தார். சிறு வயதில் இவ்வாறு அவர் கற்ற அன்பும் அகிம்சையும் பின்னர் சமூகம் முழுவதும் பரந்தன.

நமக்குள் இருக்கும் இறைவன் ஒவ்வோர் உயிருக்குள்ளும் இருக்கிறான். அவர்களுக்குச் சேவை செய்தல் கடவுட் சேவையாகும் என்று வாழ்ந்தவர் காந்தி அடிகள். அவர் தென் ஆபிரிக்காவிலும் இந்தியாவிலும் இந்தியர்கள் பட்ட துன்பம் கண்டு மிக வருந்தினார்; இந்தியர்கள் வதிந்த இருப்பிடங்களுக்கு வீடுவீடாகச் சென்று சுகாதார முறைகளைச் சொல்லிக் கொடுப்பார்; போரிற் காயம் அடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்வார்; கொடிய தொற்று நோய்கள் தம்மையும் பிடித்துவிடும் என்று தயங்கார்; நோயாளிகளது ஒதுக்கிடம் சென்று அவர்களுக்கு அவ்வப்போது மருந்து ஊட்டுவார்; அவர்களின் தேவைகளைக் கவனிப்பார்; சுற்றுப்புறங்களைச் சுத்தப்படுத்தி விடுவார்; நோயாளிகளுக்கு மகிழ்ச்சி ஊட்டுவார்.

ஆங்கிலேயரது ஆட்சிக்கு உட்பட்ட பாரதம் ஏழை நாடாகியது. மக்கள் தம்மைத் தாம் பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலையில் இருந்தனர். பலாத்காரத்தையோ படைப் பலத்தையோ விரும்பாத அடிகள், ஆங்கிலேயருக்குத் தீங்கு விளையாமல் இந்திய மக்களின் சுய கௌரவத்தை எவ்வாறு பெற்றுத் தரலாம் என்று சிந்தித்தார்; சத்தியம், அன்பு அகிம்சை எனும் மூன்றையுமே துணையாகக் கொண்டார்; உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்; சத்தியாக்கிரகங்களைத் தொடக்கி வைத்தார். சத்தியாக்கிரகம் என்ற சொல்லின் பொருள் சத்தியத்தில் அல்லது உண்மை நெறியில் உறுதியாய் நிற்றல் என்பதாகும்.

''உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு'' 27.1

என்றார் வள்ளுவர். 'சத்தியத்தை நாடுபவர்கள் கஷ்டங் களைத் தாமே ஏற்க வேண்டும்; வன் செயல்களில் இறங்குவது தகாது. அது அகிம்சைக்கு மாறுபட்டது' என்று கருதினார். ஒரு பொழுது மக்கள் வன்செயல்களில் இறங்கியது கண்டு சத்தியாக்கிரகத்தை அவர் இடையிலே நிறுத்தினர். இன்னா செய்தவர்க்கு நன்னயஞ் செய்பவரான காந்தி அடிகள் வன்செயல்களை எங்ஙனம் பொறுத்துக் கொள்வார் ?

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்'' 32.4

என்பது வள்ளுவர் வாக்கு. வள்ளுவர் காட்டும் மாசற்றவர்களுள் ஒருவராக விளங்கியவர் காந்தியடிகள். 'அநீதி, குற்றம் இழைத்தவர்களுக்குங்கூட நாம் தீங்கு செய்யக்கூடாது; பாவத்தை வெறுக்கலாம்; ஆனால், பாவம் செய்தவனை ஒரு பொழுதும் வெறுக்கக்கூடாது' என்று அவர் கருதினார்.

இவ்வாறு சத்தியாக்கிரகம் என்னும் புதியதோர் ஆயு தத்தைக் கையாண்டு, பிரித்தானிய ஏகாதிபத்தியத்தையே அடிபணிய வைத்தார் காந்தி அடிகள்.

''இந்து மதத்தின் அரிய பண்புகள் என்றும் உயிருள் ளவை ; வாழ்க்கைக்குத் தென்பும் பயனும் நல்குபவை' என் பதை எமக்குத் தம் வாழ்க்கையின் மூலம் எடுத்துக் காட்டியவர் காந்தி அடிகள். அவரின் பெயராற் பாரதத்திலும் ஈழத் திலும் இயங்கிவருஞ் சேவை நிலையங்கள் எமக்கு இன்றும் அவருடைய பணிகளை நினைவுறுத்துகின்றன.

# 26. திருக்குறள்

## கடவுள் வாழ்த்து

1. தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது. 1.7

இறைவனுக்கு நிகர் யாருமில்லை. அவனுடைய திருவடிகளைப் புகலிடமாகக் கொண்டால் மட்டுமே நமக்கு ஏற்படும் துன்பங்களை இல்லாமற் செய்ய முடியும்.

காந்தியடிகளுக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகள் பலப்பல. அவை யாவற்றிலும் அவர் வெற்றி பெற அவருக்கு உறுதுணையாக இருந்தது இறை பக்தியே.

ஆண்டவரது திருவடியை மனத்திற் பதித்துச் செய்யும் பணியெல்லாம் சிவப் பணியாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் பெரிய புராண நாயன்மார். அவர்கள் தம் வாழ்வில் ஏற்பட்ட துன்பங்களை எல்லாம் மாற்றும் மருந்தாக ஆண்டவனைக் கொண்டார்கள். இறை பத்தியே கவலையில்லா நல் வாழ்வுக்கு வழி காட்டிற்று.

## நீத்தார் பெருமை

2. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 3.6

புலனடக்கம் உடையவர்களே செய்வதற்கு அரிய செயல்களைச் சாதிக்கக் கூடியவர்கள். அவர்களே பெரியோர். புலனடக்கம் இல்லாதவர்கள் புலனீர்க்கும் வழியிற் சென்று, அலைந்து, ஆற்றலை இழப்பதால் அரிய செயல்களைச் செய்ய மாட்டார்கள். அவர்கள் சிறியர்.

ஐந்து புலன்களையும் ஐந்து களிறு என்று சம்பந்தப் பெருமான் கூறுகின்றார். அவ்வளவு வலிமையுடையவை அவை. பார்க்க வேண்டியவை எவை என்று தெரியாமல், தக்கவற்றையுந் தகாதவற்றையுங் கண் பார்க்கிறது; காது கேட்கிறது. புலன்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் இழுபட்டால் சத்தி விரயமாகின்றது. இதனாற்சாதித்தது ஒன்றுமில்லை, புலன்களை ஒரு வழிப்படுத்தினால் ஆற்றல் விரையமாவதில்லை,

பெருகும். அசாதாரண நிலை நமக்கு வந்து சேரும். இந் நிலை எய்தப் பெற்றவர்கள் நாயன்மார்கள். வாளால் மக வரிந்தூட்டவும் மாது சொன்ன சூளால் இளமை துறக்கவும் நாளாறில் கண்ணை இடந்து அப்பவும் வல்ல பெரியார்கள் அவர்கள்.

## அறன் வலியுறுத்தல்

3. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல்
நான்கும் இழுக்கா வியன்றது அறம். 4.5

பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் என்ற நான்கு குற்றங்களையுங் கடிந்து ஒழுகுவதே அறம் அல்லது தருமம் என்று சொல்லப்படுகிறது. 'அறஞ்செய விரும்பு' என்று ஔவையார் கூறுவார். பிறர் வாழ்வைப் பார்த்து நமக்குப் பொறாமை ஏற்படுகிறது. நமக்கும் அவ்வாழ்வு வேண்டும் என்ற ஆசை பிறக்கின்றது. அந்த ஆசை நிறைவேறாவிட்டாற் கோபம் ஏற்படுகின்றது. கோபத்தினால் வாயிற் சுடுசொல் பிறக்கின்றது. அச்சொல் அழிவுக்கு வழி கோலுகின்றது.

துரியோதனனுடைய வாழ்க்கை இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகிறது. மேலே கூறிய நான்கு குற்றமும் நிறைந்தவன் துரியோதனன். பாண்டவர்களுடைய ஆற்றலையும் செல்வத்தையும் கண்டதும் அவனுக்குப் பொறாமை ஏற்பட்டது. அவர் தம் ஆற்றலை அடக்கி, செல்வத்தைக் கவர வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அவர்களிடம் கொண்ட கோபம் காரணமாக, அவர் தம் உயிருக்கே உலைவைக்க வழிதேடினான். ஐந்து ஊர் கேட்டுக் கண்ணபிரான் தூது சென்ற போது, ஊசியளவு நிலமும் தரமுடியாது என்று சொற்கணைகளை வீசினான். இந்த அதர்மப் போக்கு அவனுக்கு அழிவை ஏற்படுத்தியது.

## இல்வாழ்க்கை

4. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். 5.4

பொருள் சேர்க்கும்போது பழிக்கு அஞ்சிச் சேர்க்க வேண்டும். அங்ஙனம் சேர்த்த பொருளைப் பிறருடன்

பகிர்ந்து பயன்படுத்த வேண்டும். அத்தகைய நேர்மையும் அன்பும் நிறைந்தவராய் வாழும்போது வாழ்க்கையின் ஒழுங்கு எப்பொழுதும் தடைப்படுவதில்லை.

நாவலர் பெருமானுக்கு அவரது உதவியாளரிடமிருந்து ஒரு கடிதம் வருகின்றது. ''அறுவடை செய்து சேமித்த நெல்லைப் பதுக்கி வைத்தாற் கொள்ளை இலாபத்திற்கு விற்கலாம். திருப்பணிகள் செய்ய உதவும்'' என்பதே அக்கடிதத்தின் சாராம்சம். அங்ஙனம் செய்யக் கூடாது என்று கண்டித்துக் காரியஸ்தருக்குத் தந்தி போகின்றது. பழியஞ்சி வாழ்ந்த வாழ்வு மட்டுமன்று நாவலர் வாழ்வு; பாத்தூண் உடைய வாழ்வாகவும் அமைந்தது. பஞ்ச காலத்தில் அவர் கஞ்சித் தொட்டித் தருமம் செய்து பசிப்பிணி போக்கிய வரலாறு, அவர் தம் வாழ்வை இக்குறளுக்கு இலக்கியம் ஆக்குகின்றது.

வழி எஞ்சல் - சந்ததி தடைப்படுதல். பாத்தூண் - பகுத்து உண்ணும் உணவு.

## இனியவை கூறல்

5. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. 10.5

ஒருவர் அணிந்து கொள்ள வேண்டிய அணிகலன்கள் பணிவு, இன்சொல் என்ற இரண்டுமாகும்.

சிவமணம் கமழும் தவ வாழ்வு வாழ்ந்த பெரியார் திருநாவுக்கரசு நாயனார். அவ் வாழ்க்கைக்கு அழகு செய்தவை அவர் காட்டிய பணிவும் இன்சொல்லுமாம். பல்லக்கில் அமர்ந்த சம்பந்தக் குழந்தை 'அப்பரே எங்குற்றீர்'' என்று கூவுகிறது. ''அடியேன் இங்குற்றேன்'' என்று பல்லக்குத் தூக்குபவர்களுக்கிடையே ஒரு குரல் எழுகிறது. விநயம் நிறைந்த வாகீசப் பெருந்தகையின் குரல் அது.

பாண்டவரில் மூத்தவர் தருமபுத்திரர். அவருக்கு வந்த சோதனைகள் தாம் எத்தனை? நாடிழந்து, நகரிழந்து தருமர் நிற்கின்றார். மனைவியைச் சபையிற் சிறுமைப்படுத்துகிறார்கள். தம்பியர் குமுறுகிறார்கள். அந்நிலையிற்கூட வன்சொல் ஒன்றும் அவரது வாயில் வரவில்லை.

6. ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 16.6

தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் வருத்தினவர்களுக்கு ஒரு நாள் இன்பமே உண்டு. ஆனால், பொறுத்துக் கொண்டவர்களுக்கு உலகம் அழியும் வரையும் புகழ் உண்டு.

மகாத்மா காந்திக்கு ஏற்பட்ட அவமதிப்புக்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவை யாவற்றையும் பொறுத்துக் கொண்டார். அதனாலன்றோ அழியாப் புகழ்பெற்று மாந்தருள் தெய்வமாக வாழ்கின்றார்!

துரியோதனன் பாண்டவர்களை வருத்திப் பெற்ற இன்பம் எவ்வளவு நாள்களுக்கு நிலைத்தது? தருமருடைய பொறுமையைக் கண்டு அவரது தம்பியான வீமனே வியக்கின்றான். 'அரவுயர்த்தோன் கொடுமையிலும் முரசுயர்த்தோய் உனது அருளுக்கு அஞ்சினேன்' என்கின்றான்.

## அருளுடைமை

7. மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல் என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை. 25.4

எல்லா உயிர்களிடமும் அன்பு காட்டும்போது அது அருளாக மாறுகிறது. அப்படிப்பட்ட 'அருளாளர்களுக்குத் தமது உயிர் பற்றிய அச்சம் கிடையாது. அஞ்சினர்க்குச் சத மரணம்' என்பது அறிஞர் கருத்து. அருளானது உள்ளத்தை நிறைத்துக் கொண்டபோது வேறு ஒன்றை உணர்வதற்கு அங்கு இடமில்லை.

நாவுக்கரசரை நீற்றறையில் வேக வைத்தனர்; யானையை இடற ஏவினர் நஞ்சு கலந்த பாலன்னம் உண்ணக் கொடுத்தனர். மன்னுயிர் ஓம்பும் அருளாளர் அவர். எனவே, அவருக்குத் தன்னுயிர் அஞ்சும் வினை ஏற்படவில்லை.

## கள்ளாமை

8. உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல் 29.2

குற்றச் செயல்களை உள்ளத்தால் எண்ணுதலும் குற்றம். எனவே, பிறருடைய பொருளை அவருக்குத் தெரியாமல் கவர்ந்து விடல் நன்று என்று எண்ணுதலுந் தகாது.

செயலிலே தூய்மை, செயலிலே நேர்மை என்பவற்றுக்கு நேராக மனத்திலே தூய்மை, மனத்திலே நேர்மை ஏற்பட வேண்டியதன் அவசியம் இங்கு வற்புறுத்தப்படுகிறது. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் குணம் புறத்தில் செய்யும் குற்றத்தை விடக் கொடியது.

## மெய்யுணர்தல்

9. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. 36.1

மெய்ப்பொருள் அல்லாதவைகளை மெய்ப்பொருள் என்று நினைக்கும் மயக்கம் ஏற்படுவதாலேதான் துன்பத்துக்கு ஏதுவான பிறப்பு ஏற்படுகின்றது. நசிகேதனுக்கு அந்த மயக்கம் ஏற்படவில்லை. எனவே, அவன் பிறவித்துயர் நீங்கினவன் ஆனான்.

அடியார்தம் சரிதங்கள் யாவும் இந்தக் குறளுக்கு இலக்கியமாக விளங்குகின்றன. நித்தியமான பொருள் எது என்று அறிந்த மெய்ஞ்ஞானிகள் அவர்கள். எனவே, நிலை பெற்ற சிவ வாழ்வு பெற்றனர்.

சூரபன்மன் கடுந்தவம் செய்தான். ஆயிரத்தெட்டு அண்டத்தையும் பொருளென்று மதித்து அவற்றை ஆட்சி புரிய வரம் கேட்டான் என்பதை இங்கு நினைவுகூருதல் நலம்.

## மடி இன்மை

10. நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமம் கலன். 61.5

காலம் நீடித்தல் (நெடுநீர்), மறதி (மறவி), சோம்பல் (மடி), அளவு மீறிய தூக்கம் ஆகிய இந்நான்கும் கெடுகின்ற இயல்புடையவர் (கெடுநீரார்) விரும்பி ஏறும் மரக்கலமாம் (காமக் கலன்).

அளவுக்கு மீறிய துயிலுக்குக் கும்பகருணனை உதாரண மாகக் கூறுவது வழக்கம். தூக்க மிகுதியால் அவனது வலிமையும் ஆற்றலும் பயனில்லாதவையாயின.

நாளை நாளை என்று நாம் தள்ளிப்போடுவதால் ஒன்றையும் சாதிக்க முடிவதில்லை. இறைவழிபாட்டுக்கும் இது பொருந்தும். வயதானபின் கடவுளைப்பற்றி நினைப்போம் என்பது நமக்குக் கேடுவிளைவிக்கும் கருத்தாகும். சென்ற காலம் மீளாது. 'நன்றே செய்க, இன்றே செய்க, அதை இன்னே செய்க' என்பது ஆன்றோர் மொழி.

# 27. நாவலர் வளர்த்த நன்னெறி

" உலகத்திற்குக் கருத்தா யாவர்?
சிவபெருமான்.

சிவபெருமான் எப்படிப்பட்டவர்?

என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்."

நாவலர் பெருமானின் சைவசமய வகுப்புத்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

வினாவிடைகள் தொடர்கின்றன.

" பாவங்களாவன யாவை?
கொலை, களவு, கள்ளுக் குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், விபசாரம், சூதாடுதல்."

எங்கள் இறைவனின் இயல்புகளும் இறைநெறியின் அறப் பண்புகளும் கற்பிக்கப்படுகின்றன. எங்கள் கலைத் திட்டத்திலே சமயக் கல்விக்கு இன்று முக்கியத்துவம் தருகின்றோம். இதனை ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே உணர்ந்து எங்கள் நாவலர் பெருமான் நடைமுறைப் படுத்தினார். இலவசக் கல்வி, இலவச நூல்கள், தாய் மொழிக் கல்வி என்று நாம் பெருமைப்படுங் கல்விச் சாதனைகளை அன்றே நிலைநாட்டினார் நாவலர். கல்வியழகும் தெய்வநெறியும் பொலிந்து விளங்கும் ஒரு சமூகத்தைக் காணத் துடித்தார்; அதற்காக உழைத்தார். அவர் வாழ்வின் இலட்சியமே இதுதான்.

வசதியான உத்தியோகத்தைப் பெறும் வாய்ப்பிருந்தும் அவர் அதனை விரும்பவில்லை. இல்வாழ்க்கையிற் புகவில்லை. இவையனைத்துக்குங் காரணம் சைவ சமயத்தையும் அதற்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்ற பேராசையேயாகும் என ஒரு சந்தர்ப்பத்திலே தம் உள்ளக் கிடைக்கையை வெளிப்படுத்துகின்றார் எங்கள் நாவலர்.

நெற்றியிலே நீறு பூசவும், வாழையிலையிலே அமுதுண்ண வும் கூட நம்மவர்கள் அஞ்சியஞ்சி வாழ்ந்துகொண்டிருந்த அவலங்கள் மாறவும், அன்று அந்நியரின் இன்னல் தாங்காது நாட்டை விட்டே வெளியேறிய ஞானப்பிரகாசர் போன்றோ ரின் பிரார்த்தனைகள் பலிக்கவும் நாவலர் எழுந்தார்.

எங்கள் கலாசாரம் பிழைத்துக் கொண்டது.
சிவநெறி தழைத்தது.

''முன்னிருந்த எங்கள் சமயாசாரியர்கள் தாம் தரிசனம் செய்யப்போன தலங்களிலெல்லாம் பதிகங்கள் அருளிச் செய்தார்கள். இவரோ தாம்போன இடங்களிலெல்லாம் லோகோபகாரமாகச் சைவப் பிரசங்கங்களைச் செய்துவந்தார்'' என்று நாவலர் சரித்திரத்திலே குறிப்பிடுவார் கைலாசபிள்ளை.

சமயப் பிரசங்கங்களுடன் சமயாசாரியரின் தேவார திருமுறைகளையும் விளங்கச் செய்தார் நாவலர்.

அன்று 1894 ஆம் ஆண்டில் நல்லூர்க் கந்தசாமி கோயி லிலே நிகழ்ந்த ஒரு அற்புதக் காட்சியை நாவலர் சரித்திரத் திலே பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

> '' கந்தசுவாமி கோயிற்றிருவிழாச் சமீபித்தபடியால் தேவாரத் திருக்கூட்டச் சிறப்பையும், தேவாரம் முதலி யவை திருவிழாக் காலத்திலே சுவாமிக்குப் பின்னாக ஓதுவதாற் சனங்களுக்குண்டாகும் கடவுட் பத்தியை யும், யாழ்ப்பாணத்துச் சனங்களுக்குக் காட்ட நினைத்து திருவாவடுதுறையினின்று ஓதுவார் சிலரை அழைப்பித்து, திருவிழாக் காலத்திலே அவர்களுக்கும் இங்குள்ள மற்றைச் சைவர்களுக்குந் தெற்கு வீதி மடத் திலே புண்ணியவான்கள் சிலரைக் கொண்டு மாகேசுர பூசை செய்வித்து, சுவாமி வீதியிலே உற்சவங்கொண்ட ருளும்போது சுவாமிக்குப் பின்னாக அவர்களைக் கொண்டு தேவாரம் ஓதுவித்துக் கொண்டு வந்தார். இவர்கள் தமிழ் வேதமாகிய தேவாரத்தை ஓத, அதனைக் கண்ட பிராமணர் தாங்களும் வந்து சுவாமிக்குப் பின் னாக வேதம் ஓதுவாராயினார்கள். நாவலரும் விபூதி உத்தூளனஞ் செய்து திரிபுண்டரந் தரித்துத் தலையிலே சிரமாலையும் கழுத்திலே கண்டிகையுங் கையிலே பௌத் திரமுந் தரித்து யாவருக்கும் பத்தியை விளைவிக்கத்தக்க சிவவேடப் பொலிவோடு திருக் கூட்டத் தலைவராய் நின்றார். அத்திருக் கூட்டத்தின் சிறப்பை என்னென்று

சொல்வோம்! எதற்கொப்பிடுவோம்!! ஆதியிலே சுப்பிரமணியப் பெருமானின் அவதாரமாய் விளங்கிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பதினாறாயிரம் திருக்கூட்டத்தோடு தோற்றிய சிறப்புக்கொப்பிடலாம். தேவார திருவாசகங்களின் வழியாகவும் புராணங்களின் வாயிலாகவும் எங்கள் சமய உண்மைகள் துலங்கின. சிவசின்னங்களின் பெருமைகள் விளங்கின. சிறப்பாகக் கந்தபுராண படனத்தினால் எங்கள் சிந்தை தெளிந்தது. நாவலர் பெருமானின் பணிகள் நமது நாட்டுடன் அமையவில்லை. "யாழ்ப்பாணத்து, நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் ஓர் அவதார புருஷர். இடையிருட் கடைக் காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்கும் வெள்ளி போலத் தமிழகத்தில் தளரும் சைவமும் தமிழும் தழைய, அவ் விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவார். முன்னே பல காலங்களிலும் தமிழகத்திலிருந்து தாம் பெற்ற சில சிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி, ஒரு காலத்து ஒரு முகமாகப் பழங்கடனைத் தீர்த்து என்றுந் தீர்க்கொணாதவாறு தமிழகத்தை ஈழ நாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலரென்றால் மிகையாகாது."

நாவலரைப் பற்றிய சோமசுந்தர பாரதியின் இந்தக் கருத்து உண்மை நிலையினைக் காட்டும்.

"நாவலர்" என்ற பட்டத்தை அவருக்கு வழங்கிக் கௌரவித்ததும் தமிழகத்துத் திருவாவடுதுறை ஆதீனம் தான் என்பதனையும் இங்கு நினைவிற் கொள்ளலாம்.

சைவ உலகம் முழுவதும் அவரால் வாழ்வு பெற்றது.

அந்த நன்னெறிப் பயணத்திலேதான் எத்துணை இடர்கள். ஆதரவில்லாத அந்நியரிழைத்த இன்னல்கள் ஒருபுறம்; அடியவர் போன்று வேஷமிட்டு ஏமாற்றும் நம்மவர் செய்கை மறுபுறம்.

அனைத்தையும் தம் உறுதியான, தெளிந்த உள்ளத்தினால் வென்றார் நாவலர்.

"நிலையில்லாத என் சரீரம் உள்ளபோதே என் கருத்து நிறைவேறுமோ, நிறைவேறாதோ என்னும் கவலை என்னை இரவு பகலாக வருத்துகின்றது. அக் கருத்து இது. தமிழ்க் கல்வியும் சைவ சமயமும் அபி

விருத்தியாதற்குக் கருவிகள் முக்கிய ஸ்தலங்கள் தோறும் வித்தியாசாலை தாபித்தலும் சைவப் பிரசாரஞ் செய்வித்தலுமாகும். இவற்றின் பொருட்டுக் கிரமமாகக் கற்று வல்ல உபாத்தியாயர்களும், சைவப் பிரசாரகர்களும் தேவைப்படுவார்கள்''

என்ற நாவலரின் ஏக்கம் தீர இளைய நாவலர்கள் பலர் எழுந்தார்கள். பெருமானின் பணிகளிலே இவர்களும் கலந்தார்கள்.

நாவலர் காலத்தவரான சிவசங்கர பண்டிதர் ''பரமத கண்டன சுயமத ஸ்தாபன சங்கம்'' என்ற ஒரு சங்கத்தையே ஆரம்பித்து நடத்தினார். நாவலர் பெருமான் இந்தியாவிலிருந்த காலப் பகுதியில் சங்கர பண்டிதரின் பொறுப்பும் பணிகளும் அதிகமாயின.

அருந்தமிழ் இலக்கியங்களையும், சைவத் திருநூல்களையும் பிழையறப் பதிப்பித்த நாவலர் பெருமானின் தொண்டினைத் தொடர்ந்தார் சி. வை. தாமோதரம்பிள்ளையவர்கள்.

நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேல்
சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே—எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்கள் எங்கேபிர சங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை

என்று பெருமானை நினைந்து பிரலாபிப்பார் பிள்ளையவர்கள்.

நாவலர் அவர்களின் மரபிலே பண்டைய இதிகாச புராணங்கள் பலவற்றிற்கும் உரைவிரித்த பொன்னம்பலபிள்ளை, எங்கள் புராண படன நெறியையும் வளர்த்தவர்.

தேவாரம் யான் சொல்லக்கேட்டு
மகிழ்ந்து சிரத்தையுடன்
பூவாதி கொண்டு புரிசிவ
பூசைப் பொலிவழகும்
பாவாணர் மெச்சச் செயும்பிர
சங்கமும் பார்த்தினிநான்
நாவார வாழ்த்திடு நாளுமுண்
டோ நல்லை நாவலனே

என்று ஏங்கி நின்ற செந்திநாத ஐயர், நாவலரின் வண்ணார் பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் ஆங்கில வித்தியாசாலையிலும் ஆசிரியராகப் பணிபுரிந்தவர்; நாவலர்

பெருமானிடம் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். அன்று முன்னோடியாக ஞானப்பிரகாசர் வடக்கே சென்று ஞான நூல்களைக் கற்று, சைவ சித்தாந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டமை போன்று இவரும் காசியிலிருந்து பல ஆராய்ச்சிகளைச் செய்தவர். வேதாந்தம், சித்தாந்தம் என்ற வாதங்களிற் குழம்பி, வேதப் பிரமமும் சித்தாந்த சிவமும் வேறுவேறென மயங்கி, எங்கள் சமய உலகு தடுமாறிய வேளையில், அவரின் சைவ வேதாந்தம், தேவாரம், வேதசாரம் போன்ற நூல்கள் வழிகாட்டிகளாயின.

நாவலர் வழியிலே சபாபதி நாவலர், சதாவதானம் கதிரைவேற்பிள்ளை என ஞானச்சுடர்கள் பல எழுந்தன.

நாவலர் பெருமானைப் போன்றே நீதிமன்று வரை சென்று எங்கள் பன்னிரு திருமுறைகளின் அருட்டிறத்தினை விளங்கச் செய்தவர் கதிரைவேற்பிள்ளை.

" மன்னவர் நீதி மன்றினி லேறிப்
பன்னிரு முறையே உள்ளருட் பாவென
ஆணி பசுமரத் தறைந்தா லென்னக்
காட்டிச் சாத்திரம் நாட்டின னெவனோ
சிற்றம் பலத்திலும் மற்றத் தலத்திலும்
வளவன் நடாத்திய வளமார் திருமுறை
விழாவை இந்நாள் வழாமல் நிகழ்த்தி
உண்மை யருட்பா வன்மையை முன்போல்
எங்கணும் பரப்பிய கங்கணன் எவனோ ........"

என்று பிள்ளையவர்களைக் குருவாகக் கொண்ட தமிழறிஞர் திரு. வி. கல்யாணசுந்தரனார் பாடுவதை இங்கு குறிப்பிடல் வேண்டும்.

" சொல்லுதல் வல்லான் சோர்விலான் அஞ்சான்
துணிவு கொள் சிந்தையான் அவனை
வெல்லுதல் யார்க்கும் அரிதென உரைத்த
மெய்ம்மறைப் பொருட் கிலக்காகி
நல்லையி லுதித்த நாவலர் பெருமான் ........"

என்று பாடும் விபுலானந்த அடிகளார் நாவலரின் வழியிலே நற்பணி புரிந்தார். சமயம், கல்வி, கலை, இலக்கியம் எனப் பல்வேறு துறைகளிலும் இவருடைய பணிகள் சிறந்து விளங்கின. துறவறம் பூண்டு இவர் புரிந்த சமூக, சமயப் பணிகள் எடுத்துப்பையற்றன. திருவேட்களச் சேரியிலே இராப்

பள்ளியொன்றை ஏற்படுத்திச் சேரி மககள் கல்விக்காக உழைத்தமை இவர் தொண்டின் சிறப்பினைக் காட்டும். இந்திய, இலங்கைப் பல்கலைக் கழகங்களின் தமிழ்ப் பேராசிரியராகவும், பல பள்ளிக் கூடங்களில் காவலராகவும் விளங்கிய அடிகளாரின் பணியினால் நாவலர் நன்னெறி மேலும் செழுமை பெற்றது.

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

என அவர் வளர்த்த அன்புநெறி தழைத்தது.

இவ்வாறு வாழையடி வாழையாக நாவலர் நன்னெறி வளர்ந்தது. காலத்துக்குக் காலம் சமூகத்தின் தேவைகளுக்கேற்ப பணிகளும் தொடர்ந்தன. எடுத்துக்காட்டாக அண்மைக் காலத்தில் நாவலரின் வழியிலே அரும்பணி புரிந்த சிவபாதசுந்தரனாரைக் குறிப்பிடலாம்.

"எத்தனையோ ஆயிரம்பேர் ஏறிய பிரமாண்டப் புகைக் கப்பல்கள், பலி கொடாதொழியவுஞ் சமுத்திரத்திலே நெடுந் தூரம் ஓடி இடையூறு ஒரு சிறிதும் அடையாது திரும்புகின்றனவாம். இவ்வியாழ்ப்பாணத்தில் இவ்வொரு சிறுதேரோ பலி கொடாதொழியின் ஓடி நிலைக்கு வாராதாம்."

என்று நல்லூர்த் தேரிலே உயிர்ப்பலியிடும் வழக்கத்தை எதிர்த்து ஒலித்த நாவலர் பெருமானின் பகுத்தறிவுக் குரலின் தேவை ஆங்காங்கே இன்னும் பலவித நிலைகளில் அவசியமான போது சிவபாத சுந்தரனார் எழுந்தார்; எங்கள் நன்னெறியை வளர்த்து நின்றார்; நாவலர் பெருமானின் வழியிலே நமக்கெலாம் அறிவுதரும் நல்ல நல்ல நூல்களைத் தந்தார்; சைவ போதம், சைவ சமயசாரம், சைவக் கிரியை விளக்கம் எனப் பல தமிழ் நூல்களை ஆக்கியதுடன் ஆங்கிலத்திலும் எங்கள் சிவ நெறியை விளக்கினார்.

மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் விளங்கியது.

நாவலர் வளர்த்த நன்னெறி நானிலம் எங்கணும் நலம் விளைக்கின்றது.

# 28. இறைபணி நிற்றல்

இறை பணி நிற்றல் என்றால், இறைவனது பணியிலே வழுவாது நிற்றல் என்பது கருத்து. அஃதாவது, எல்லா உயிர்களிடத்தும் இறைவன் உறைவதால், எல்லா உயிர்கள் பாலும் அன்பு வைத்துத் தொண்டு புரிதல் என்பதாம். இறை பணி நிற்றலைச் சைவ சமயம் இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் உரிய உயர்ந்த ஒழுக்கமாக எடுத்துக் கூறுகின்றது.

சைவ சமயம் கூறும் வாழ்க்கையின் குறிக்கோளை ஆறுமுக நாவலர் தமது இரண்டாம் பால பாடத்தில் ஒரு சூத்திரம் போலப் பின்வருமாறு கூறுவர் :

> "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே யாம்''

இந்தக் குறிக்கோளை அடைவதற்கு மூன்று நிலைமைகள் இன்றியமையாதவை. அவையாவன : (1) மனிதப் பிறவி எடுத்திருத்தல் வேண்டும்; (2) வீடுபேற்றை விழைதல் வேண்டும்; (3) முத்திக்கு வழிகாட்டும் பெரியாரோடு பழகுதல் வேண்டும். இங்கே இறைபணி நிற்றல் நமக்கு அவசியமாகின்றது. முத்தியின் பொருட்டு முயலுதல் தனியாள் ஒவ்வொருவரினதும் செயலேயாம். ஆயினும், எமக்கு இறைவன் அளித்த உடல், உலகம், நுகர்பொருள் ஆகியவற்றைக் கொண்டு வாழ்க்கை நடத்தும்போது, மற்றவர்களோடும் தொடர்புகொண்டேயாக வேண்டும். எவ்வாறு நாம் நம்மை இறைவனுடைய குழந்தைகள் என்று எண்ணுகின்றோமோ, அவ்வாறே மற்றை உயிர்களும் அவனுடைய குழந்தைகள் என்பதை மறத்தலாகாது. நாம் நமது ஈடேற்றத்தின் பொருட்டு இறைவனிடம் அன்பு வைக்கின்றோம். அந்த அன்பு உண்மை அன்பாயின், நாம் அவனுடைய மற்றைக் குழந்தைகளிடமும் அன்பு செய்தல் வேண்டும். நமது சமயம் இறைவன் அன்பு மயமானவன் என்று கூறுகின்றது. ''அன்பே சிவம்' என்பது சைவத்தின் அடிப்படை. இந்த அன்பை வளர்ப்பதற்காகவே மக்கள் வாழ்க்கையை 'இல்லறம்' என்றும் 'துறவறம்' என்றும் இரு நிலைகளில் வைத்து நெறிப்படுத்துகின்றது நமது சமயம்.

இல்லறத்துக்கு அன்பே உயிர்நிலை என்று திருவள்ளுவர் கூறுகின்றார். அவர் கூறும் இல்லறவியலை நோக்கினால், இவ் வாழ்க்கையானது அன்பினை வளர்ப்பதற்கு ஒரு பயிற்சி நிலைய மாய் அமைவதைக் காணலாம். இளமைப் பருவத்தில் ஆணும் பெண்ணும் தன்னலம் மிகுந்தவராய் இருக்கின்றனர். அத்தகைய இருவர் அன்புற்றமைந்த இல்வாழ்க்கையிலே இறங்கும்போது, ஒருவர் மற்றவருக்காகத் தன்னலத்தை மறுக்கப் பழகிக்கொள்கின்றனர். பின்பு அவர்களுக்குப் பிள்ளை பிறந்ததும், அப்பெற்றோருடைய அன்பு பிள்ளைகள் பாற் பரவுகின்றது. இவ்வாறே அது படிப்படியாக விரிந்து பரந்து சமூகம் அளாவியதாக மலர்ச்சியடைகின்றது. இம் மலர்ச்சியே அவர்களைத் தொண்டு வாழ்க்கைக்கும் அறச் செயல்களுக்கும் தூண்டுகின்றது.

இனி, நாம் ''அம்மையே'' என்று அழைத்து வழிபடும் உமாதேவியாரே காஞ்சிப் பதியிலிருந்து முப்பத்திரண்டு அறங் களை வளர்த்தார் என்று புராணம் கூறுகின்றது: அநாதி யாகவே ஆணவமலத்தாற் பிணிப்புண்டிருக்கும் ஆன்மாக்க ளுக்கு அருள் செய்தற் பொருட்டே இறைவனுடைய அருட் சத்தி அவற்றுக்கு உடம்பு, அறிகருவி, உலகம், நுகர்பொருள் ஆகியவற்றைப் படைத்துத் தருகின்றாள். இவ்வாழ்க்கை எல்லாம் அவளால் வந்த ஆக்கமே. ஆதலால் மக்களாகப் பிறப்பெடுத்த நாம் எவ்வாறு இறை பணியில் நிற்றல் வேண்டும் என்பதையும் அவளே நமக்குக் காட்டியுள்ளாள் என்பதும் பொருத்தமே. அம்மை வளர்த்த அறங்களில், முக்கியமானவற்றைப் பார்ப்போம்:

(1) அறவைச் சோறு; ஆதரவற்றோர்க்கும் வறியோர்க் கும் உணவு கொடுத்தல். இக்காலத்தில் இவ்வறம் அன்னதானம் எனப்படும்.

(2) அறவைத் தூரியம்; முற்சொன்னவர்க்கு உடை கொடுத்தலாகும்.

(3) அறவைப் பிணஞ்சுடுதல்; அநாதரவாக இறந்த வர்களின் பிணத்தை எடுத்துச் சுடுதல் அல்லது புதைத்தல் ஆகும்.

(4) அறுசமயத்தோர்க்கு உண்டி; அறுவகைச் சமயங் களையும் சேர்ந்த துறவிகளுக்கு உணவளித்தல்.

(5) ஆதுலர் சாலை: அநாதர்கள் தங்கி வாழ்வதற்கு உறையுள் அமைத்துக் கொடுத்தல்.

(6) ஐயம்; இரப்போர்க்குப் பிச்சையிடும் அறச்செயல்.

(7) ஓதுவார்க்கு உணவு; கல்வி கற்போர்க்கு உணவளித்து அவர் பசிப்பிணிக்கு ஆளாகாமற் படிக்க உதவுதல்.

(8) கன்னிகாதானம்: கன்னியை ஆடவனுக்கு மணம் புரிந்து கொடுப்பது பொதுவான ஓர் அறமெனினும் ஆதரவற்ற, அல்லது வறிய கன்னிப்பெண் ஒருத்தியைத் தக்கவன் ஒருவனுக்கு மணஞ்செய்து வைத்தல் சிறப்பானது.

(9) கா: பலவகை மரங்கள் செறிந்து நிழல், செய்யும் சோலைகளை அமைத்தல்.

(10) சிறைச்சோறு: சிறைச்சாலையில் இருப்பவர்களுக்கு உணவளித்தல்.

(11) தடம்: பொதுமக்களின் பயன்பாட்டுக்காகக் குளம் அல்லது தடாகம் அமைத்தல்.

(12) தண்ணீர்ப்பந்தல்: வெயிற்காலத்தில் வழிச் செல்வோர்க்குத் தாகந் தீர்க்கத் தண்ணீர் முதலியன உதவி, நிழலும் தருவதற்காகப் பந்தலிடுதல்.

(13) நடைத் தின்பண்டம்: வழிச்செல்வோருக்குத் தின்பண்டம் நல்குதல்.

(14) நோய்மருந்து: நோயுற்ற ஏழைகளுக்கு மருந்து கொடுத்து நோய் தீர்த்தல்.

(15) பசுவுக்கு வாயுறை: பசுமாட்டிற்குப் பசும்புல்லாகிய உணவு (வாயுறை) கொடுத்தல்.

(16) பிறரறங் காத்தல்: ஆதுலர் சாலை, சோலை, தடாகம் முதலிய பிறர் செய்த அறங்கள் பின்னர் அழிந்து போகாதவாறு பாதுகாத்தல்.

(17) மகப்பெறுவித்தல் : மகப்பேற்றுக் காலத்தில் உதவி இல்லாத ஒரு பெண்ணுக்கு உடனிருந்து மருத்துவிச்சி போல உதவி செய்தல்.

(18) மகவளர்த்தல்: அநாதைக் குழந்தைகளை எடுத்து ஆதரித்து வளர்த்தல்.

(19) மடம்; வழிச் செல்வோரும் ஊருக்குப் புதிதாக வருவோரும் தங்கிப்போவதற்கு வசதியாகச் சத்

திரம் சாவடி முதலியவற்றைக் கட்டிப் பரிபாலித்தல். துறவியர் வாழ்வதற்கு மடம் அமைத்துக் கொடுத்தலும் இதன்பாற்படும்.

(20) விலைகொடுத்துக் கொலையுயிர் மீட்டல்: கொல்லப்படவிருக்கும் ஆடு, மாடு, கோழி முதலிய பிராணிகளைப் பணங்கொடுத்து உயிர்மீட்கும் அறச் செயல்.

இத்தகைய அறங்கள் சமூக வாழ்க்கைக்கு என்றும் வேண்டுவனவே. சமூகத்தில் ஒருவர் மற்றவருக்குச் செய்யத் தக்கவை என்பதனால், இவை கடமைகளின் வேறாய்க் கடப்பாடுகள் எனப்படுகின்றன. சைவ சமயம் இவற்றைப் பசு புண்ணியங்கள் என்றும், இவற்றுக்குப் பயனாய் மறுமையில் இன்ப வாழ்வு கிடைக்கும் என்றும் கூறும். அவ்வாறானால், இத்தகைய பசு புண்ணியங்களைச் செய்வதால் ஆகாமிய வினைகள் வந்தேறும்; அவை மேலும் மேலும் பிறவிகள் எடுப்பதற்கு ஏதுவாகும். ஏதுவாகவே, முத்திக்குத் தடையாய் அமையும். ஆதலால் முத்தியில் நாட்டமுடையோர் இத்தகைய நல்வினைகளைச் செய்யும்போது, ''நான் செய்கிறேன்'' என்று எண்ணாமல், இறைவனுடைய திருவருளே என்னைக் கருவியாகக் கொண்டு இவற்றைச் செய்விக்கிறன்று என்னும் உணர்வோடே செய்வர். அப்போது அவ்வினைகள் நிலையற்ற உலக இன்பமாகிய பலனைத் தராமல், நிலையான முத்தியின்பத்துக்குச் செய்பவரைத் தகுதியுள்ளவராக்கி விடும். இவை 'பற்றில்லாத வினைகள்'' என்று சொல்லப்படும்.

இம்மையிற் செய்யும் நல்வினை மறுமையில் நற்பலனைத் தரும் என்று எண்ணி அறச் செயல்களைச் செய்யின், அச் செயல் தருமத்தை விலை கூறி விற்கும் 'அறவினை வணிகம்' ஆகும். ஆதலால் நல்லறிவுடையோர் பற்றில்லாத வினைகளையே செய்வர். அவ்வாறு செய்வது எல்லாருக்கும் எளிதன்று. அதற்கு மனம் நன்கு பக்குவப்படுதல் வேண்டும். இறையுணர்வு உள்ளத்திலே நிறைதல் வேண்டும். இது பயிற்சியினாலே கைகூடும். இந்த நிலை, இல்லறத்தார்க்கு வரும்போது அவர்கள் இல்லற ஞானிகளாயும் இல்லற யோகிகளாயும் உயர்வெய்துவர். பெரிய புராணம் கூறும் இளையான்குடிமாற நாயனார், அப்பூதியடிகள், மெய்ப்பொருள் நாயனார் போன்ற நாயன்மார் பலர் இல்லறத்திலிருந்தே முத்தியடைந்தவர்கள். அவர்கள் யாவரும் முற்செய்த தவப் பயனால் இல்லறத்தில் ஒழுகும்போதே ஞானம் எய்தி முத்தி பெற்றோராவர்.

இல்லறத்திலிருந்து போதிய அளவு மனப்பக்குவம் அடைந்ததும் துறவறத்தை மேற்கொள்வதையே திருக்குறள், தொல்காப்பியம் போன்ற நூல்கள் கூறுகின்றன. இதுவே இயற்கையோடு ஒத்துப் போகும் நெறியாகும். நாம் இல்லறத்தை ஒரு மரத்தின் காயாக உவமித்தால், துறவற நிலையைக் கனி என்று சொல்லலாம். காயானது பிஞ்சாயிருந்து முற்றி வரும் வரையும் மரத்தோடு நன்கு ஒட்டியிருக்கும்; பழுத்துக் கனியானதும், மரத்திலிருந்து தானாகவே பிரிந்து விடும். இதுபோலவே ஒருவர் இல்லறத்தில் ஒழுகும் வரையும் உலகத்தோடு ஒட்டியிருப்பார்; துறவறத்தை மேற்கொள்ளும்போது உலகப் பற்றினின்றும் இயல்பாகவே நீங்கிக் கொள்வார். இனி, முன்னைப் பிறப்புக்களிற் செய்த நற்றவத்தின் பயனாகச் சிலர் இளமையிலேயே துறவில் நாட்டமுடையோராய், இல்லறத்தில் இறங்காமலே துறவறத்தை மேற்கொள்வதுமுண்டு. உண்மைத் துறவுக்கு மனப் பக்குவமே முக்கியமானது. அத்தகைய பக்குவமில்லாமல் வலிந்து துறவு பூண்டால் அது போலித் துறவேயாகும்; துறவின் பயனும் அன்னார்க்கு இல்லையாய்விடும். அவர்கள் பசுத்தோல் போர்த்த புலிபோல மக்களை வஞ்சிக்கும் வன்கண்ணரேயாவர்.

இல்லறத்துக்கு அன்பு எவ்வாறு உயிர்நிலையாய் அமைகின்றதோ, அவ்வாறே துறவறத்துக்கு அருள் உயிர்நிலையாகும். அன்பின் முதிர்ச்சியே அருள், அன்பு என்னும் தாயின் வயிற்றிற் பிறக்கும் குழவியே அருள் (அருள் என்னும் அன்பின் குழவி) என்று இதனை வருணிப்பர் வள்ளுவர். முன்னே மனைவி, மக்கள், சுற்றம், நண்பர் என்ற வகையில் தொடர்புடையவர்கள் பால் தோன்றிய உள்ள நெகிழ்ச்சியான அன்பே பின்னர் அருளாக மலர்ச்சியடைகின்றது. யாதேனும் ஓர் உயிர் இடர்ப்படுமிடத்துத் தன்னுயிர் வருந்தினாற்போல வருந்தும் தன்மையே அருளாகும். எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால், துறவறத்தில் நிற்போர் அந்தணர் என்று சொல்லப்படுவர். இதனை,

> அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
> செந்தண்மை பூண்டொழுக லான்

என்று திருவள்ளுவர் கூறுகின்றார். இந்த அத்தணர்கள்

> எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவுநின்
> தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே

(தாயுமானவர்)

என்று இறைவனை வேண்டுவர். அவர்களுக்கு எல்லா உயிர்களும் அன்பரேயாதலால், அவ்வுர்களுக்குப் பணி செய்வதே இன்ப நிலையாகும். அதற்கும் இறைவனையே வேண்டுவர் :

'அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே

(தாயுமானவர்)

அவர்கள் 'சிவனே நான்' என்னும் சிவோகம் பாவனையால் சிவத்தோடு இரண்டறக் கலந்து நின்று இன்பம் அனுபவிப்பர்; அந்த இன்பத்தை எல்லா உயிர்களும் அடைய வேண்டும் என்றும் விழைவர் :

'யான்பெற்ற இன்பம் பெறுகவிவ் வையகம்

(திருமூலர்)

மேலும், அவர்கள் ஆணவத்தால் வரும் பொய்யறிவு நிறைந்த பெத்தான்மாக்கள் படும் பிறவித் துன்பங்களை எண்ணி தமக்கு இயல்பாக உண்டாகும் அருட்பெருக்கால் அலைக்கப்பட்டு, தம் அருள் வாழ்க்கையாலும் வாய்மொழிகளாலும் உறுதிகளை உலகத்தார்க்கு உணர்த்துவர்:

'கள்ளத் தலைவர்' துயர்கருதித் தங்கருணை
வெள்ளத் தலைவர் மிக' (திருவருட்பயன்)

'அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறை பணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினையின்றே

(சிவஞானபோதம்)

இதன் கருத்து: இறைவனோடு ஒன்றித்து நின்று, இறைபணியில் வழுவாது ஒழுகவே, ஆணவம் மாயை என்பவற்றோடு, கன்ம மலமும் இல்லா தொழியும்.

## 29. சக்தி வழிபாட்டுப் பாடல்கள்

இங்கே தரப்பட்டுள்ள பாடல்களில் அபிராமி அந்தாதியை நவராத்திரி கால முதல் மூன்று நாட்களிலும், இலக்குமி துதிப் பாடல்களை அடுத்து வரும் மூன்று நாட்களிலும் சகலகலாவல்லி மாலையை இறுதி மூன்று நாட்களிலும் படிக்கலாம். இந்த நோக்கத்திற்காகவே இப்பகுதி இங்கு சேர்க்கப் பட்டுள்ளது.

### I. அபிராமி அந்தாதி

1. மனிதருந் தேவரு மாயா
முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள
மேகொன்றை வார்சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும்
பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந்
நாளும் பொருந்துகவே.

2. நின்று மிருந்துங் கிடந்து
நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த்
தாளெழு தாமறையி
னொன்று மரும்பொரு ளேயரு
ளேயுமை யேயிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி
யாமுத்தி யானந்தமே.

3. பூத்தவ ளேபுவ னம்பதி
னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ
ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா
முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற்
றோர்தெய்வம் வந்திப்பதே.

4. வவ்விய பாகத் திறைவரு
நீயு மகிழ்ந்திருக்குஞ்
செவ்வியு முங்க டிருமணக்
கோலமுஞ் சிந்தையுள்ளே
யவ்வியத் தீர்த்தென்னையாண்டபொற்
பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும்
போது வெளிநிற்கவே.

5. மணியே மணியி னொளியே
யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ
கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம
பாதம் பணிந்தபின்னே.

6. சொல்லும் பொருளு மெனநட
மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி
யேநின் புதுமலர்த்தா
ளல்லும் பகலுந் தொழுமவர்க்
கேயழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிய
லோகமுஞ் சித்திக்குமே.

7. சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ
மாகித் திகழும்பரா
சத்தியுஞ் சத்தி தழைக்குஞ்
சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முந்திக்கு வித்தும்வித்
தாகி முளைத் தெழுந்த
புத்தியும் புத்தியினுள்ளே
புரக்கும் புரத்தையன்றே.

8. வெறுக்குந் தகைமைகள் செய்யினுந்
தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன்
றேபுது நஞ்சை யுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப்
பாகங் கலந்த பொன்னே
மறுக்குந் தகைமைகள் செய்யினும்
யானுன்னை வாழ்த்துவனே.

9. தனந்தருங் கல்வி தருமொரு
நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந்
தருநெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந்
தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி
ராமி கடைக்கண்களே.

10. ஆத்தாளை யெங்க ளபிராம
வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங்
குசமுங் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு
வார்க்கொரு தீங்கில்லையே.

அபிராமி அந்தாதி என்னும் நூல் அபிராம பட்டர் என்பவராற் பாடப்பட்டது. இதில் 100 பாடல்கள் உள்ளன. 101 ஆம் பாடல் இந்நூலின் பயனைக் கூறுகின்றது. இந்நூலி லிருந்து தெரிந்தெடுத்த 10 பாடல்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

அபிராமி—அழகுள்ளவள், மனத்திற்கினியவள், உமாதேவி.

1. மனிதருந்,......(அபிராமி அந்தாதியில் 4 ஆம் பாட்டு) மாயா முனிவர் — இறவா முனிவர்; சென்னி — தலை; புனிதர் — சிவபெருமான்; புந்தி—புத்தி, மனம்; கோமளம்—இளமை அழகு.

2. நின்று மிருந்துங்.........(10 ஆம் பாட்டு). எழுதா மறையின் ஒன்றும் அரும் பொருளே — எழுதா மறையாகிய வேதங்களின் முடிவிற் பொருந்தும் அறிதற்குரிய பொருளாயுள்ளவளே; அருளே—சிவ பெருமானுடைய திருவருட் சக்தியே; இமயத் துப் பிறந்தவளே—தாட்சாயணி என்னும் பெயரை நீக்கிக் கொள்ள இமய மலையிற் குழந்தை வடிவு எடுத்து வளர்ந்தவளே.

3. பூத்தவளே........(13 ஆம் பாட்டு). கரந்தவள்—ஒடுக்கியவள்; புவனம் — உலகம். கறைக்கண்ட னுக்கு மூத்தவள் — சீகண்ட பரமசிவனுக்கு மூத்தவள்; முகுந்தற்கு இளையவள்—திருமாலுக்கு இளையவள்; மாத்தவள்—பெரிய, தவமுடையவள்; வந்தித்தல்—வணங்குதல்.

4. வவ்விய பாகத்........(18 ஆம் பாட்டு). வவ்விய பாகத்திறைவர் — உமையம்மையால் வலிதிற் கவர்ந்து கொள்ளப்பட்ட இடப்பாகத்தையுடைய சிவ பெருமான், அர்த்தநாரீச்சுரர்; செவ்வி—வடிவழகு; அவ்வியம்—யான், எனது என்னுஞ் செருக்கு; வெவ்விய — கொடிய; காலன்—யமன்.

5. மணியே மணியின்.... (24 ஆம் பாட்டு). மணியே—மாணிக்க மணி போல்பவளே; அணி—ஆபரணம்; அணுகாதவர் — நின்னைச் சரண் அடையாதவர்;

பிணிக்கு மருந்தே — நின்னைச் சரண் அடைந்த வர்களின் பிறவிப் பிணியை நீக்கும் மருந்தா யுள்ளவளே; அமரர் — தேவர்; பத்ம பாதம் — தாமரை மலர் போன்ற திருவடிகள்

6. சொல்லும் பொருளும் ........ (28 ஆம் பாட்டு). நடம் ஆடும் தலைவர் — நடராசர்; சொல்லும் பொருளும் — சொல்லும் அதன் பொருளும் போல; புல்லுதல் — சேர்த்தல்; பரிமளம் — நறு மணம்; பூங்கொடியே — பூங்கொடியாகிய அபிரா மியே; புதுமலர்த் தாள் — அன்று அலர்ந்த செந்தாமரை மலர் போன்ற திருவடிகள்; அல் லும் பகலும் — இரவும் பகலும்; செல்லுந் தவ நெறி — இடையறாது நிகழுந் தவ ஒழுக்கம்.

7. சித்தியுஞ் சித்தி........ (29 ஆம் பாட்டு). சித்தி— அணிமா முதலிய எண்வகைப் பேறுகள்; புத்தி— சிவஞானம், ஆன்மபோதம்; புரத்தை — திரி புரசுந்தரி.

8. வெறுக்குந் தகைமைகள் ...... .(46 ஆம் பாட்டு). புது நஞ்சு — பாற்கடலிற் புதிதாகத் தோன்றிய ஆலகால நஞ்சு; கறுக்குந் திருமிடற்றான்—கரு நிறம் பொருந்திய கழுத்தை உடைய சீகண்ட பரமசிவன்.

9. தனந்தருங் கல்வி ........ (69 ஆம் பாட்டு). அன்பர் — மெய்யடியார்கள், தனம் — செல்வம்; தெய்வ வடிவு — தெய்வத்தன்மை பொருந்திய பேரழகு; நெஞ்சில் வஞ்சம் இல்லா இனம்—கபட மனம் இல்லாத சுற்றத்தார்; கனம்—முகிலின் கரிய நிறம்;

10. ஆத்தாளை ............... (101 ஆம் ஆம் பாட்டு). ஆத்தாள்—உலக மாதா; அண்டம் எல்லாம் பூத்தாள் —எல்லா உலகங்களையும் படைத்தவள்; அம்குசம்— அழகிய தாமரை மலர்; பாசம்— கயிறு; அங்குசம்— தோட்டி; காத்தள்—காக்கின்றவள்; முக்கண்ணி— மூன்று கண்களை உடையவள்.

## II. இலக்குமி துதி

1. மடற்கமல நறும்பொகுட்டில் அரசிருக்குஞ்
செந்துவர்வாய் மயிலே மற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றோ மணிவண்ணன்
உலகமெலாங் காவல் பூண்டான்
படைத்தனனான் முகக்கிழவன் பசுங்குழவி
மதிபுனைந்த பரமன் றானும்
துடைத்தனன்நின் பெருஞ்சீர்த்தி எம்மனோ
ராலெடுத்துச் சொல்லற் பாற்றோ.

2. மல்லல்நெடும் புவியனைத்தும் பொதுநீக்கித்
தனிபுரக்கும் மன்னர் யாரும்
கல்வியினிற் பேரறிவிற் கட்டழகில்
நிகரில்லா காட்சி யோரும்
வெல்படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகைபுனை வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொகுட்டுறையும் அணியிழைநின்
அருள்நோக்கம் அடைந்துள்ளாரே.

3. செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரும்
எழின்மேனித் திருவே வேஷல
அங்கணுல கிருள்துரக்கும் அலர்கதிராய்
வெண்மதியாய் அமரர்க் கூட்டும்
பொங்கமுலாய் உலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளைநீ அவணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி இருப்ப தம்மா.

இந்தத் துதிப் பாடல்கள் அதிவீரராம பாண்டியன் பாடிய காசி காண்டம் என்னும் புராணத்தில் உள்ளவை.

### அரும்பத விளக்கம்

1. மடற்கமல நறும் பொகுட்டு—இதழ்களையுடைய செந்தாமரை மலரின் வாசனை பொருந்திய கொட்டை; செந்துவர்—செம்பவளம்; மணி வண்ணன்—நீலமணி நிறமுடைய திருமால்; நான் முகக் கிழவன்—நான்கு முகங்களையுடைய பிரமன்; பசும் குழவி மதிப் புனைந்த பரமன்—இளம் பிறைச்

சந்திரனை அணிந்த சிவன் (உருத்திரன்); துடைத்தனன்—அழித்தற்றொழிலைச் செய்தான்; சீர்த்தி—மிகுபுகழ்; மும்மூர்த்திகளும் திருமகளின் கடைக்கண் அருள் பெற்றே தத்தம் தொழில்களைச் செய்வர் என்றவாறு.

2. மல்லல்—வளம்; பொதுநீக்கி தனி புரக்கும்—பிறருக்கும் பொதுவாயிருத்தலை நீக்கித் தனிப்பேரரசனாய் ஆளும்; காட்சியோர்—அறிஞர்; கண்ணுக்கு இனிய தோற்றமுள்ளவர்; கல்வியினில் நிகரில்லாக் காட்சியோர்; பேரறிவில் நிகரில்லாக் காட்சியோர்; கட்டழகில் நிகரில்லாக் காட்சியோர் என்று தனித்தனியே கூட்டுக. வெல்படையின்—வெற்றிதரும் படையினால்; பகை துரந்து—பகைவரைப் புறமுதுகிடச் செய்து; வாகை—வெற்றி மாலை; மன்னரும் காட்சியோரும் வீரரும் திருமகளின் அருட்பார்வை அடைந்தவரே என்றவாறு.

3. செங்கமலப் பொலம் தாதின்—செந்தாமரை மலரின் பொன்னிறமான மகரந்தத்தைப் போன்று; தாது போலத் திகழ்ந்து ஒளிரும் எழில்மேனியையுடைய திருமகள்; வேலை—கடல்; கடல் சூழ்ந்த இடமகன்ற உலகிற் கவிந்துள்ள இருளை ஓட்டும் சூரியன்; அலர் கதிர்—சூரியன்; அமரர்க்கு ஊட்டும் பொங்கழல்—தேவர்களுக்கு அவியுணவை ஊட்டும் ஓமத் தீ; திருமகள் சூரியனாயும் சந்திரனாயும் தீயாயும் உலகைக் காக்கிறாள் என்க; அளிக்கும்—காக்கும்; கான்—காடு; பொருப்பு—மலை. காட்டிலோ, மலையிலோ, மண்ணிலோ எங்கே திருமகள் உள்ளாளோ, அங்கே அழகும் வளமும் சிறந்து விளங்கும் என்றவாறு.

## III. சகலகலாவல்லி மாலை

1. வெண்டா மரைக்கன்றி நின்பதந்
    தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
    லோசக மேழுமளித்
துண்டானுடறங்க வொழித்தான்பித்
    தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
    சகல கலா வல்லியே.

2. நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

3. அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

4. தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

5. பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு கமமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

6. பண்ணும் பரதமும் கல்வியு
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

7. பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

8. சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ் சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

9. சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

10. மண்கண்ட வெண்குடை கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

இப்பிரபந்தத்தின் பெயர் 'சரஸ்வதி தோத்திரம்' என்று வழங்கும். இதனைப் பாடினவர் குமரகுருபர சுவாமிகள். இவர் காசிக்குச் சென்றபோது, அந்நகர் தில்லி மன்னனின் ஆட்சிக்குட்பட்டிருந்ததனால் இந்துக்கள் நலிவுற்றனர். இந்துமதத்தை மேலும் விளங்கச் செய்ய வேண்டுமென்பதற்காக, தில்லி பாதுஷா சக்கரவர்த்தியை நேரில் சென்று காண விரும்பின சுவாமிகள், காரியசித்தி பெற்று மீளும் பொருட்டுக் கலைமகள் அருளை வேண்டி இப்பாமாலையைப் பாடினார் என்பர்.

அரும்பத விளக்கம்

(1) வெள்ளை உள்ளம்—அறிவில்லாமையையுடைய மனம். வெள்ளைத் தாமரையில் நீ எழுந்தருளியிருத்தல் போல அடியேனது வெள்ளை உள்ளத்திலும் எழுந்தருளுதல் தக்கதே என்றபடி; அளித்துண்டான் (அளித்து + உண்டான்)—திருமால். அளித்து—பாதுகாத்து; உண்டான்—பிரளய காலத்தில் தமது வயிற்றிலே அடக்கியவன். உறங்க—பாற்கடலிலே பள்ளிகொள்ள; செயலற்றிருப்பவெனவும் ஒரு பொருள் தொனிப்பது காண்க; ஒழித்தான் — சிவபெருமான். பித்தாக — பித்தனாக; கண்டான்—பிரமன்; பிரமனுக்கு உயர்வு தோற்றும்படி இப்பாடலின் சொல்லமைதி இருத்தல் காண்க. சகலகலாவல்லி—கலைமகள்.

(2) தோய்தர — பொருந்த; நாற்கவி—ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கும்; ஆக, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்கு எனலுமாம். பாடும்பணி—பாடுகின்ற தொண்டு; பங்கயாசனம் (பங்கய + ஆசனம்) வெண்டாமரை மலராகிய இருக்கை; கொடியிலே மலர் இருத்தல் இயல்பாயிருப்ப, மலரிலே கொடி உள்ளதென்றது ஒரு நயம்; ஐம்பாற் காடு—கூந்தலாகிய காடு.

(3) அளிக்கும்—உன்னால் அருளப்படும்; தமிழாகிய தெளிந்த அமுதத்தை நிறைய உண்டு; ஆர்ந்து—உண்டு; குளித்து உண்ணுதல் முறையாக இருப்ப, உண்டு குளித்தலை விரும்பியது ஒரு நயம்; உளம் கொண்டு தெள்ளத் தெளிக்கும்—கருத்தால் ஆராய்ந்து மிகத் தெளிந்து செய்யும்; பனுவற் புலவோர்—நூல்களை இயற்றும் புலவர்கள்; கவிமழை—செய்யுளாகிய மழை; கலாபம்—தோகை; மழை பெய்ய மயில் களித்தல் இயல்பு.

(4) தூக்கும்—ஆராயும்; பனுவல் துறை—தமிழ் நூல்களின் பாகுபாடுகள்; கல்வி—நூல்களைக் கற்றுப் பெறும் செயற்கை அறிவு; வாக்கு—கருத்துகளைச் சுவைபட எடுத்துரைக்கும் நாவன்மை; தெய்வ அருளாற் கிட்டும் சொல்வல்லமை எனலுமாம். வட நூற் கடல்—கடல் போலப் பல துறைப் பட்டுப் பரந்து விரிந்த வடமொழி நூல்கள்; தேக்கும் செழும் தமிழ்ச் செல்வம்—இம்மை மறுமை வீட்டின்பங்களுக்கு உறுதுணையாக ஈட்டப்படும் பெருநிதியங்கள் போன்ற தமிழ் நூல்கள்.

(5) பஞ்சு அப்பு இதம் தரு செய்ய பொன் பாத பங்கேருகம்—பஞ்சை (செம்பஞ்சுக் குழம்பை) அப்பிய பாதம், இதம் (இன்பம்) தரும் பாதம், செய்ய பாதம், பொற்பாதம் என்க; பாதபங்கேருகம்—பாதமாகிய தாமரை; பங்கேருகம்—தாமரை; பாத பங்கேருகம் என் நெஞ்சமாகிய தடாகத்தில் மலராததற்குக் காரணம் யாது? நெடுந்தாட் கமலத்திலுள்ள; தாள்—தண்டு; அஞ்சத்துவசம் உயர்த்தோன்—பிரமதேவன்; அஞ்சம்—அன்னப்பறவை; துவசம்—கொடி; அன்னத்தைக் கொடியாக உடையவன் பிரமன், நீ பிரமதேவனது நாவிலும் உள்ளத்திலும் வெண்டாமரை மலராகிய ஆசனத்தில் இருப்பது போல இருந்தருளினாய். கஞ்சம்—தாமரை: தவிசு—ஆசனம்.

(6) பண் என்றது இங்கே இசைத் தமிழையும், பரதம் என்றது நாடகத் தமிழையும் குறித்து நிற்கின்றன. கல்வி இயற்றமிழ் நூலறிவு; தீஞ்சொற் பனுவல்—இனிய சொல்லமைதியுடைய கவி; முத்தமிழ்க் கல்வியும் கவித்துவமும் வேண்டுகின்றார். வேதத்தாற் கூறப்படும் பொருளிலும், ஐம்பூதங்களிலும் நிறைந்திருப்பவள். அன்பர்களின் காட்சிக்கும் தியானத்திற்கும் எளிதில் வந்தருளும் தன்மை கூறியபடி எழுதாமறை—வடமொழி வேதம்.

(7) பாட்டு—செய்யுள் வடிவான நூல்; பொருள்—அந் நூல்களின் கருத்து; பயன்—அப்பொருளால் அடையும் அறம், பொருள், இன்பம், வீடு என்பன; என்பதாற் கூட்டும்படி—அடியேனுக்குக் கிடைக்கச் செய்யும்படி, தொண்டர் உளங் கொண்டு தீட்டும் கலைத் தமிழ்—நின் அன்பராகிய புலவர்கள் உள்ளத்திற் கருக்கொண்டு இயற்றும் கலை நலம் வாய்ந்த, தமிழ்ப் பாட்டுக்கு; தீம்பால் அமுதந் தெளிக்கும் வண்ணம்—இனிய பாலும் நீரும் கலந்த நிலையில் நீரை விட்டுப் பாலைப் பிரித்தெடுத்துப் பருகும் அன்னம் போல. உயிருக்கு உறுதி தரும் பொருள் ஏனையப் பொருளிலிருந்து பிரித்தறியும் வண்ணம்; அமுதம்—நீர்; ஓதிமம்—அன்னம்; கலைமகளை அன்னப் பெடையாக உருவகஞ் செய்ததற்கு இவ்வாறு கூறினார்.

(8) சொல்விற்பனம்—நாவன்மை; அவதானம்—நினைவுப் பயிற்சி ; அட்டாவதானம், சோடசாவதானம் போன்றவற்றைச் செய்யும் பயிற்சி; கல்வி சொல்லவல்ல நல்வித்தை—மாணாக்கருக்குக் கற்பிக்கும் ஆற்றல் ('கவி சொல்லவல்ல நல்வித்தை' என்னும் பாடத்திற்குக் 'கவிபாடும் ஆற்றல்' என்று பொருள் கொள்க). நளினா சனஞ் சேர் செல்வி—இலக்குமி; நளினம்—தாமரை; திருமகளுக்கு எக்காலத்திலும் அழிவில்லாதபடி செல்வங் கொடுத்தல் இயலாது; கலைமகள் எக்காலத்திலும் அழியாதபடி கல்விச் செல்வத்தை நல்கவல்லாள் என்றவாறு.

(9) சொல்லுக்கும்பொருளுக்கும் உயிராயிருக்கும் உண்மை அறிவே உருவாக இருப்பவள் கலைமகள். நின்னை நினைப்பவர் யார்—நீ மனத்தால் நினைத்தற்கு அரியை என்றபடி, நிலந்தோய் புழைக்கை—நிலத்தைத் தொட்டுக் கொடிருக்கும் தொளைக்கை. புழை—தொளை; புழைக்கை—தும்பிக்கை; நற்குஞ்சரத்தின் பிடி—நல்ல இலக்கணமுடைய பெண்யானை. 'பதாம்புயத்தாளே' என்பதும் பாடம்.

(10) மண்கண்ட வெண்குடைக் கீழாக—தமது வெண் கொற்றக் குடையின் நிழலிலே உலக முழுவதையும் வைத்து; பண்—இங்கே செய்யுளைக் குறிக்கின்றது; படைப்போன்—பிரமன்; கண்கண்ட தெய்வம்—பிரத்தியட்சமான பலனைத் தரும் தெய்வம். (இப் பாட்டிலே தில்லிப் பாதுஷாவின் அன்பு தமக்குக் கிடைக்க வேண்டும் என்னும் விருப்பத்தைக் குறிப்பிடுகிறார்).

## IV. சரஸ்வதி வணக்கம்

ஒவ்வொரு நாளுஞ் சரஸ்வதிக்கு வணக்கஞ் செலுத்துவதற்குப் பின்வரும் பாடல்களை நாம் படிக்கலாம்.

தாவறுமுலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

—கந்தபுராணம்—

படிக நிறமும் பவளச் செவ்வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும்—துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

—காளமேகப்புலவர்—

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியாசனத்தில் அரசரோ டெம்மை
சரியாசனம் வைத்ததாய்.

—காளமேகப் புல்வர்—

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே
பூவி லமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடைய யாளே
மூவுல குந்தொழு தேவி
செப்புக் கவித்தநன் முலையாய்
செவ்வரி யோடிய கண்ணாய்
முத்து நிறைந்த வெண்பல்லாய்
முருக்கம் பூமேனி நிறத்தாளே
தக்கோலந் தின்ற துவர்வாயாய்
சரஸ்வதி யென்னுந் திருவே
எக்காலு முன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணுவிப்பாய்
ஆக்கா யெம்பெரு மாட்டி
அழகிய பூவனை மீதாய்
நோக்கா யென்மிடி தீர
நொடிக்கும் பிரமாணத்தி னோக்காயே
சாலி னெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூசை பண்ணிப்
பாலொடு பழத்தை நிரப்பிப்
பராவித் தொழுவோ நங்காய்
நங்காய் நங்காய் நமஸ்து
ஞானக் கொழுந்தே நமஸ்து
கல்விக் கரசே நமஸ்து
கணக்கறி தேவி நமஸ்து
சொல்லும் பொருளே நமஸ்து
சூக்கும ரூபி நமஸ்து.

# அனுபந்தம்

## (இ) இந்து சமயப் பழக்கவழக்கங்கள்

### விருந்தினரை வரவேற்றல்

திருக்குளத்து வீதி வழியே இருபுறத்து வீடுகளையும் பார்த்தபடி பேதுறுப்பிள்ளை வந்துகொண்டிருக்கிறார். அவருடைய நண்பன் பத்மநாபன் அண்மையில் மனைமாறி அவ்வீதியிற் குடியேறியிருக்கிறார். ஆனாற் பத்மநாபனின் புது மனையின் எண் பிள்ளையவர்களுக்குத் தெரியாது. அதனாற்றான் இப்படிப் பார்த்துச் செல்லுகிறார்.

திடீரென ஒரு வீட்டுக்கு முன்னால் நின்று, அதைக் கவனிக்கிறார். வீட்டின் முன்றிலில் அழகான கோலம் போடப்பட்டிருக்கிறது. பூச்சரங்கள் இடையிட்ட மாவிலைக் கோவையொன்று வாயிற்புறக் கதவு நிலைக்குக் குறுக்கே கட்டப்பட்டிருக்கிறது. இலைகளுஞ் சரங்களுங் காய்ந்து சருகாகிக் கிடக்கின்றன.

தன் நண்பனின் வீடு இதுவாயிருக்கலாம் என்று பிள்ளையவர்கள் யூகித்துக் கொள்கிறார். முன்றிலைத் தாண்டிச் சென்று திறந்திருந்த கதவிலே மெல்லத் தட்டுகிறார். இவர் வரவை எதிர்பார்த்திருந்தவர் போலப் பத்மநாபனின் மனைவி வந்து தோற்றுகிறார்.

அவருடைய கூந்தலிலே மல்லிகை மாலை; நெற்றியிலே குங்குமப் பொட்டு, ''வாருங்கள், வாருங்கள்! கண்டு கன நாள்களாயிற்றே'' என்று சொல்லி அன்பாக வரவேற்கிறார்.

அவருடைய புன்னகை தவழும் முகமும், நயமான குரலும் பிள்ளையவர்களின் மனத்தைப் பூரிக்கச் செய்கின்றன. உள்ளே சென்று உட்கார்ந்தார்.

நேரம் அப்பொழுது பொழுது சாயுங் காலம். பத்மநாபனின் பிள்ளைகள் இறைவனை இசைப்பாடலினால் வந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். மனைவி திருவிளக்கேற்றியதன் பின் பத்மநாபன் இட்ட தூபத்தின் நறுமணம் வீடெங்கணும் புனிதம் பரப்பிக் கொண்டிருந்தது.

சற்று நேரத்திற்குள் பத்மநாபனும் வந்து சேர்ந்தார். தம் நண்பனுடன் பழங்கதைகள் பேசி இன்பம் பெருக்க ஆரம்பித்தார்.

இதற்குள் அவருடைய மனைவி வெள்ளிப் பாத்திரத்திலே கோப்பி கொணர்ந்து, வந்த விருந்தினருக்கு அன்பாகக் கொடுத்தார். விருந்தினரும் அதை வாங்கி அண்ணாந்து பருகிக் கொண்டார்.

நண்பனின் வற்புறுத்தலின் பேரில் பிள்ளையவர்கள் அன்று அங்கேயே இராப் போசனஞ் செய்ய உடன்பட்டுக் கொண்டார்.

நேரமாகியதும் சாப்பாட்டைப் பத்மநாபனின் மனைவி வாழையிலைகளிலே பரிமாறினார். உணவு வகைகள் யாவுந் தாவர உணவு வகைகளே. அன்பாக அளிக்கப்பட்ட உணவைப் பிள்ளையவர்கள் தம் நண்பரோடும் அவருடைய பிள்ளைகளோடும் உண்டு களித்தார்.

பிள்ளையவர்களும் பத்மநாபனும் நெருங்கிய நண்பர்கள். சமயத்தால் வேறுபட்டவராயினும் ஒருவர் கலாசாரத்தை மற்றவர் நன்கறிவார். சந்தர்ப்பம் எழுந்தபோதெல்லாம் ஒருவருடைய பழக்கவழக்கத்தை மற்றவர் மதித்து நடந்து கொள்வார்.

இந்நாட்டில் வாழும் இந்துக்கள் யாவருஞ் சைவர்கள் என்றே சொல்லலாம். அவர்கள் வீட்டுவாயிலிலே தினமுங் கோலம் இடுவர், காலையிலும் மாலையிலுஞ் சுகந்த தூபமிட்டு வீட்டைப் புனிதப் படுத்திக்கொள்வர். பெண்கள் கூந்தலிற் பூவோ, பூமாலையோ சூடிக்கொள்வர். நெற்றியிற் பொட்டுப் போட்டுக் கொள்வர்.

சைவ மக்களுக்கு நெற்றியிற் பொட்டிடுதல் ஒரு சமயச் சார்பான செயல், பொட்டு மெய்யறிவைக் காணுங் கண்ணாகப் பாவனை செய்யுந் தத்துவக் கருத்துக் கொண்ட குறியீடாகும்.

அன்புநெறி நின்றொழுகுஞ் சைவ மக்கள் இயல்பாகவே சகல சீவராசிகள் மாட்டும் அன்பும் இரக்கமும் கொண்டு ஒழுகுவர். அவர்கள் உயிர்வதையை விரும்பாத மனப்பாங்குடையவர், இம் மனப்பாங்கை,

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்

என்று வள்ளுவர் பெருமான் அழகாக எடுத்துரைக்கிறார்.

சைவமக்கள் தாவர உணவையே விரும்பி உண்பர் என எதிர்பார்க்கப்படுகின்றனர். எவ்வாறாயினும் விஜயதசமி போன்ற சமயத் திருநாள்களிலும், திருமணம் போன்ற சமூகப் பெருநாள்ளிலும் விருந்தினருக்குத் தாவர உணவு வகைகளையே கொடுத்து உபசரிப்பர்.

## திருமணச் சடங்கு முறைகள்

ஒரு சைவனுடைய வீட்டில் நடைபெறும் பெரு நிகழ்ச்சிகளிலே திருமணம் மிக முக்கியமானது. திருமணத்தின்போது குறிப்பிட்ட நேரத்தில் மணமகன் மணமகளுடைய வீட்டிற்குச் செல்வான். அங்கே அவனை மணவறையிலே இருத்தி அறிவும் அனுபவமும் நிறைந்த குருக்கள் ஒருவர் வேத சிவாகம விதிப்படி கிரியைகள் இயற்றி மணவினை முடித்து வைப்பார்.

முதலாவதாக மணமகன் தனது மனம் முழுவதும் மணக் கிரியைகளிலே ஒன்றியிருப்பதாகச் சங்கற்பஞ் செய்து கொள்வான். (சம்பல்பம்—நன்றாக நினைத்தல்; நிச்சயித்தல்).

பின் உலகிலே உணவு விருத்தியை விரும்பி ஒரு சட்டியிலே நவதானியம் (ஒன்பது தானிய வகை) முளையிடப்படும். தொடர்ந்து எடுத்த கருமத்தில் எவ்வித இடையூறும் அணுகாவண்ணம் மணமகனுடைய கையிலே காப்புக் கட்டப்படும். அதன்பின் முன்னோர்களுடைய ஆசியைப் பெறுவதற்காகப் பிதிர்வழிபாடு நடைபெறும்

அடுத்தபடியாகச் சிவம் சக்தி என்ற பாவனையில் இரு கும்பங்கள் வைத்து, ஓமாக்கினி வளர்த்துப் பூசை நடைபெறும். (இறைவன் அறிவொளி வடிவானவன் என்பதையே அக்கினி குறிக்கிறது).

இதன்பின் மணமகள் அழைத்து வரப்பட்டு மணமகனின் வலப்பக்கத்தில் இருத்தப்படுவாள். மணமக்களை ஒருங்கே காணுஞ் சபையோர் அவர்களைச் சிவனுஞ் சத்தியுமாகவே பாவனை பண்ணுவர்.

இப்போது மணமகளுஞ் சங்கற்பஞ் செய்து காப்புக் கட்டுவித்துக் கொள்வாள்.

இதைத் தொடர்ந்து மணமகளின் தந்தையார் மணமகளைச் சிவமாகப் பாவித்து உபசாரங்கள் செய்வார். உபசாரங்கள் முடிந்ததும் மணமக்களின் வம்சாவளி சபையோர் அறியக் கூறப்படும். அதையடுத்துப் பெண்ணின் தந்தையார் பெண்ணின் கையை மணமகனின் கையில் வைத்து நீர் வார்த்துக் கையளிப்பார். மணமகனும் பெண்ணை ஏற்றுக்கொள்வான்.

அடுத்தபடியாகத் தாலி கூறை முதலியன வைக்கப்பட்டிருக்குந் தட்டம் நிறைமாந்தரின் ஆசீர்வாதத்திற்காகப் பந்தர் முழுமையும் கொண்டு செல்லப்படும். தாரத்தோடு இல்லறம் நடாத்தும் ஆடவரும் சுமங்கலிகளான பெண்களுமே இங்கே நிறைமாந்தர் எனக் கருதப்படுவர்.

பின் ஆசீர்வதிக்கப்பட்ட கூறை முதலிய அணி பொருள்களை மணமகன் கொடுக்க, மணமகள் வாங்கிச்சென்று, அவற்றை அணிந்துகொண்டு வருவாள்.

வந்ததும், மங்கள வாத்தியங்கள் ஒலிக்க, மணமகன் அவளுக்குத் தாலியைக் கட்டி, சபையோர் சாட்சியாக, அக்கினி (இறைவன்) சாட்சியாக அவளை இல்லக்கிழத்தியாக ஏற்றுக் கொள்வான்.

தாலி கட்டியதன் பிறகே மணமகள் மணமகனுக்குப் பூரண உரிமையுடையவளாகின்றாள். அதனால் அவள் அதன் மேல் அவனுக்கு இடப்பக்கத்தில் இருத்தப்படுகிறாள். அப்போது இருவரும் ஒருவர்க்கொருவர் மலர்மாலை சூடியும் இனிய உணவைப் பரிமாறியும் மகிழ்வர்.

இந்நிகழ்ச்சியின் பின் மனித வாழ்க்கைக்கு மிகவும் உதவும் விலங்குகளில் முக்கியமானதான கன்றோடு கூடிய பசு போன்ற மங்களப் பொருள்களைக் கண்டின்புறுவர்.

### மரணக் கிரியைகள்

சைவ இல்லத்தில் நடக்கக்கூடிய இன்னுமொரு சடங்கு மரணக் கிரியையாகும். ஒருவர் இறந்தவுடன் அவருடலைத் தலை தெற்கு நோக்கத் தெற்கு வடக்காகக் கிடத்தித் தலை மாட்டிலே குத்துவிளக்கேற்றுவர். அதன் பின் வீட்டிலே

வெள்ளை விதானங் கட்டி, மூன்றிலைத் தோரணம் மாவிலை களினால் அலங்கரித்து, தெரு வாயிலிற் குலைவாழைகள் கட்டுவார்கள்.

இழவறிந்து வந்த உற்றார், உறவினர், நண்பர்கள் ஒப் பாரி சொல்லி அழுது குளறுவார்கள். இவ்வாறு அழுகை என்னும் மதகு வழியே துயரவெள்ளம் ஓடி வடியும்.

அதன் பிறகு குழுமி இருப்போரின் மனம் கலையம்சமும சூழ்ந்த கருத்துங் கொண்ட சைவக் கிரியைகளை நோக்கித் திருப்பப்படும். சைவக் குருக்கள் ஒருவர் முற்றத்தில் நிறு வப்பட்ட பந்தரின் கீழ்க் கோலத்தால் அலங்கரிக்கப்பட்ட பகுதியிற் கும்பங்கள் வைத்து ஓமாக்கினி வளர்த்து வழி படுவர்.

பின் மஞ்சள் முதலிய வாசனைப் பொருள்கள் உரலில் இட்டு இடிக்கப்படும். இறந்தவரின் ஆண்மக்களே கூடி நின்று இடிப்பர். இடிக்கும்போது இளங் கன்னியர்கள் பாடி இடிக்கும் பாவனையில், மாணிக்கவாசக சுவாமிகளின் திருப் பொற்சுண்ணப்பதிகம் படிக்கப்படும்.

சுண்ணம் இடித்ததன் மேல் இறந்தவரின் உடலை ஒரு தனி இடத்திலே வைத்து, இடித்த சுண்ணத்தைப் பூசி, பால் இளநீர் பன்னீர் முதலியவற்றைத் தலையிலே ஊற்றி, வெகு கௌரவமாக நீராட்டி, புத்தாடை புனைந்து, அலங் கரித்துக் கொண்டு வந்து கிரியைகள் நடக்கும் இடத்தில் வைப்பர்.

அதன்பின் சிவாசாரியார் மந்திரத்தினாலே பலவகைச் சுத்திகள் செய்வார். பின் இறைவனை வழிபட்டு, இறந்த வரின் ஆன்மாவை உருத்திரனோடு சேர்ப்பதாகப் பாவனை பண்ணுவர்.

அதன்மேல் உடலை அலங்கரித்த தண்டிகையிலே வைத் துச் சுடலைக்குக் கொண்டு செல்வர். வழிவழியே நெற்பொறி தூவி ஆசிர்வாதஞ் செய்யப்படும். ஓமாக்கினியிலிருந்து எடுக் கப்பட்ட தீக் கொள்ளி ஒன்றும் ஒரு கும்பமும் உடன் கொண்டு செல்லப்படும்.

சுடலையிலே அடுக்கிய விறகின்மேல் உடலைவைத்து, இறந்தவரின் அன்பிற்குரிய மகன், இடப்புறமாகக் கும்பத் தோடு சுற்றிவந்து, கும்பத்தைக் கீழே விழவிட்டு, உடலுக்கு எதிர்நோக்கி நின்று, கொண்டுவந்த கொள்ளியைத் தலையிலே வைப்பர்.

செத்த வீட்டிற்கு வந்த யாவரும் நீராடிய பின்னரே தத்தம் வீட்டிற்குள் புகுவர். உடல் எரித்த சாம்பல் கடல், ஆறு முதலிய நீர்நிலை ஒன்றிலே சேர்க்கப்படும். இந்துக்கள் இறந்தவரின் உடலை இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் தகனம் செய்து விடுவார்கள்.

மரணக் கிரியைகளை உற்று நோக்கும்போது, இன்பத்தில் மட்டுமன்றித் துன்பத்திலும் துயரத்திலுங் கூடச் சித்தத்தைச் சிவன் பால் வைத்துச் சாந்திபெற இந்து சமயம் வழி வகுத்துக் கொடுத்திருக்கிறது.

சட சம்பந்தமான — இயந்திர மயமான — ஒரே ஒழுங்கை இந்து சமுதாயத்திற் காண முடியாது. காலதேச நிலைமைக்கேற்பவும். தன் அறிவின் படித்தரத்திற்கேற்பவும், தன் வாழ்க்கையை வளமாக அமைத்துக் கொள்ள ஓர் இந்து சமயத்தவனுக்கு உரிமை உண்டு. எனினும் வேற்றுமைகளுக்கிடையில் ஒருவகை ஒற்றுமை அழகை நாம் இந்து சமுதாயத்திலே காண முடிகிறது. அதுதான் தெய்வ நம்பிக்கை, அன்பு, இனிமை, சுதந்திரமான ஆழ்ந்த சிந்தனை, பிறர் உளப்பாங்கை மதித்து நடத்தல், கலையில் ஈடுபாடு, நன்றியறிதல் போன்ற நற்பண்புகளுக்கு அடிப்படையாக அமைந்த ஒழுக்கம். இவ்வொழுக்கமே இந்து சமயப் பழக்க வழக்கங்களைக் கட்டுப்படுத்துகின்றது.

## (ஆ) பௌத்த சமயப் பழக்க வழக்கங்கள்

சிங்கள மக்களின் தேசிய, சமய, கலாசார வரலாற்றில், ''அரஹத்'' மகிந்தருடைய வருகை, ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தது. இந்தப் புதுயுகத் தொடக்கத்திற் கட்டிடங்கள், துறவியர் மடங்கள், தாதுகர்ப்பங்கள், உருவச்சிலைகள் போன்றவை நிறுவப்பட்டன. இவை தவிரச் சிங்கள மக்கள் பெருமைப்படக் கூடியவாறு அவர்களின் பண்பாடு, சமூக ஒழுங்கு, பழக்க வழக்கங்கள் ஆகியன நிலை நிறுத்தப்பட்டு வளர்க்கப்பட்டு வந்துள்ளன.

அன்று தொட்டு இன்றுவரை வாழ்க்கைச் சம்பவங்களை மையமாகக் கொண்டுள்ள பழக்கவழக்கங்கள் பலவற்றைச் சிங்கள பௌத்தர்கள் பின்பற்றி வருகின்றனர். இவற்றில்

ஒவ்வொன்றிலும் பௌத்தச் செல்வாக்கைப் பெரிதும் காணலாம். இந்தப் பௌத்த பாரம்பரியமே நமது தேசிய வாழ்க்கையில் வெளிப்பட்டு, சிங்களவரின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக விளங்குகின்றது. அவர்கள் இந்த வழக்கங்களை, மிகுந்த பக்தி சிரத்தையுடன் கடைப்பிடித் தொழுகுகின்றார்கள். ஒருவருடைய வாழ்க்கையில் முக்கிய சம்பவங்களோடு தொடர்புள்ள சில வழக்கங்களைக் கீழே காணலாம்.

மனிதப் பிறப்பெடுத்தல் ஒரு நற்பேறு எனப் பௌத்தர்கள் நம்புவர். இதற்குப் பெரும் புண்ணியத்தை ஈட்டிக் கொள்ளுதல் அவசியம். அதனால் மனித வாழ்வின் மதிப்புச் சிறக்கும். ஆகவே ஒரு பிள்ளையின் பிறப்புப் பெற்றோருக்கும், குடும்பத்திற்கும். சமுதாயத்திற்குமுரிய பெரிய வரப் பிரசாதமாகும்.

பிள்ளை, தாய் இருவரின் பாதுகாப்புக்காகவும் பல வழக்கங்கள் பின்பற்றப்படுகின்றன. இன, மத. அந்தஸ்து பேதமின்றி, ஒரு தாயினிடம் பௌத்தர்கள் அன்பும் கருணையும் காட்டுவர். கருப்பமுற்ற காலத்தில் அத்தாய் பௌத்த முறைக்கிணங்கத் தனது வாழ்வை நடத்துவாள். பிரசவ காலம் நெருங்கியதும், பிக்குமார் 'பிரித்' ஓதுவது வழக்கம். தலைப் பிள்ளையின் பிரசவத்திற்குக் கருப்பிணி தாய்வீடு செல்லுதலும் பொதுவான வழக்கமேயாகும். பிறந்த சிசுவை முதன் முதலில் வெளியே கொண்டுபோகும்போது 'மும்மணிகளின்' ஆசியைப் பெறும் சமயச் சடங்குகட்காக விகாரைக்குக் கொண்டு செல்லுதலே வழக்கம்.

## திருமணம்

திருமண வயதை அடைந்த தமது மக்களுக்குத் திருமணம் செய்து வைப்பது பெற்றோருடைய முக்கிய கடமையாகக் கருதப்பட்டு வருகின்றது. பௌத்தத் திருமணம் பலவித சமய சமூகக் கிரியைகளையும் சடங்குகளையும் கொண்டதாக அமைந்துள்ளது. இவற்றின் மூலம் சமய தேசிய சம்பிரதாயங்கள், நிலைநிறுத்தப்பட்டு உறவினர் நண்பர் ஆகியோரிடையே ஒற்றுமையும், உறவும் வளர்க்கப்படுகின்றன. திருமண வைபவத்தில் பிக்கு நேரடியாகக் கலந்து

கொள்வதில்லை. எனினும், திருமணம் நடக்குமுன் தானம் வழங்குவதற்கும், 'பிரித்' ஓதுவதற்கும் நல்லுபதேசமும் ஆசி மொழியும் பகருவதற்கும் அவரை அழைப்பர்.

திருமண நாளன்று நல்ல முகூர்த்தத்தில் மணமக்கள் சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட மணவறை (போருவ) யில் நிற்பர். அச்சமயத்தில், சமயச் சிறப்பு வாய்ந்த 'மங்கள் அஷ்டகம்', 'ஜயமங்கள கீதம்' ஆகியவை பாடப்படும். மண மகளுக்குப் புதிய அட்டியல் அணியப்படும். புத்தாடை வழங்கப்படும். இவை வெறும் சம்பிரதாயச் சடங்குகள் அல்ல. மணமகளுக்கு வாழ்க்கையில் தேவையானவை எல்லாவற்றையும் அளிக்கும் பொறுப்பை மணமகன் தான் ஏற்றுக்கொள்ளுவதன் அடையாளமாகவே இவை அமைகின்றன. நெருங்கிய உறவினருக்கு மரியாதை செலுத்துமுகமாக, வெற்றிலை அளிக்கப்படும். மணமகள் தன்து உற்றார் உறவினரிடம் பிரியாவிடை பெறுவதற்கும், மணமகனது குடும்பத்தினரிடமிருந்து நல்லாசியும் வரவேற்பும் பெறுவதற்கும், அடையாளமாக இது அமைந்துள்ளது.

## இறப்பு

கர்மம், மறுபிறப்பு என்பவை பௌத்தர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இரு பிரதானமான கருத்துக்களாகும். அவற்றின் படி, ஒருவர் இறந்த பிறகு மறுபடியும் மறுபிறப்புத் தொடரும். இனி வரும் வாழ்க்கை இன்பமுடையதாக அமையவேண்டின் இப் பிறவியிலேயே ஒருவர் புண்ணிய கைங்கரியங்களை மேற்கொள்ள வேண்டும். தர்மச் செயல்களில் ஈடுபட வேண்டும். இக்கொள்கைகளின் அடிப்படையிலேயே பௌத்த மக்களின் மரணக் கிரியைகள் அமைகின்றன.

இறப்பு ஒருவரை நெருங்கும் பொழுது அவரது சுற்ற மித்திரர்கள் சாத்தியமான ஒரு புண்ணியச் செயலில் அவரது மனத்தைப் பதியச்செய்ய எத்தனிப்பர்; அன்றேல் அவர் தனது வாழ்நாளில் ஆற்றிமுடித்த நற்காரியங்களை நினைவூட்ட உதவுவர். துட்டகைமுனுவின் தார்மீகச் செயல்களை வாசித்துக் காட்டுவது பின்னதற்கு ஓர் உதாரணமாகும்.

உபதேசம் செய்தல், பிரித்தோதல், சிறப்பாக, 'சதிபட்டான' (நினைவு கொளல்) சூத்திரம் ஓதுதல் ஆகியனவற்றால் மனத்தைப் பக்குவப்படுத்தற்கென இறப்பவரின் படுக்கைக்குச் சில சமயங்களில் ஒரு பிக்குவை வரவழைத்தலும் உண்டு.

பௌத்த சங்கத்திற்குத் தானம் வழங்குதல் இத்தருணத்தில் ஒருவர் ஆற்றக்கூடிய கடைசிப் புண்ணியச் செயல்களில் ஒன்றாகும்.

இறுதியில் மேற்கு நோக்கித் தலை கிடக்குமாறு உடல் சவப் பெட்டியில் வைக்கப்படும். இரவும் பகலும் தேங்காய் எண்ணெய் விளக்கு எரிந்துகொண்டே இருக்கும். உடல் புதைக்கப்படும் அல்லது எரிக்கப்படும் வரையில் ஒருவர் மாறி ஒருவர் தொடர்ந்து காவல் புரிவர்.

இவ்வேளையில் அயலவர்களோ, உறவினர்களோ வீட்டினருக்கான உணவு யாவற்றையும் வழங்கிவருவர். துன்பத்திலும் இன்பத்திலும் பங்குபற்றல், பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு வழங்குதல் ஆகிய மிகப் பழைய வழக்கங்களைச் சிங்களப் பௌத்த மக்கள் இவ்வாறு பேணி வருகின்றார்கள்.

ஐம்பெரும் கேட்பாடுகளை அனுசரித்ததோடு மரணக் கிரியைகள் மயானத்தில் ஆரம்பமாகும், பின்னர் சங்கத்துக்கு ஆடை தானம் வழங்குதலும் அதைத் தொடர்ந்து நெருங்கிய பந்துக்களில் ஒருவர் நிரம்பி வழியும்படி பாத்திரத்தில் நீர் ஊற்றச் சமய சூத்திரங்கள் ஓதுதலும் நடக்கும். நீரூற்றல், இறப்பவருக்குப் புண்ணியத்தைத் தாரை வார்த்துக் கொடுத்தலாம்.

ஈமக் கிரியைக்கு அடுத்ததாக வழக்கிலுள்ள மிகவும் முக்கியமான செயல் இறந்தவர் சார்பில் சங்கத்துக்குத் தானம் வழங்குதலாகும், இது மரணத்தின் பின் மூன்றாம் நாள் அல்லது ஏழாம் நாளும், மீண்டும் மூன்றாம் மாதத்தின் பின்னரும் நிகழும். இறப்பவருக்குப் புண்ணியத்தைத் தாரை வார்த்துக் கொடுத்தல் புத்தர் காலத்திலிருந்து வழக்கிலுள்ள ஒன்றாகும்.

## (இ) இஸ்லாம் சமயப் பழக்கவழக்கங்கள்

மக்களின் கலாசாரத்தில் சடங்குகள், பழக்கவழக்கங்கள் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. அவை கலாசாரத்தை எடுத்துக் காட்டும் சின்னங்களாகவும், சமுதாயத்தை ஒன்றிணைத்துக் கட்டுப்படுத்தும் சக்தியாகவும் அமைந்துள்ளன.

சமய வரலாற்றுப் பாதையில் முஸ்லிம்கள் தம் பழக்க வழக்கங்கள், சடங்குகள் என்பவற்றை நபிகள் நாயகம்

(ஸல்) அவர்களின் சிறந்த முன்மாதிரியான வாழ்க்கை முறைகளிலிருந்து பெற்றுக் கொண்டார்கள். அதனால் அவை சமுதாயத்தைச் சீரிய முறையில் வைத்திருக்கின்றன. இம் மரபுகளும், பழக்கவழக்கங்களும் இதுகாலவரை, மிகவும் உன்னதமான முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு இன்று உலகில் வாழும் 90 கோடி முஸ்லிம்கள் சிறந்த சான்றாக விளங்குகின்றனர். முஸ்லிம்கள் உலகின் எந்தப் பகுதியில், எந்த நாட்டில் வாழ்ந்த போதிலும் அவர்களிடையே நிலவும் பழக்கவழக்கங்கள், மரபுகள் என்பவற்றின் மகத்துவத்தை நாம் குறைவாக எடைபோட்டு விட முடியாது. முஸ்லிம்களின் வாழ்வில் அவை பெரும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன.

அன்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இயற்கையோடு ஒட்டிய சாதாரண அமைதியான எளிய வாழ்க்கை வாழ்ந்து, அதன்மூலம் எல்லாக் காலத்திலும் வாழும் அனைத்து மக்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அவர்களின் வாழ்க்கை முறையிலிருந்து பெறப்பட்ட அம்சங்களே முஸ்லிம்களின் சடங்குகளிலும், ஆசாரங்களிலும் பழக்கவழக்கங்களிலும் சம்பிரதாயங்களிலும் பிரதிபலிப்பனவாக உள்ளன. அவர்களின் போதனைகள் சாதனைகள் யாவற்றையும் முஸ்லிம்கள் தமது வாழ்க்கைச் சட்டங்களாகக் கொள்கின்றனர். ஏனெனில், புனித மறையாம் அல்குர் ஆனில் அல்லாஹ்த ஆலா நாயகமவர்களைக் குறித்து, ''நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிலே சிறந்த முன்மாதிரி உண்டு'' என்று கூறுகின்றான்.

எனவே முஸ்லிம்களின் வாழ்க்கை முறைகள் அனைத்தும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடியொட்டிய வாழ்க்கையாக அமைதல் இன்றியமையாததாகும்.

முஸ்லிம்களின் வாழ்க்கையில் காணப்படுகின்ற பழக்கவழக்கங்கள் சடங்குகள் சம்பிரதாயங்கள் என்பவற்றில் பிறப்பு, அறிவு தேடல், திருமணம், இறப்பு சம்பந்தமான அம்சங்களைப் பற்றி இப்பொழுது நாம் சுருக்கமாக ஆராய்வோம்.

## பிறப்பு

முஸ்லிம் பெற்றோருக்கு ஒரு பிள்ளை பிறந்ததும் அதனுடைய காதில் ''அதான்'' (தொழுகை அழைப்பு) ஓதப்படுகிறது. அது பிறந்த பிள்ளையின் வலது காதில் முதலிலும் இரண்டாவது காதில் பின்னரும் ஓதப்படுகின்றது. இப்படிச்

செய்வதால் குழந்தையின் காதில் விழும் முதல் ஓசை அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிதலை ஞாபகப்படுத்துவதாக அமைகிறது. மேலும் அக்குழந்தை பிறந்த ஏழாவது நாளில் அதன் சிரமுடியைச் சவரம் செய்வது வழக்கமாகும். இவ்வாறு சுத்தஞ் செய்வதால் அக்குழந்தையானது கெடுதிகளிலிருந்தும் பாதுகாக்கப்படுகிறது. மேலும் அக்குழந்தையின் தலைமுடியின் நிறைக்குத் தங்கத்தை அல்லது வெள்ளியை ஏழைகளுக்குத் தான தர்மம் செய்வதும் முஸ்லிம்களிடம் ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. ஒரு பிள்ளை பிறந்ததும் அதற்காக ''அகீகா' கொடுப்பதும் ஒரு பிரதான வழக்கமாகும். ''அகீகா'' என்பது ஒரு ஆட்டை அல்லது மாட்டை இறைவனின் பெயரில் ''குர்பான்'' (தியாகம்) செய்து அதனை உறவினர்களுக்கும் வறியவர்களுக்கும் அயலவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பதாகும்.

## பெயர் சூட்டு வைபவம்

பிறந்த பிள்ளைக்கு அடுத்ததாக எடுக்கப்படும் வைபவம் பெயர் சூட்டு வைபவமாகும், பெயர் சூட்டு வைபவம், ஏனைய சமூகத்தவரிடையிலும் இருந்தபோதிலும் முஸ்லிம்களிடையே நடைபெறுவது சில விசேடங்களைக் கொண்டதாக இருக்கிறது. பிறந்த முஸ்லிம் பிள்ளைகளுகக்குப் பெயர் சூட்டும்போது ஒரு அழகிய அறபுப் பெயரையே சூட்டுவர். இப்பெயர் இறைவனின் அழகிய திருநாமங்களில் விருப்பமான ஒன்றைத் தெரிந்து அதனுடன் 'அப்து' (அடியான்) என்ற சொல்லைச் சேர்த்ததாயிருக்கும்; அல்லது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அல்லது நபிமார்கள், வலிமார்கள், பெரியார்களுள் ஒருவரது பெயர்களுள் ஒன்றாயிருக்கும். இவ்வாறு பெயரிடல் முஸ்லிம்களின் கடந்த கால சமய, வரலாற்றுப் பெருமையின் தொடர்பைப் பலப்படுத்திப் பாதுகாக்க உதவுகிறது. இப்பெயர் சூட்டும் வைபவமானது முஸ்லிம் வீடுகளில் நிகழும் ஒரு சந்தோஷமான நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சியில் உறவினர்களும், நண்பர்களும் அயலவர்களும், வறியவர்களும் அழைக்கப்பட்டு விருந்தளித்து உபசரிக்கப்படுகின்றனர்.

## வித்தியாரம்பம் செய்து வைத்தல்

அல்லாஹ் தஆலாவின் புனிதமறையாகிய அல்குர் ஆனே எல்லா அறிவுக்கும் ஊற்றுக் கண்ணாகவும், முக்கிய ஊடகமாகவும் முஸ்லிம்களால் கொள்ளப்படுகின்றது. ஒரு முஸ்

லிம் பிள்ளையானது தனது வித்தியா அப்பியாசத்தின் ஆரம் பத்தில், அறபு மொழியின் ஆதி எழுத்தாகவும் அல்லாஹ் என்பதன் ஆரம்ப எழுத்தாகவும் அமைந்துள்ள ''அ'' வை மொழிந்து தனது கல்விப் பிரயாணத்தைத் தொடர்கின்றது. அதிலிருந்து.

''பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம்''

''அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனு மாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பிக்கிறேன்'' என்று ஓதி அல்குர் ஆனைக் கற்க ஆரம்பிக்கின்றது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம் ஆண், பெண் இரு பாலாரும் கல்வியைத் தேடிக் கற்க வேண்டுமென வலி யுறுத்திக் கூறினார்கள். அவர்களின் பொன்மொழிகளுட் சில பின்வருமாறு: —

> ''கல்வியைத் தேடிக் கற்பது முஸ்லிம்கள் அனைவர் மீதும் கடமையாகும்''
>
> ''ஒரு அறிஞரின் பேனா மையானது ஒரு வீரத் தியாகி யின் இரத்தத்தை விடச் சிறந்தது''
>
> ''சீனா சென்றாயினும் சீர் கல்வி தேடுக''

இத்தகு சிறப்பு மிக்க கல்விப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்ச் சியைச் சிறப்பாகக் கொண்டாடுவது முஸ்லிம்களின் வழக்க மாக, இருந்து வருகின்றது. அந்நிகழ்ச்சியின்போது முஸ்லிம் பெற்றோர் தமது உறவினர்க்கும் அயலவர்க்கும் விசேடமாகச் சிறார்களுக்கும் இனிப்புப் பண்டங்களை மகிழ்வுடன் வழங்கு வர்.

## திருமணம்

பூரணத்துவம் வாய்ந்த வாழ்க்கைக்குத் திருமணம் அவ சியமாகும். ஆகையாலேதான் இஸ்லாத்தில் திருமணத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ''திருமணம் எனது வழியாகும். எனது வழியைப் பின்பற்றாதவர்கள் என்னில் நின்றும் உள்ளவர்களல்லர்'' என்று கூறினார்கள். முஸ்லிம் திருமண வைபவங்களில் முக் கியமாக நினைவு கொள்ளத்தக்கது எளிய ஆடம்பரமற்ற திருமண வைபவமாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்

களின் மகள் பாத்திமா (றழி) அவர்களுக்கும், அலீ (றழி) அவர்களுக்குமிடையில் நடந்த திருமணம் ஆடம்பரமற்ற திருமணத்துக்குச் சிறந்த உதாரணமாகும். மணமகன் மணமகளுக்கு 'மஹர்' (மணமகளுக்கு மணமகன் செலுத்த வேண்டிய பணம்) வழங்கி ஆடம்பரமற்ற சாதாரண ஒரு வைபவத்தின் மூலம் திருமணத்தைச் செய்வதே சிறந்தது. திருமணமென்பது மணமகன் மணமகள் என்போர் இருவருக்குமிடையில் நடைபெறும் ஒரு ஒப்பந்தமாகும். மணமகளின் சார்பில் மணமகளின் தந்தை அல்லது சகோதரர் இவ்வொப்பந்தத்தை முன்னின்று நடாத்துகின்றனர். இவ்வொப்பந்தம் நடைபெற்ற பின் மணமகனால் தன் குடும்பத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அயலவர்களுக்கும் விருந்தளிக்கும் வழக்கம் தவறாது நடைபெற்று வருகிறது.

## மரணச் சடங்குகள்

முஸ்லிம்கள் தம்மைப் படைத்த இறைவனுக்கு மட்டுமல்லாது, தங்களுக்கும், தம்மைச் சூழ்ந்தவர்களுக்கும் செய்ய வேண்டிய சில கடமைகளை உடையவர்களாய் இருக்கின்றனர். ஒருவர் இறப்பின் அவரது சடலத்தை நல்ல முறையில் அடக்கம் செய்து அவர் உயிருடன் இருந்த காலத்தில் அவர் ஏதும் பாவங்கள் செய்திருந்தால் அவற்றை மன்னித்து அருள் பாலிக்கும்படி இறைவனிடம் அவருக்காக இறைஞ்சுவது அவ்விதக் கடமைகளுள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்கடமைகள் தனிபட்ட முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல முழுச் சமுதாயத்துக்கும் உரியதாகும். ஆகவே அது 'பர்ளு கிபாயா' அல்லது 'சமுதாயக் கடமை' என அழைக்கப்படுகின்றது. இறந்த ஒரு முஸ்லிமுக்காக உள்ள கடமைகள் நான்காகும். அவை :—

(1) இறந்த சடலத்தைச் சுத்தமாகக் கழுவிக் குளிப்பாட்டுதல்.

(2) தூய (வெள்ளைத்) துணியைக் கொண்டு சடலத்தைச் சுற்றி மூடுதல்.

(3) மையத்துத் தொழுகை நடாத்தல்.

(4) மையத்தை (சடலத்தை) நல்லடக்கம் செய்தல்.

ஒரு முஸ்லிம் இறந்ததும் தாமதமின்றி அடக்கஞ் செய்யப்படவேண்டும். தடுக்கமுடியாத காரணமிருந்தாலொழிய, உடம்பைச் சீர்குலைப்பது இஸ்லாத்தில் அனுமதிக்கப்படவில்லை.

பிறப்பு, திருமணம், இறப்பு போன்றவை மனித வாழ்க்கையில் ஏற்படும் சில முக்கிய சம்பவங்களாகும். இவை உலக முஸ்லிம்களால் சடங்குகளாகக் கொள்ளப்படுகின்றன. இச்சடங்குகள் யாவும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறையிலிருந்து பெறப்படுகின்றன. இவ் வழக்கங்கள், சடங்குகள் என்பவற்றில் மிக முக்கிய அம்சமாகக் கொள்ளக் கூடியது அவற்றின் எளிமையாகும்.

மரபுகள், வழக்கங்கள், சடங்குகள் சம்பிரதாயங்கள் என்பன காரணகாரியத் தொடர்புள்ளனவாகவும், இயற்கையோடியைந்தவையாகவும் உள்ளன. இதில் அடங்கியுள்ள இன்னொரு சிறப்பியல்பு யாதெனில் பொதுசனத் தொடர்பாகும். அதாவது ஒரு காரியம் மகிழ்ச்சியானதாயினும், துக்கமானதாயினும் அதில் பரஸ்பரம் சகோதரத் தன்மையுடன் கலந்து கொள்வதாகும். மூன்றாவதாகக் காணப்படும் அம்சம் தர்மம் என்பதாகும். வறியவர்களுக்கும், தேவையானவர்களுக்கும் உணவு, உடை, பணம் என்பனவற்றை வழங்கி அவர்கள் கஷ்டமின்றி வாழ இம்மரபுகள், வழக்கங்கள் என்பன உதவுகின்றன.

## (ஈ) கிறிஸ்தவ சமயப் பழக்கவழக்கங்கள்

மற்றெல்லா மனித குழுக்களுக்கும் உள்ளது போல் கிறிஸ்தவர்களுககும் தமது கிறிஸ்தவ நம்பிக்கையைக் கருத்துள்ளதாக்கச் சில குறிப்பிடத்தக்க பழக்கங்களும் வழக்கங்களும் உள்ளன. ஆனால் இவை வாழ்வில் வெளிப்பார்வைக்கான அலங்காரங்களாக மட்டும் அமையமாட்டா. இப் பழக்க வழக்கங்களும் கிரியைகளும் வாழ்வுக்கு ஆழ்ந்த கருத்தையளிப்பன.

வாழ்க்கையின் பல்வேறு சந்தர்ப்பங்களுடன் தொடர்புள்ள கிறிஸ்தவப் பழக்கங்களும் ஆசாரங்களும் பலவுள. அவற்றுள் அதி முக்கியமானவை கிறிஸ்தவனொருவனின் பிறப்பு, விவாகம், இறப்பு ஆகியவற்றுடன் தொடர்புள்ளவை. அவற்றுள் சிலவற்றை நாம் சுருக்கமாக ஆராய்வோம்.

### பிறப்பு

பிறப்பு இயற்கையாக நடப்பதொன்று. இது மனித சமூகத்திற்குள் இடம்பெறும் ஆரம்ப நிலையாகும். மனித

வாழ்வு மதிப்புள்ளது. நாம் கடவுளின் பிள்ளைகள் என்ற படியால் இவ்வாழ்வு தனித்துவம் பெறும் ஒரு குடும்பத்தின் அங்கத்தவராக எம்மை மாற்றும். இவ்வுறவுமுறை உன்னதமான ஒரு பேறாகும். கடவுளின் மக்களாலான சமூகத்தைச் சேர விரும்புபவன் வெளிச் சடங்கான ஞானஸ்நானத்தைப் பெற வேண்டும். ஞானஸ்நானத்தில் அவன் தீமையை உதறித்தள்ளி, நல்லதை ஏற்றுத் தான் தெரியும் தொழிலில் விசுவாசமுள்ளவனாயிருப்பானென வாக்குத் தத்தம் செய்வான்.

ஞானஸ்நானத்தைப் பெறுபவனின் தலைமீது நீர் ஊற்றப்படும். இது தூய்மையையும் சுத்திகரிப்பையும் குறிக்கும். நீரானது உயிர் வாழ்வின் சின்னமாகும். அது தன்னைத் தான் தூய்மையாக்குவது போல மற்றவரையும் தூய்மையாக்கும். நீரால் இவ்வண்ணம் தூய்மையாக்கப்படுதல். உள்ளூர மனிதனில் உள்ள பாவத் தன்மையைச் சுத்திகரித்து, தெய்வீக வாழ்வைப் புதிதாகப் பெறுவதை விளக்கும். பாலிய ஞானஸ்நானத்தில் பிள்ளையின் வளர்ச்சிக்கு ஒரு கிறிஸ்தவ சூழ்நிலையை விருத்தியாக்கும் பொறுப்பைப் பெற்றோரும் ஞானப்பெற்றோரும் ஏற்றுக்கொள்வர்.

சில கிறிஸ்தவ உட்பிரிவுகளில் ஞானஸ்நானக் கிரியைகளில் ஞானஸ்நானம் பெறுபவர் பரிசுத்த (புனித) எண்ணெயினால் அபிஷேகம் செய்யப்படுவார். எண்ணெய் பலத்தின் சின்னமாகும். எனவே இவ்வபிஷேகம். வாழ்க்கை என்னும் போராட்டத்திற்கு அவசியமான பலப்படுத்துதலைக் குறிக்கும். சில கிறிஸ்தவர் எரியும் மெழுகுவர்த்தியொன்றினை இச்சம்பவத்தின் போது தம் கையில் பிடித்திருப்பர். ஒருவர் தமது வாழ்வினால் மற்றவர்களுடைய வாழ்வுக்கு உதவியையும் சந்தோஷத்தையும் அளிப்பதே இதன் கருத்தாகும்.

ஒரு கிறிஸ்தவன் தனது வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் கிறிஸ்துவின் ஒரு புது மனிதனாக வாழ்வதற்கு மீண்டும் மீண்டும் பிறப்பதையே ஞானஸ்நானம் நினவூட்டுகிறது. ஞானஸ்நானச் சடங்கின்போது அதனைப் பெறுபவனுக்கு ஒரு பெயரளிக்கப்படும். இப்பெயருக்குப் பெரும்பாலும் ஒரு ஆத்மீகக் கருத்து உண்டு. என்வே ஞானஸ்நானத்தைப் பிள்ளைக்குப் பெயர்சூட்டும் விழாவாகக் கொள்ளலாம்.

சமூகத்தின் அடிப்படை உறுப்பு குடும்பம். அதைச் சார்ந்தே மனித சமுதாயம் எழுந்துள்ளது. ஒரு குடும்பத்தி லுள்ள நல்லவையோ, தீயவையோ சமுதாயத்தைப் பாதிக்கக் கூடியன. கிறிஸ்தவத் திருமணமானது விவாகப் பிணைப்பை மேன்மையாகப் புனிதமாக்கும். திருமணத்துடன் தொடர் பான கிரியைகள் பரிசுத்தத்தைக் குறிப்பன. கடவுளுடைய மக்களின் ஒரு அங்கமாகக் கிறிஸ்தவ குடும்பம் விளங்கும். எனவே, ஒரு கிறிஸ்தவத் திருமணம் ஒரு ஆலயத்தில் குருவி னதும் கடவுளுடைய மக்களாகிய கிறிஸ்தவ சமுதாயத்தின் முன்னிலையிலும் தெய்வீக ஆராதனை வடிவத்தில் நடைபெறும்.

குடும்ப வாழ்க்கையையும் பிள்ளைகளின் முன்னேற்றத்தை யும் உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட கிறிஸ் தவத் திருமணம் சிதைக்க முடியாத பிணைப்பொன்றாகக் கரு தப்படுகின்றது. என்வே, விவாகரத்துக்கு அவ்வளவு இட மளிக்கப்படுவதில்லை. சாதாரண பழக்கவழக்கங்களை விட கிறிஸ்தவ விவாகத்திற்கு அதிக கருத்துண்டு. இப்புனித பிணைப்புடன், திருமண மோதிரம் தொடர்புடையது. சிதை வில்லாத தொடர்ச்சியின் சின்னமாக இது விளங்குகின்றது. சில மணப்பெண்கள் முக்காடிடுவர். இது ஒரு பண்டைய எபிரேயப் பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பின் பற்றப்படுகின்றது. பண்டை இஸ்ரவேலில் மணப்பெண் முகத்தை இவ்வாறு முக்காட்டினால் மூடுவது வழக்கம். நெருங்கிய உறவினரிடையே திருமணங்கள் நிகழ்வதற்குக் கிறிஸ்தவர் ஊக்கம் கொடுப்பதில்லை. ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கு இடமளிக்காத வழக்கம் இது. மேலும் (மன) உளவிருத்தியையும் இது தடை செய்யும்.

## இறப்பு

புவியில் மனிதன் நிறைவேறாத ஒரு நம்பிக்கையுடன் வாழ்கின்றான். எமது வாழ்வின் முடிவாக இறப்பு அமை யாது. ஒரு கிறிஸ்தவனுக்கு மரணம் நம்பிக்கையின் முடி வாகாது. ஆனால் அது அவனது ஆத்மீக வாழ்வின் ஆரம்ப மாகும். அவனுக்கு கிறிஸ்துவின் மரணம் தன்னுடைய மர ணத்துக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கும். சாவில்லாத ஒரு வாழ்விற்கு ஆரம்பமாகக் கிறிஸ்துவின் மரணம் அமைந்தது. மரணத்திற்குப் பின் ஒரு கிறிஸ்தவனுக்கு மேன்மையாக்கப் பட்ட உடலை. முடிவுறாத ஒரு வாழ்வுடன் இணைக்கும்

நம்பிக்கையுண்டு. கிறிஸ்து தன் மரணத்திற்குப் பின்னர் ஒரு மேன்மையாக்கப்பட்ட உடலைப் பெற்றார். எனவே, கிறிஸ்தவ மரணச் சடங்குகள் பெரும்பாலும் இதற்குப் பின்னருள்ள பரிபூரணமான வாழ்வைக் குறிப்பவையாக அமையும்.

கிறிஸ்தவர் இறந்த சடலத்திற்கு மதிப்புக் கொடுப்பர். எனவே, அடக்கம் பண்ணும் இடங்களையும் மதிப்பர். (இடு காடு) நகரத்தில் உள்ள ஆவிகளுக்காக உரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர் உதவிபுரிவர். கிறிஸ்தவ அழைப்புக்கிணங்கச் செயற்படாமல் இறந்தவர்கள் தமது வாழ்நாளில் செய்து கொள்ள முடியாதவற்றை இவர்கள் செய்ய முயல்வர். செபங்கள் செலுத்தப்பட்டு, ஆராதனைகள் நடத்தி, தானங்கள் வழங்கப்படும். இவை மூலம் பெறும் ஆசீர்வாதங்கள் பரிசுத்தவான்களின் ஐக்கியம் இறந்தவருக்குப் பயன்தருமாறு விளங்கும்.

கிறிஸ்தவ சமுதாயம் வருடத்தில் ஒரு நாளை இறந்தவரின் நினைவுக்காக ஒதுக்கும். அது நொவெம்பர் 2 ஆந் திகதியாகும். இந்நாளில் கிறிஸ்தவர் இறந்தவரின், நினைவுக்காக ஆராதனைகள் நடத்துவதைக் காணலாம். உயிருடனிருக்கும் போது பெருமளவு நற் செயல்களைப் புரிந்தவர்களுக்கு வாழ்வு கொடுத்த கடவுளுக்கு நன்றி செலுத்தும் மனப்பான்மையுடன் இவ்வாராதனை அமையும். உயிர் வாழ்வு கடவுளிடமிருந்து வரும். எனவே, ஒரு கிறிஸ்தவன் இறக்கும்போது அவனது உறவினரும் நண்பரும் இறப்பவனின் வாழ்வு உயிருக்குக் காரணகர்த்தாவாகிய கடவுளிடம் அர்ப்பணிப்பர். ''சகல ஆவிகளது திருநாள்' என்றழைக்கப்படும் நொவெம்பர் இரண்டாம் திகதியன்று இறந்தவருக்கு நித்திய மகிமையை அருளும்படி கிறிஸ்தவர்கள் கடவுளிடம் ஜெபிப்பர்.

1942
1269 / 79

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நலன்கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படிக்க.

பாடசாலை: Jaffna hindu ladies College

| | மாணவர் பெயர் | ஆண்டு | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1996 | V. NANTHINI | 9A | Mrs K. Balaskanda |
| 1997 | | | |
| 1998 | | | |
| 1999 | | | |
| 2000 | | | |
| 2001 | | | |

හින්දු ධර්මය 9 (දෙ)